கல்கி

KALKI 25-10-81 ரூ 1 20



JOHNSON®

மிக்ஸர் கிரைண்டர்

புதிதாக மாற்றியமைக்கப்பட்டதால் மேன்மையாக இயங்குகிறது: விரைவாகவே குளிர்ச்சியடைகிறது.

தீவிர ஆராய்ச்சி மற்றும் கடும் உழைப்பின் விளைவாக ஜான்ஸன் அளிக்கும் புதிய, மேன் படுத்தப்பட்ட மிக்சர்-கிரைண்டர் எல்லா வேலைகளையும் சிறப்பின் சிகரமாகச் செய்கிறது.



கிளர்ச்சியூட்டும் புது அம்சங்கள் பாரீர்!

முழுமையான செயலாற்றலுக்காக தனிச்சிறப்பு வாய்ந்த பிளேடுகள்



இரு கிண்ணங்களிலும் அமைக்கப்பட்ட புதிய பிளேடுகள் மேலும், கீழும் மற்றும் சுழன்றும் இயங்குவதால் முழுமை யான செயலாற்றல் கிடைக்கிறது. கட்டிகளோ, தானியங்களோ இருக்க வாய்ப்பில்லை.

மேல்பாகத்தில் இடைவெளி இருப்பதால் துரித குளிர்ச்சி



சூடான காற்று துரித மாக மேலபாக இடை வெளியிலிருந்து வெளி யேறுவதால் மோட்டார் சூடாகாமல் 45 நிமிடங்கள் தடை யின்றி இயங்க முடிகிறது. சாதாரணமாக மோட்டார் எரிந்து விடும் அபாயமில்லை.

புதிய கலவை கிண்ணம் தாராள மான காற்றோட்டத்திற்கென.




கலவைகிண்ணத்தின் வளைந்த உட்பாகம் பிளேட் இயங்குவதற்கு வாகாக அமைக்கப்பட் டிருக்கிறது. சீரான கலவை கிடைப்பதோடு சரியான அளவுதான் இதில் அடங்கும்.

எவர்சில்வர் கிண்ணத்தில் சீரியமுறையில் அமைக்கப்பட்ட கைப்பிடி



சீரிய முறையில் அமைக்கப் பட்ட கைப்பிடி எவர்சில்வர் கிண்ணத்தைக் கையாள எளிதாகவும், சௌகரிய மாகவும் இருக்கிறது.

சுகாதாரத்திற்கென இரு கிண்ணங்கள்; பாதுகாப்புக் கென இரு பிளேடுகள்



இரு தனி கிண்ணங் கள் இருப்பதால் கலவை செய்தவுடன் கழுவும் தொல்லை யில்லை. வேறு கிண்ணத்தில் அரைக்கலாம். சிரமம் குறைவு. மில்க் ஷேக்கு களில் மசாலா மணம் கலப்பதில்லை. உறுதியாக இணைக்கப்பட்ட பிளேடு கள் முழுமையாக பாதுகாப்பு அளிக்கின்றன. இயங்கும்போது பிளேடுகள் பறந்து செல்லும் அபாயமில்லை.

ஜான்ஸன் மிக்ஸர் கிரைண்டரின் முதன்மையான சிறப்பு அம்சங் களும் இதிலே உள்ளன.

- துப்புரவாகச் சுத்தம் செய்ய எளி தாகக் கழற்றக்கூடிய பாகங்கள்
- செம்மையாக வேகத்தை மாற்ற மேன்மையான இஞ்சர் விசை.
- ஒரு வருட உத்திரவாதம் மற்றும் சிறப்பான பின் விற்பனை பணி.

JOHNSON® ஆற்றலிலும், இயக்கத்திலும் இணையிலாச் சிறப்பு கொண்டது.

Parade/BE/8122

அருள்வாக்கு

வையகம் வாழவேண்டுவோம்

ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்
காஞ்சி காமகோடிபீடம்



குழந்தைகள் கோவிலுக்குச் செல்லும் பொழுது பகவானிடம் நான் நன்றாகப் படிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளும். இளைஞர்கள் நல்ல உத்தியோகம் வேண்டும் என்று பிரார்த்தனை செய்துகொள்வார்கள். வியாபாரிகள் தங்கள் தொழிலில் நல்ல லாபம் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வார்கள். இப்படி ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குள்ள பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறார்களே தவிர, எங்கள் குடும்பம், எங்கள் நகரம் — எங்கள் நாடு — எங்கள் மதம் இவை சௌகரியமாக இருக்க வேண்டும் என்று யாரும் பிரார்த்தனை செய்துகொள்வதில்லை.

நாடு முழுவதிலுமுள்ள எல்லா ஜீவராசிகளும் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்று நரகாசுரனும் அவனுடைய தாயாரும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்வாவிடம் பிரார்த்தனை செய்துகொண்ட தினம் தீபாவளி தினமாகும். இந்து மதமும் இதையேதான் வலியுறுத்துகிறது. அதாவது ''சர்வே பவந்து சுகினஹ— லோகா சமஸ்தா சுகினோ பவந்து'' வையகமும் துயர் தீர்க்கவே என்றுதான் பிரார்த்தனை.

தற்கால சூழ்நிலையில் இப்படிப் பிரார்த்தனை செய்வது குறைந்து விட்டதனால்தான் நாட்டில் தனிமனிதப் பிரச்னையும் தீரவில்லை— சமுதாய — தேசப் பிரச்னையும் தீரவில்லை. தனிமனிதனின் பிரார்த்தனை, சமுதாய — தேச — மத — சம்பந்தப்பட்ட எல்லோரும் சௌக்கியமாக இருக்க வேண்டும் என்று அமைய வேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பகவத்கீதை உபதேசத்திலும் மகாபாரத யுத்தத்திலும் இந்தப் பரந்த நோக்கத்தைத்தான் காண முடியும். பிரார்த்தனை தனி மனிதன் செய்தாலும் அதில் அகங்காரம் மமகாரம் இருக்கக் கூடாது. உதாரணமாக முதலில் திரௌபதி ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப் பிரார்த்தித்தபோது கிருஷ்ண பரமாத்மா வரவில்லை. பின்னர் அகங்காரம், மமகாரம் அற்றுப் பிரார்த்தித்தபோது கிருஷ்ணன் ஓடி வந்தார்.

ஆகவே, ஒவ்வொரு மனிதனும் கிருஷ்ண பரமாத்மாவினால் அனுக்கிரகிக்கப்பட்ட இந்தத் தீபாவளி நன்னாளில் தங்களுடைய குறைகள் தீரப் பிரார்த்தனை செய்வதோடு கூட, லோகம் முழுவதும் நன்றாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனை முறையை அறிந்துகொண்டு அதன்படி பிரார்த்தனை செய்ய வேண்டும்.





● கருணாநிதியோடு எவ்வளவோ கருத்து வேற்றுமை இருந்தும் கருணாநிதி மீது பற்றும் பாசமும் உள்ள தொண்டர்களின் உணர்ச்சிகளை விரிவாக விளக்கியிருப்பதையும் 'இரண்டு மணி நேரத்தில் முடிவை மாற்றிக் கொண்ட தமிழக அரசு தி.மு.க.வின் ஏளனப் பார்வைக்கு உள்ளாகியிருக்கிறது' என்று குறிப்பிட்டிருப்பதையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

தூத்துக்குடி — இரணியல் கலை

● போட்ட சட்டையின் மடிப்புக் கலையாமல் சிறைவாசம்(?) இருந்து வரும் ஒரு தலைவருக்காக அறிவிழந்து, மூட நம்பிக்கை கொண்டு தீக்குளித்து மாளும் தொண்டர்களின் குடும்பங்களைக் காக்கும் நோக்குடன் மேலும் அத்தகைய விளைவுகள் ஏற்படாத வகையில் உயர்ந்த எண்ணத்துடன் செயல்பட்ட அரசை 'ஏளனப் பார்வை' எந்த வகையிலும் பாதிக்காது.

மதுரை-16 — ஆர்.வி. பிரசாத்



● முதல் பக்கத்திலேயே கலைஞர் விடுதலை குறித்துக் கட்டுரை பிரசுரித்த அதே இதழில் 'தீக்குளிப்பு — ஒரு தீர்ப்பு' கட்டுரையும் வெளியிட்டு கலைஞர் கைது செய்யப்பட்டதை யொட்டி நிகழ்ந்த தீக்குளிப்புக்களில் தூய்மை இல்லை என டாக்டர் சக்திவேல் தெரிவித்துள்ள கருத்துக்களைப் பிரசுரித்திருக்கிறீர்கள். பிழைக்கத் தெரிந்த மனிதர் ஐயா நீங்கள்!

அரகண்டநல்லூர் — கே. பிரதாப்சிங்

● தீக்குளிப்பது என்பது 'ஷவர்பாத்' என்ற நினைப்பா உங்களுக்கு? கலைஞர் மீது சிறு துரும்புகூடப் படுவதை விரும்பாத அன்புள்ளம் கொண்டவர்கள் தீக்குளிப்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள். அவர் மீது குற்றமே காணும் உம்போன்றவர்களால் அந்த அன்புச் செயலைப் புரிந்துகொள்ள முடியாது.

மதுரை — நாகு வேலன்

● பஞ்சாபில் ஒரு மத்திய அமைச்சரும் மாநில முதல்வரும் தங்களின் சொந்தப் பகைக்குப் பகடைக் காயாக அப்பாவி மக்களை உருட்டுவது எத்தனை பெரிய செயல்! யாரங்கே! இதைப் பெரிதாகப் பொன்னேட்டில் பொறியுங்கள்!'' எனது ஆட்சியில் 'அமைதியைத் தவிர வேறு எதுவும் இல்லை'' எனும் பிரதமரின் பெயரைச் சற்றுப் பெரிதாகவே பொறியுங்கள்!

பெருங்களத்தூர் — எல். ரவிசங்கர்

● 'வெளி வராத புத்தகங்கள்' பற்றிய விமரிசனம்தானே... அதனால் வைக்கப்பட்டிருக்கும் விலை எத்தனைக்கெத்தனை அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இன்டல் அதிகம் என்பது வெளிப்படை. ஆகவே, 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' புத்தகத்துக்கு இருப்பதிலேயே குறைவான விலையை வைத்திருப்பதால் அமைச்சரின் இறையுணர்வை வாழ்த்தி வரவேற்கவே செய்திருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொண்டேன், நன்றி. (இதனை வெளிவராத கடிதமாகச் செய்து விடாதீர்கள்.)

நந்தனம் — சி. பூபால் சிங்

● பாலசந்திரா டைரக்‌ஷனில் 'மீடி மீடி பாதேன்' என்ற படம் வரவில்லை என்கிறார் கடுகு. ஆனால் 'மன்மதலீலை' தான் 'மீட்டி மீட்டிபாதேன்' என்ற பெயரில் 'டப்' செய்யப்பட்டுள்ளது. சி.வி. ராஜேந்திரன் டைரக்ட் செய்த கமல் — ரதி நடித்த இந்தி 'உல்லாசப் பறவைகள்' 'தோ தில் திவானே' என்ற பெயரில் வந்துள்ளது.

கல்கத்தா — வெ. பாலசந்திரன்

● 'இதோ ஒரு அதிசய மனிதர்' தலையங்கம் படித்த கையோடு வின்ஸ்டன் ஜி. திருபாகரனின் 'ஆமென்' சிறுகதை படித்தேன். சட்டர்ஜி, எட்வர்ட் போன்ற உண்மைக்குப் பாடுபடும் அதிகாரிகள் இன்றைய நிலையில் சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயம் போலத்தான் இருக்கிறார்கள். அசடு, கையாலாகாதவன் எனக் கருதப்பட்டாலும் உண்மைக்கு அழிவில்லை என்ற தத்துவத்தை உலகுக்கு உணர்த்திக்கொண்டு ஜொலித்து வருகிறார்கள்.

பம்மல் — வி.ச. வாசுதேவன்


● எஸ். பத்மாவதி எழுதியுள்ள கதைகளை ஒன்றுகூடப் படித்திராத நான் இளம் தலைமுறையினனான நான் அவருடைய ஷேவோ ஷேவிங் சிறுகதையைப் படித்ததும் அவருடைய எழுத்தாற்றலைக் கண்டு வியந்தேன்! அவர் மறைவு எழுத்துலகுக்கு எப்பேர்ப்பட்ட பேரிழப்பு என உணர்ந்தேன்.

தஞ்சை — அசோக்ராஜா

● ''கூண்டுக்குள்ளே சில சட்டங்கள்'' சிறுகதை சிரிய சிந்தனை படைத்த அனைவர் கவனத்தையும் கவரும். கிருஷ்ண குருவின் இந்தக் கதை என் மனத்தை நெகிழச் செய்து விட்டது. சமுதாய நலன் கருதி அவர் இது போன்ற இன்னும் பல கதைகள் எழுத ஊக்கமளியுங்கள்.

கல்கத்தா — லீலாசந்திரன்

பிரகாசித்த பிரகாஷ்



○ விவேக் கைத்தான்

[தமிழக ஸ்டேட் பாட்மிண்டன் கழகத்தின் காரியதரிசியாகப் பொறுப்பேற்றிருக்கும் இளைஞர் விவேக் கைத்தான். பிரகாஷோடு நெருங்கிப் பழகியவர். பி.டெக். கெமிகல் இன்ஜினியர். தொழிலதிபர். தமிழக ஸ்டேட் பாட்மிண்டன் வளர்ச்சியில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருப்பவர். அவரது அபிப்பிராயங்களைக் கேள்வி - பதில் வடிவில் திரட்டித் தருபவர்: குண்டுமணி]

1. Padukone உச்சரிப்பு என்ன?

படுகோனே. இது அவர்கள் குடும்பப் பெயர்!

2. படுகோனே டென்மார்க்கில் போய்ப் பயிற்சி பெற்றிருக்கிறார். அவர் அங்கு போய்ப் பயிற்சி பெற வேண்டிய அவசியமென்ன? இங்கு வசதி இல்லையா? இதற்கு யார் செலவழிக்கிறார்கள்?

படுகோனே விளையாட்டின் தரத்துக்குள்ள ஆட்டக்காரர்கள் இந்தியாவில் இல்லை. இந்தியாவில் படுகோனே யூனியன் பாங்கில் வேலை செய்து கொண்டே பயிற்சியையும் பெறுவது உடலை மட்டுமின்றி உள்ளத்தையும் ரொம்ப வருத்துவதாக இருக்கும். ஆகவே, Akai & Yonex Sponsorship பெற்று டென்மார்க்கில் உள்ள கிளப்போடு இரண்டு வருஷங்கள் காண்ட்ராக்ட் செய்து கொண்டார்! யூனியன் பாங்க் படுகோனேக்கு லீவு வசதி தந்து உதவியிருக்கிறது! டென்மார்க்கில் படுகோனே பயிற்சியிலே முழு கவனத்தைச் செலுத்தமுடிந்தது! அந்தப் பயிற்சியின் பலன்தான் அவருக்கு இன்று உலகக் கோப்பையைப் பெற்றுத் தந்துள்ளது.

3. அயல்நாட்டில் பயிற்சி பெற்ற பிறகு உலக சாம்பியன் பதவியை அடைவதில் இந்தியாவுக்கு என்ன பெருமை? இதை இந்தியாவின் வெற்றி என்பதை விட டென்மார்க்கின் வெற்றி என்றால் என்ன பதில் கூறுவீர்கள்?

சென்ற சீஸனில் அந்நிய நாட்டுப் பயிற்சி இல்லாதபோது படுகோனேக்குத் தோல்விகள்

தான் அதிகம். வெளி நாட்டுப் பயிற்சியினால் உலக வெற்றி கிடைப்பது தோல்வியை விட மேலல்லவா? இந்தியாவுக்கு அதனால் பெருமையின் அளவு குறையத்தான் செய்கிறது. அவருக்கு இந்தியாவிலேயே Sponsorship உதவி கிடைத்திருந்தால் அவர் இந்த உலக வெற்றியை முழுக்க முழுக்க இந்தியாவின் வெற்றியாகச் செய்திருக்கலாம். இங்கே கிரிக்கெட், டென்னிஸுக்கு இருக்கும் ஆதரவு மற்ற பல விளையாட்டுக்களுக்கு இல்லையே? டென்மார்க்கில் பெற்ற பயிற்சிக்குக் கிடைத்த வெற்றியானாலும் நம் இந்திய மண்ணில் பிறந்த விளையாட்டு மேதைக்குக் கிடைத்த வெற்றி என்று எண்ணிப் பெருமைப்படலாமே!

4. கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால் குண்டுராவ் பாராட்டியதாகச் செய்திகள் வந்தன. ஆனால் வேறு எந்த மாநில முதல்வரோ அல்லது மத்திய அரசோ பாராட்டியதாகத் தெரியவில்லையே, இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? பாட்மிண்டனுக்கு அவ்வளவுதான் மவுசா? இதுவே டென்னிஸ் கிரிக்கெட் என்றால் அமர்க்களப்படாதா?

கர்நாடக முதல்வர் பாராட்டினதோடு நிற்கவில்லை! ஜெயநகரில் ஒரு மனைக்கட்டும் வழங்கியிருக்கிறார். தமிழக முதல்வரும் பாராட்டியிருப்பது உங்கள் கண்ணில் படவில்லையா? கிரிக்கெட், டென்னிஸ் வேகத்தில் ஷட்டில் பாட்மிண்டன் பிரபலமடையவில்லை தான். ஒவ்வொரு விளையாட்டுக்குமே இது போன்ற வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்கின்றன. கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் ஏழு நட்சத்திர ஹோட்டலில் தங்குகிறார்கள்; டென்னிஸ் ஆட்டக்காரர்கள் ஐந்துநட்சத்திர ஹோட்டலுக்குப் போகிறார்கள். ஹாக்கி ஆட்டக்காரர்கள் 'டார்மெட்ரி'யில் வாசம் செய்கிறார்கள்! 'மவுசு' நட்சத்திர ஹோட்டல்களில்தான் என்றால் எல்லா விளையாட்டுக்களுக்கும் மக்களுடைய ஆதரவு ஒரே மாதிரி கிடைக்கும் நாளில்தான் இந்த வித்தியாசங்கள் மறையும்!

5. பாட்மிண்டனில் உலக சாம்பியன்கள் சீனர்கள் என்று இதுவரை கூறப்பட்டு வந்தது! அவர்கள் இப்படித் தேர்ச்சி பெற விசேஷ காரணம் எதுவும் உண்டா?

சீன ஆட்டம் உலக அரங்கில் 'Expose' ஆவது குறைச்சல். அதுவே அவர்களை உச்சாணிக் கிளையில் அமர வைத்திருக்கிறது! உதாரணம்: ஹைதராபாத்தில் ஆசிய ஷட்டில் பாட்மிண்டன் போட்டியில் 35 வயதுள்ள சீன ஆட்டக்காரர் இந்தோனேசிய சாம்பியன் லியிம் ஸ்வே கிங்கைத் தோற்கடித்து விட்டார்! சீன ஆட்டக்காரர்கள் கலை நுணுக்கத்தில் கவனம் செலுத்துகிறவர்கள். இந்தோனேசிய ஆட்டக்காரர்கள் வேகம், சக்தி ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறவர்கள். இவர்கள் எளிதில் களைத்துப் போக மாட்டார்கள். ஹைதராபாத்தில் சீன ஆட்டக்காரர்களை விட சீன காமிராமேன்கள் அதிகம் தென்பட்டார்கள். ஒவ்வொரு அயல் தேச ஆட்டக்காரரது ஆட்ட நுணுக்கங்களையும் 'படம்' பிடித்து எடுத்துச் சென்று அவற்றை வெல்வதற்கான வழி முறைகளை விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து மேம்படுவதில் சீன விளையாட்டுக்காரர்கள் கவனம் செலுத்துகிறார்கள். சீனவிளையாட்டு அதிகமாக 'Expose' ஆனால் மற்ற தேச ஆட்டக்காரர்கள் அதனை வெல்ல உபாயங்கள் தேட முடியும் என்பதற்கு இப்போது கோலாலம்பூரில் படுகோனேக்குக் கிடைத்த வெற்றியே சான்று.

6. பாட்மிண்டன் எங்கே தோன்றியது? எந்த நாட்டில் யாரால் வளர்க்கப்பட்டது?

ஷட்டில், பூப்பந்து இரண்டின் தாயகம் இங்கிலாந்து! இங்கிலாந்திலுள்ள 'பாட்மிண்ட'ன்தான் அவை பிறந்த ஊர்!

7. ஆசிய விளையாட்டுக்களிலும் ஒலிம்பிக்கிலும் பாட்மிண்டன் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இல்லையா? ஏன்? படுகோனே ஒலிம்பிக்கில் பங்கேற்றதாய்த் தெரியவில்லையே?

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஷட்டில் பாட்மிண்டன் போட்டி உண்டு. ஒலிம்பிக்கில் எக்ஸிபிஷன் பந்தயங்கள் தான் நடைபெற்றன. ஆகவே பிரகாஷ் படுகோனே கலந்துகொள்ளவில்லை. அடுத்த ஒலிம்பிக்கில் ஷட்டில் பாட்மிண்டனையும் ஒரு போட்டியாகச் சேர்த்துக் கொள்ள இருக்கிறார்கள். அப்பொழுது அவர் கலந்து கொண்டு பரிமளிக்க முடியும்!

8. பாட்மிண்டன் பெண்கள் விளையாட்டு என்று கருதப்படுவது எவ்வளவு தூரம் சரி?

ஒரு காலத்தில் ஷட்டில் பாட்மிண்டன் பூப்பந்து ஆட்டங்கள் பெண்கள் விளையாட்டு என்று சொல்லப்பட்டு வந்தது உண்மைதான். ஆனால் இன்று ஷட்டில்-பாட்மிண்டனில் Power Stamina நுணுக்க ஆட்டத் திறன்கள் ஆகியவை பெருகி, ஆண்களுக்கே கூடச் சிரமமான ஆட்டமாய் விளங்குகிறது. மேலும் இப்போது பெண்களே கிரிக்கெட் ஆட ஆரம்பித்து விட்டனரே!

9. பாட்மிண்டனில் கிரிக்கெட் அல்லது டென்னிஸில் உள்ளது போன்று பெரும் தொகை கிடைக்குமா? உலகக் கோப்பை வெற்றி எவ்வளவு பணம் பெற்றுத் தரும்?

கிரிக்கெட், டென்னிஸ் போன்று ஷட்டில் பாட்மிண்டனில் பெரிய அளவில் பரிசுத் தொகை கிடைக்க வாய்ப்பில்லை. கோலாலம்பூர் உலகப் போட்டியில் பிரகாஷுக்குக் கிடைத்த தொகை 6000 டாலர்தான்!

10. ஷட்டில் காக்குக்கும் பாட்மிண்டனுக்கும் பந்து தவிர வேறு என்ன வித்தியாசம்?

ஷட்டிலும் பாட்மிண்டனும் இரட்டைக் குழந்தைகள் அல்ல! மைதான அளவில் வித்தியாசம், ஸ்கோர் வித்தியாசம் என்று பல மாறுதல்கள் உள்ளன. பூப்பந்து அவுட்டோர் கேம்! ஷட்டில் இண்டோர் கேம்!

11. படுகோனேயின் காதல். கல்யாணம் பற்றி....?

பிரகாஷின் முதல் காதலி ஷட்டில் பாட்மிண்டன்! பிரகாஷின் அடுத்த காதலி உஜ்ஜலா! உஜ்ஜலாவுக்கு ஷட்டில் பாட்மிண்டன் தெரியாது. ஆனால் இப்போது அதன் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு வருகிறார். இருவருக்கும் 'நிச்சயதார்த்தம்' ஆகியிருக்கிறது. விரைவில் அவர்களது திருமணம் நடைபெறுமென எதிர்பார்க்கிறேன்!

12. கோலாலம்பூரில் நடந்த இந்த உலகக் கோப்பைப் பந்தயத்தை நிர்வகிப்



× கலைஞர் - இந்திரா கூட்டணி முறியும்?

கலைஞரின் கதி என்ன?

திருப்பத்தூர் தேர்தலின் போது இந்திரா காங்கிரஸ் தி.மு.க.வுடன் கூட்டணியில் தொடர்ந்துஇருக்குமா அல்லது அதை வெட்டி விட்டு அ.தி.மு.க.வுடன் உறவு கொள்ளுமா என்று பரபரப்புடன் பேசப்பட்டு வரும் சூழ்நிலையில் கிருஷ்ணகிரியில் இந்திரா காங்கிரஸ் செயற்குழு கூடியது. விசேஷ அழைப்பாளராக மூப்பனார் அழைக்கப்பட்டிருந்த போதும் அவர் கலந்து கொள்ளவில்லை. (இரண்டு நாட்கள் கழித்துச் சென்னை வந்தார்மூப்பனார்) அவருடைய ஆதரவாளர்களான இண்டிவனம் ·ர்ராமமூர்த்தி, தங்கபாலு, மாரிமுத்து போன்றவர்கள் கலந்து கொண்டனர். எம்.பி. சுப்பிரமணியத்தின் ஆதரவாளர்கள், ஆர். எஸ். பாண்டியன், ஹாஜா ஷெரீப் போன்றவர்கள் தி.மு.க.வைக் கடுமையாக விமர்சனம் செய்தார்களாம். காங்கிரஸைக் கலந்தாலோசிக்காமல்பலமுக்கியமானபிரச்னைகளில் போராட்டங்களில் ஈடுபட்ட தி.மு.க.வை ஏன் கூட்டணியில் வைத்திருக்கவேண்டும் என்று கேட்டார்களாம். இதற்குப் பதிலாக பேசிய மூப்பனார் ஆதரவாளர்கள், அ.தி.மு.க. அரசின் குறைகளை எடுத்துச் சொல்லி அவர்களாகவே ஆதரவு கொடுத்தாலும் அதை நிராகரித்து விட வேண்டும் என்று பேசினார்களாம். இரண்டு கோஷ்டிகளுக்கும் நடுநிலையாளர்கள் சிலர் தி.மு.க. அ.தி.மு.க.வுடன் கூட்டு இருந்தால்தான் தேர்தல் வேலைகளை முறையாகச் செய்ய முடியும் என்றும், பிரசாரம் செய்யப்போதுமான அளவு கிராமங்களில் தொண்டர்கள் காங்கிரஸுக்கு இல்லாததை நினைத்துப் பார்க்க வேண்டும் என்றும் கூறினார்களாம். கருணாநிதி கைதானபோது விடுதலை செய்யக் கோரி அறிக்கை விடுத்த சிவாஜி கணேசன் ரசிகர் மன்றத் தலைவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டாராம். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த எம்.பி.எஸ்ஸும் ஆர். வி. சுவாமிநாதனும் எந்த முடிவும் எடுக்காமல், பிரதமரைக் கலந்தாலோசிப்பதாகக் கூறிக் கூட்டத்தை முடித்திருக்கிறார்கள்.

மூப்பனார் ஆதரவாளர்களுக்கு மேலிடத்தில் உள்ள செல்வாக்கு காரணமாக தி.மு.க வுடன்தான் கூட்டணி தொடரும் என்றும், எம்.பி.எஸ்.ஸின் கருத்துக்களை இந்திரா எடுத்துக்கொள்வார் என்றும் இரண்டுவிதமான அபிப்பிராயங்கள் உலவி வந்தாலும் கடைசியில் காங்கிரஸ் தனித்தேதான் போட்டியிடும் என்று தோன்றுகிறது.

இந்தச் சூழ்நிலையில் எம். ஜி. ஆர். எடுக்கப் போகும் முடிவு இந்தத் தேர்தலில் ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. ஆதரவு வேண்டாம் என்று இந்திரா காங்கிரஸ் கூறினால் ஏற்கனவே இருக்கும் பதினொரு கட்சிகளின் கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. விலகாமல் வ. கம்யூனிஸ்ட் வேட்பாளரை ஆதரிக்கக் கூடும். மாதவனைத் தேர்தலில் போட்டியிடாமல் தடுத்து அவருக்கு ஒரு எம். எல். ஸி. பதவியையோ அல்லது வாரியத் தலைவர் பதவியையோ கொடுக்கலாம்.

தி.மு.க.வின் நிலைதான் சங்கடமானதாய் இருக்கும். தனித்து இ. காங்கிரஸ் போட்டியிடத் தீர்மானித்தால் தி.மு.க.வுக்கும் திருப்பத்தூர் தேர்தலுக்கும் எந்த வித சம்பந்தமுமே இல்லாமல் போகலாம்!

முடிவாக என்ன நடக்குமோ, இந்திராவே அறிவார்!

—ப்ரியன்

பது யார்? ஒவ்வொரு ஆண்டும் இதே நகரில்தான் நடக்குமா? வேறு வேறு நகரிலா?


இந்த Alba World Cup பந்தயத்தை நடத்தியவர்கள் மலேசிய பாட்மிண்டன் கழகத்தார். அவர்கள் அடுத்த போட்டியைக் கோலாலம்பூரிலேயே தொடர்ந்து நடத்தலாம் அல்லது மலேசியாவில் உள்ள வேறு நகருக்கு மாற்றலாம், சர்வதேச பாட்மிண்டன் கழக அனுமதியோடு!

13. இந்த உலகக் கோப்பைப் பந்தயம் தவிர வேறு சர்வதேச பாட்மிண்டன் பந்தயம் எங்கேயாவது நடக்கிறதா?

இந்தோனேஷியாவில் உள்ள ஜாகர்த்தாவில் நடக்கும் உலகக் கோப்பைப் பந்தயம் பிரசித்தி பெற்றது. ஆனால் இங்கிலாந்தில் நடைபெறும் All England Championship போட்டியே விம்பிள்டன் டென்னிஸ் போட்டியைப் போல் பெரும் பரபரப்பு ஏற்படுத்துவது. இங்கிலாந்தில் நடைபெறும் மற்றொரு பிரசித்தியான போட்டி Friends Provident Masters Tournament.

14. சில இந்தோனேசிய சாம்பியன்கள் இந்த உலகக் கோப்பைப் பந்தயத்தில் பங்கேற்காததால்தான் பிரகாஷ் வெற்றி பெற முடிந்ததென்ற அபிப்பிராயம் பற்றி...?

அந்த அபிப்பிராயம் தவறானது. பிரகாஷ் இந்தோனேசிய சாம்பியன் லியிம் ஸ்வே கிங்கை இங்கிலாந்தில் தோற்கடித்திருக்கிறார்!


எங்களுக்குத் தெரியாதா? ஏர் போர்ட்டுக்கு வர வேண்டாம்னு எதுக்காக அறிக்கை விட்டீங்கன்னு!
பலே! முன்னை விட பெரிய கும்பல்!
இ.காங்கிரஸ் முதல்வர்கள்
கேரள கூட்டணி அரசு
காங்கிரஸ் (ஐ)
மத்திய அரசு
கிர்பான் தடை எல்லாம் உங்களுக்கு இல்லிங்க!... நீங்க ஜம்முனு வாங்க!
பிரிவினை இயக்கம்

சட்டத்தின் ஆட்சிக்குச் சாவுமணி!

"இந்திரா காங்கிரஸ் கட்சிச் சார்புள்ளவர்களைத்தான் இனி அரசாங்க வக்கீல்களாக நியமிக்க வேண்டும்'' என்று சொல்லியிருக்கிறார் குண்டுராவ். அதுமட்டுமல்ல, ''சில அதிகாரிகளை ஸஸ்பெண்ட் செய்தாலோ அல்லது மாற்றல் உத்தரவு பிறப்பித்தாலோ, அவர்கள் நீதிமன்றத்துக்குச் சென்று 'ஸ்டே ஆர்டர்' வாங்கிவிடுகிறார்கள். இப்படி நீதிமன்றங்கள் நமது பணியில் குறுக்கிடுவதை நிறுத்த ஒரு வழி கண்டு பிடித்தாக வேண்டும்'' என்றும் கூறியிருக்கிறார்!

இப்படியெல்லாம் சுற்றி வளைத்துப் பேசுவதை விட ''ஜனநாயகத்தை எட்டி உதைப்பேன்'' என்றும் ''சட்டத்தின் ஆட்சியைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவேன்'' என்றும் குண்டுராவ் சொல்லியிருக்கலாம்!

ஜனநாயகத்தில் நீதித் துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் மோதலுக்கே இடமில்லை. நாடாளு மன்றம், சட்டமன்றங்கள் மூலமாக அரசு சட்டங்களைப் பிறப்பிக்கிறது. நிர்வாகிகள் மூலமாகச் சட்டங்களை அமுல்படுத்தவும் செய்கிறது. நீதித் துறையின் பணிகள் என்ன?

(1) அரசு பிறப்பிக்கும் சட்டங்கள் அரசியல் சாசனத்துக்கு உட்பட்டிருக்கின்றனவா என்று கவனிப்பது. (2) நிர்வாகத் துறை அரசியல் சாசனத்தை மீறாமல் இருக்கிறதா என்று கண்காணிப்பது (3) சட்டங்களை அலசி விளக்கம் தருவது.

நாடாளு மன்றம், நீதித் துறை, நிர்வாகத் துறை மூன்றுமே அரசியல் சாசனத்துக்குட்பட்டுச் சுதந்திரமாக இயங்க வேண்டியவை. பொறுப்புணர்ந்து செயல்படும்போது இவற்றிடையே மோதலுக்கே இடமில்லை.

ஆனால் ஆட்சியில் உள்ளவர்கள் ஆளத் தெரியாதவர்களாயும் திறமையற்றவர்களாயும் முரட்டுப் பிடிவாதத்துடன் காலத்துக்கு ஒவ்வாத வரட்டுச் சித்தாந்தங்களைப் பற்றிக் கொண்டிருப்பவர்களாயும் இருக்கும்போது, தேசம் முன்னேறாததற்கு அவர்கள் ஏதேனும் காரணம் கூற வேண்டியிருக்கிறது. 'ஆடத் தெரியாதபோனால் அரங்கம் கோணல்' என்பது போல் தங்கள் தோல்விக்கு யார் மீதாவது பழி சுமத்த வேண்டியிருக்கிறது. எனவே, ''நாடு முன்னேறாததற்குக் காரணம் நீதித் துறை முட்டுக்கட்டை போடுவதுதான்'' என்கிறார்கள்.

சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நீக்க முடியாதிருப்பதற்கும் ஏழைமையை ஒழிக்க முடியாதிருப்பதற்கும் காரணம் நீதித் துறையல்ல. ஆளும் கட்சியின் உதவாக்கரைக் கொள்கைகள்தாம். சொத்துரிமை என்பதே இந்தியனுக்குக் கிடையாது என்று அந்த அடிப்படை உரிமையைச் சாசனத்திலிருந்தே நீக்கியாகிவிட்டது. இதைச் செய்ததும் முற்போக்காளர் என்று தம்மை வர்ணித்துக் கொள்ளும் இ. காங்கிரஸ் சர்க்கார் அல்ல; ஜனதா ஆட்சிதான்!

இதன் பிறகும் தேசம் முன்னேறவில்லை, ஏழைமை ஒழியவில்லை எனில் யார்மீது குற்றம்? கையாலாகாத ஆளும் கட்சித் தலைவர்கள் நீதித் துறைமீது பழி சுமத்துவது தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக மட்டுமல்ல; அதில் வேறு ஓர் உள் நோக்கமும் உண்டு.

சிறுபான்மை வோட்டுப் பெற்று நாடாளு மன்றத்தில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ள இவர்கள், மக்களுடைய பேச்சுரிமை, சங்கம் அமைக்கும் உரிமை போன்ற அடிப்படைச் சுதந்திரங்களைப் பறித்துவிடத் திட்டம் தீட்டுகிறார்கள். இந்தச் சூழ்ச்சியை நீதித் துறை அனுமதிக்காது என்பதால் தங்களுக்கு வேண்டியவர்களை மட்டுமே நீதிபதிகளாக்கும் முயற்சி நடக்கிறது. சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் சீனியாரிடியைப் புறக்கணித்துக் கீழே உள்ளவர்களை மேலே உயர்த்துவது, மாநில உயர்நீதி மன்ற நீதிபதிகளை வேறு மாநிலங்களுக்கு மாற்றுவது எல்லாம் இந்தச் சதிச் செயலின் அம்சங்களே.

இந்த வரிசையில் லேட்டஸ்ட்தான் குண்டுராவின் அறிக்கை. அது, சட்டத்தின் ஆட்சிக்குச் சாவுமணி; சர்வாதிகாரத்துக்கு வரவேற்பு மணி!



1981 அக்டோபர் 25
துன்மதி ஐப்பசி 9
மலர்: 40 இதழ்: 13

கல்கி
தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

குமரிப் பெண்ணே! குயிலோளே!

விமலா ரமணி

1

வைகறைப் பொழுது.

பொழுது இன்னும் புலரவில்லை.

''கீசுகீசென்று ஆனைச் சாத்தான் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ?''

—என்று ஆண்டாள் பாடினாளே... அந்த வைகறைப் பொழுது

'மையிட்டெழுதாமல், மலரிட்டு முடியாமல், செய்யாதன செய்யாமல்,'

கன்னிப் பெண்கள் நோன்பிருக்க வேண்டிய பொழுது

இந்த அதிகாலைப் பொழுதில்....?

அதோ செல்வி கிளம்பிவிட்டாள். தன் பரிசலை ஓட்டிக் கொண்டு அந்த ஆற்றைக் கடக்க ஆரம்பித்து விட்டாள்.

அவளைப் பொறுத்தவரை இந்தப் பணி தான் நோன்பு!

இந்தப் பணிதான் தவம்! யக்ஞம் எல்லாமே!

அவள் அப்பன் பொன்னனுக்கு உடம்பு முடியாமல் போனதிலிருந்து செல்விதான் இந்தப் பரிசலை ஓட்டிக் கொண்டு இக்கரைக்கும் அக்கரைக்குமாக அலைந்து கொண்டிருக்கிறாள்.

செல்வி ஆற்றங்கரைக்கு அந்தப்புறமிருக்கும் கிராமத்தைச் சேர்ந்தவள்.

அந்தக் கிராமம் ஒரு சிறு தீவு மாதிரி. எல்லாமே இக்கரையிலிருந்து அக்கரைக்குப் பரிசல் மூலமாகவோ அல்லது கட்டு மரம் மூலமாகவோதான் வரவேண்டும்.

அது எந்தக் கிராமம்? எங்கே இருக்கிறது?—என்பதல்ல முக்கியம்.

அந்தக் கிராமத்தின் மக்கள் முக்கியம். அவர்களின் உணர்வுகள் முக்கியம்...

இதோ இந்தச் செல்வி உட்பட.

தன்நிறைவு பெறாத கிராமமாதலால் ஏதோ சில கீரை வகைகளைத் தவிர பாக்கி அத்தனை காய்கறிகள், பழங்கள், வருகிறவர்கள், போகிறவர்கள் கடிதங்கள் அல்லது செய்திகள் இப்படி எல்லாமே... எல்லாமே செல்வியின் இந்தப் பரிசல் மூலமாகத்தான் போயாக வேண்டும்.

நல்லவேளை, இதற்கு இன்னொரு போட்டிப் பரிசல் கிளம்பவில்லை. பழைமையில் ஊறிய கிராமம். தன் கட்டுப்பாடுகளை மீறாத கிராமம். தனக்கென்று சில விதிமுறைகளை, பண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள கிராமம். சில சமயம் அக்கரையிலிருந்து வரும் சில வெளியூர்க்காரர்களால் அல்லது சில பயணிகளால்கிராமத்தில் அவ்வப்போது சில சலசலப்புகள் ஏற்படுவதுண்டு. செல்வி அந்தப் புதியவர்களை அக்கரை சேர்த்ததும் அது மறைந்து விடும்.

இந்த அழகான கிராமத்தில் ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது. அந்தக் கோவில் பூஜைகளை நடேச சாஸ்திரிகள்தான் பக்தி சிரத்தையுடன் கவனித்துக் கொள்கிறார். கோவிலுக்கென்று மானியமோ, டிரஸ்டிகளோ, தனி நிர்வாகமோ ஏதுமில்லாத காரணத்தால் நிர்வாகம் நன்றாகவே நடக்கிறது. நடேச சாஸ்திரிகளே நாலு வீட்டில் போய்ப் பிள்ளையாருக்கு என்று அரிசி, பூஜைக்கு வேண்டிய திரவியங்கள், பூக்கள் இத்யாதி சாதனங்கள் ஆகியவற்றை வாங்கிக்கொண்டு வருவார். சிலர் வீட்டுத் தோட்டத்தில் மல்லிகை சிரிக்கும். சிலர் வீட்டில் பவழ மல்லிகை பாய்விரித்துக் கிடக்கும்; எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு வருவார். சிலர் வீட்டில் அரிசி தருவார்கள். சிலர் பணம் தருவார்கள். எப்படியோ பிள்ளையாரும் பட்டினிகிடக்காமல் நடேச சாஸ்திரிகளும் பட்டினிஇல்லாமல் இருக்கிறார்கள். தனக்குச் சாப்பிட என்று வடிக்கிற ஆழாக்குஅரிசியைப் பிள்ளையாருக்கு நைவேத்தியம் செய்து விடுவார் சாஸ்திரிகள். சாஸ்திரிகளின் பெண் சுகன்யா அவர் பறித்துக்கொண்டு வருகிற பூக்களை மாலை தொடுத்துத் தருவாள். விஷ்ணுசித்தர், ஆண்டாள் மாதிரி... அப்பாவும் பெண்ணும்!

ஆண்டாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி! சுகன்யாவோ....?

நடேச சாஸ்திரிகளைக் கண்டால் ஊரில் அனைவருக்கும் ஒரு மதிப்பு, ஒரு நல்ல பிராமணர், வேதம் படித்தவர், பிள்ளையாரைத் தம் பிள்ளையாகப் பாவித்து நேசம் செலுத்துபவர்.... என்கிற மரியாதை! மதிப்பு!

அவருக்கென்று ஒரு சின்னஞ் சிறிய வீடு வாடகை இல்லாமல் தரப்பட்டிருந்தது. சில சமயம் நடேச சாஸ்திரிகள் அக்கரைக்குப் போவார்...

இதே பரிசலில்தான்.

அவரைக் கண்டால் செல்விக்குக் கை கால் நடுங்கும்.

''அய்யிரு'' — என்கிற பயம்.

''படிச்சவர்'' — என்கிற மரியாதை.

''பூஜை பண்றவர்'' — என்கிற பக்தி.

பரிசலில் சாஸ்திரிகள் ஏறிவிட்டால் செல்லி ஒதுங்கி ஓரமாக நின்றபடி பரிசல் ஓட்டுவாள்.

''அய்யரு எத்தனை பெரிய மனுசன்!''

நடேச சாஸ்திரிகளோ ஏதோ ஜபம் பண்ணியபடி, சுலோகம் சொல்லியபடி அந்த ஆற்றைக் கடப்பார்.

அனாவசியமாக யாருடனும் பேச மாட்டார். அவர் உண்டு அவர் காரியம் உண்டு என்கிற மாதிரி... சுகன்யாவை இரண்டொரு முறை அப்பாவுடன் அக்கரை கொண்டு போய் விட்டிருக்கிறாள்செல்லி.

சுகன்யா நேர் எதிரிடை! ஓயாத பேச்சு. அவர்சுலோகம் சொல்லச் சொல்ல ஏதோ கேள்விகள்!

''போங்கப்பா... எப்பப் பார்த்தாலும் ஜபம்... திருவிழாவிலே நான் கேட்டதெல்லாம் வாங்கித் தரேளா?''

சுகன்யா பேசுவதையே காதில் வாங்கிக் கொள்ளாமல் சுலோகம் சொல்லும் சாஸ்திரிகள்...


இவர்கள்....?

அப்பாவும் பொண்ணுமா...?

என்ன எதிரிடைக் குணங்கள்?

அந்தாம் பெரிய மனுசன் தவம் மாதிரி கண்ணை மூடிக்கிட்டு சபிச்சுட்டு வரும் போது இந்தப் பொண் ஏன் சும்மா தொண தொணன்னு பேசிக்கிட்டு இருக்கு?

திருவிழாவுக்குப் போறாங்களா? என்ன கேட்டிருக்கும்? வேறென்ன? பத்து ரூபாய்க் கொலுசு கேட்டிருக்கும்... ரிப்பன், குஞ்சம் இப்படி ஏதாச்சும் கேட்டிருக்கும்.



செல்லிக்குக்கூட ரொம்ப நாளா ஒரு கொலுசு வாங்க வேண்டும் என்கிற ஆசை! எங்கே முடிகிறது! பரிசலைக் கட்டிக்கொண்டு இழுக்கவே பொழுது சரியாக இருக்கு! சம்பாதிப்பதெல்லாம் சாப்பிடவே சரியாகி விடுகிறது. இக்கரைக்கு அக்கரை நாலணா, எட்டணா என்று வரூல் பண்ணுவதற்குள்... அம்மாடியோவ்!

சிலபேர் இதில் கடன்கூட வைப்பார்கள்.

''இது மூன்றாவது ட்ரிப் செல்வி... ஞாபகம் வெச்சுக்கோ.'' — என்பான் காசி.

இந்த எளவு கணக்கெல்லாம் யாருக்குத் தெரிகிறது. ஆனால் நடேச சாஸ்திரிகள் அப்படி இல்லை... அக்கரை இறங்கியதுமே காசைத் தந்துவிடுவார்.

கையைத் தாழ்த்திக் காசை வாங்கிக் கொள்வாள் செல்வி

பணம் சேர்த்து ஒரு நாள் நாமும் ஒரு கொளுக வாங்கிக் கொள்ள வேண்டும்! இந்தக் கிராமத்தில்தான் திருவிழா கிரு விழா ஒண்ணும் கிடையாது. அக்கரையிலே மாரியம்மன் திருவிழா நடக்கும். மாரியம்மன் தெப்பம் நடக்கும். தெப்பம் பார்க்க ரொம்பப் பேர் இந்தக் கிராமத்திலிருந்து அக்கரை போவார்கள். அப்போது செல்வியின் சுருக்குப் பை நிரம்பும். அவ்வளவுதான் ....மற்றபடி வழக்கமான சவாரிகள்... சிலர் நீந்தியே போய்விடுவார்கள்... சிலர் தானே கட்டுமரத்தைத் தள்ளிக் கொண்டு போய் விடுவார்கள்.

வர வர ஒண்ணும் சரியில்லை.

அட.... நினைத்தவாக்கில் அக்கரை இதோ வந்து விட்டது.

யாரோ அக்கரையில் காத்திருப்பாங்க... நேரத்துலே காலத்திலே கூட்டிட்டு வரணும்னு அய்யிரு சொன்னாரே...

செல்வி அந்த இருட்டில் பார்த்தாள்.. உற்றுப் பார்த்தாள்...

அதோ... யாரோ ஒருவன் கையில் ஒரு சிறு மூட்டையுடன் நிற்கிறான்!

யாரிவன்?

செல்வி பரிசலை வேகமாக ஓட்டினாள்.

பொழுது நன்றாக விடிய ஆரம்பித்து விட்டது.

2

நடேசசாஸ்திரிகள் இரைந்து கூப்பிட்டார்.

''ஞானா... ஞானஸ்கந்தா!''

பூத்தொடுத்துக் கொண்டிருந்த சுகன்யா மெல்ல வாசல் திண்ணையை எட்டிப் பார்த்தாள்.

சந்தனம் அரைத்தபடி... கண்களை மூடியபடி....

''யாதேவீ ஸர்வ பூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்த்திதா!

நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நம:''

—என்று சுலோகம் சொல்லியபடி, சந்தனத்தை அரைத்துக் கொண்டிருப்பது....? ஞானஸ்கந்தன்... புதியவன்... திடீர் விருந்தாளி! அப்பா அடிக்கடி அன்புடன் அழைக்கும் 'ஞானு ஞானு' — என்ற பெயருக்கு உடையவன்.

சரியான பைத்தியங்கள்!

அப்பாதான் அப்படி யென்றால் வந்த பிள்ளையாண்டானுமா இப்படி? சுகன்யாவுக்கு நன்றாக நினைவிருக்கிறது.

அன்று—

வாசல் தெளித்துக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்

கட்டுக் குடுமியும், காதில் கடுக்கனுமாக, கையில் ஒரு துணி மூட்டையுடன்....?

யார்.... இந்தப் புதியவன்?

இந்தக் கிராமத்திலே ஒரே ஒரு உச்சிக் குடுமி இவன் அப்பா நடேச சாஸ்திரிகள்!

அது இன்னொரு முளை விட்டிருக்கிறதா?

ஆள் நன்றாகத்தான் இருந்தான். முகத்தில் ஒரு தேஜஸ். வேத அத்யயனம் பண்ணிய தேஜஸ்! முகத்தில் ஒரு காம்பீர்யம்!

ஒரு கணம் அவனைப் பற்றிய எண்ணங்களில் ஆழ்ந்த சுகன்யா ''என்ன வேணும்?'' என்கிற பாவனையாகத் தலையைத் தூக்கிப் பார்த்தாள்.

அவன் குனிந்த தலை நிமிராமல் அவள் கால்களைப் பார்த்தபடியே கேட்டான்.

''இங்கே நடேச சாஸ்திரிகள் ஆத்துக்குப் போகணும்!''

அட.... நம்ம வீட்டு விருந்தாளியா?

'சட்'டென்று இடுப்பில் உயரச் செருகி இருந்த புடவையைத் தழைய இறக்கி விட்டுக்கொண்டாள் சுகன்யா.

சினிமாப் பாட்டில் இலக்கிய நயம்!


தமிழ்நாடு திரைப்பட — தொலைக் காட்சிக் கல்லூரியின் மாணவர் மன்றத் துவக்க விழா.

''இலக்கிய நயம் சினிமாப் பாட்டில் வந்தாலே வாரிச் சுருட்டிக் கொண்டு எதிர்க்கிறார்கள்'' என்று குறைப்பட்டுக்கொண்டார் வைரமுத்து.

''வைரமுத்து எழுதினால் புரியவில்லை என்று கூறும் பலர் அன்று, 'அன்புள்ள அத்தான் வணக்கம்! உங்கள் ஆயிழை கொண்டாள் மயக்கம்!' என்ற வரிகளைக் கண்ணதாசன் எழுதியபோது ஏன் சும்மா இருந்தார்கள்? 'ஆயிழை' என்பது இலக்கிய வார்த்தை இல்லையா?'' என்று கேட்டுவிட்டுத் தமது பாடல்களை எப்படி யெல்லாம் தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் மாற்றுகிறார்கள் என வருத்தப்பட்டு உணர்ச்சிகரமாகப் பேசினார். ''இப்படிப்பட்ட ஒரு வியாபார வட்டத்தினுள் நுழையப் போகிறீர்கள், ஜாக்கிரதை!'' என்று மாணவர்களை எச்சரித்தார்.

—சலன்





ரூ. 2,750/-*

SBM-6744 TM

இப்போது! சின்னஞ்சிறு ஐஸி-க்கள் காரணமாக அபாரமான செவியின்பம்!

புதிய பிலிப்ஸ் ஹை-க்யூ இன்டர்நேஷனல் ஸ்டீரியோ ஸிஸ்டம் எஃப் 592

மைக்ரோ எலெக்ட்ரானிக்-ஸின் அற்புதமான அம்சங்கள்: இரண்டு சின்னஞ் சிறு ஐஸி-க்கள் (இன்டெக்-ரேட்டெட் சர்க்கியூட்டுகள்) சர்க்கியூட்ரி முழுவதையும் சமாளிக்கின்றன—தெள்ளத் தெளிவான ஒலியைக் கேட்க உபரியான சாதனங்கள் அடங்கியுள்ளன.

இது மட்டுமா? முழுமையாக முன்கூட்டிய யூனிட்டுகள் 40 வாட் முழுமையான உச்ச மியூசிக் பவர் • இணையற்ற ஃப்ரீக்வன்ஸி ரெஸ்பான்ஸ் • மிகவும் குறைந்த அளவில், வேண்டாத ஒலி • அதிநவீன ஆர்ம், மேலும் கீழும்/பக்க-வாட்டிலும் முழுமையாக நகர்த்த.



உங்கள் பிலிப்ஸ் டீலரிடம் இலவச செயல் விளக்கம்

பிலிப்ஸ்

பீகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லி.

PHILIPS

* எக்சைஸ் தீர்வை உட்பட அதிகபட்ச சில்லறை விலை. மாநில விற்பனை வரி மற்றும் இதர உள்ளூர் வரிகள் தனி.

அவன் கண்களில் தென்பட்ட புத்தம் புதிய பளபளப்பான கொலுஸு மறைந்தது.

''இந்தாம்தான்... உள்ளே போங்கோ... அப்பா உள்ளே இருக்கார்''— என்றவள்—

''அப்பா உங்களைத் தேடிண்டு யாரோ வந்திருக்காப்பா!'' என்று கத்தினள்.

இதற்குள் சாஸ்திரிகளே வெளியில் வந்து விட்டார்.

''யாரோ இல்லே சுகன்யா... நம்மாத்துப் பையன்.. நம்மாத்துலதான் தங்கப்போகிறான். எங் கூடமாட ஒத்தாசையா கோயில் பூஜைக்கு வரப்போறுன்...மொள்ள மொள்ள என்னோட நியம அனுஷ்டானங்களை இவனுக்கும் கத்துத் தரத்தான், நான்தான் இந்தப் பையனை வரச்சொல்லி அனுப்பிச்சேன்... நல்ல வேத வித்து...''

ஓ! அப்பாவுக்கு ஒரு புதிய வாரிசு உருவாகிறதோ?

அந்தப் புதிய வித்து இந்தக் கிராமத்து மண்ணில் ஊன்றிக் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிறது.

''புதுப் பையன் நல்ல மாதிரி!''

''சின்ன அய்யிரு கெட்டிக்காரரு!''

''நல்ல பையன்!''

''நேர்மையான பையன்!''

அம்மாடி அம்மாடி! வந்த ஒரு மாதத்துக்குள் இத்தனை பிரபலமா? இத்தனை பெருமைகளா? இத்தனை புகழுரைகளா?

எதையும் பார்க்க மாட்டேன் என்று கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் அமர்ந்திருக்கிறவர்கள்தான் நல்லவர்களா? ஹூம்!

அன்று மாரியம்மன் திருவிழாவிலே எத்தனை எத்தனை பளபளப்புக்கள்!

எத்தனை எத்தனை வண்ண வண்ண விளக்குகள்!

எத்தனை எத்தனை சினிமாப் பாட்டுக்கள்!

எத்தனை எத்தனை இனுசான உடைகள்!

இந்தப் பீத்தக் கொலுசுக்கே இத்தனை பாடு! இதைப் படாத பாடுபட்டு வாங்குவதற்குள் அவள் பிராணனே போய்விட்டது!

இந்தக் கிழிசல் புடவையைக் கட்டிக் கொண்டு, இந்த ஆற்றில் தினம் தினம் குளித்து, ஈரப்புடவையுடன் இடிந்த இந்தப் பிள்ளையார் கோயிலை வலம் வந்து மூலை மூலையாய் நின்று வம்புபேசி, இருண்ட வீட்டின் மூலையில் ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றிக் கனவு கண்டு... எத்தனை நாளைக்கு இந்த வாழ்க்கை?

அப்பா இந்தக் கிராமத்தை விட்டு வர மாட்டார் என்பது புரிந்த உண்மை!

இப்போது தனக்குப் பின் புதிய வாரிசு ஒன்றையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார் என்பது புது உண்மை!

கடவுளே! இந்தக் கிராமத்துக்கு விடிவு காலம் பிறக்கிறதோ இல்லையோ எனக்குப் பிறக்க வேண்டும்! விடிவு காலம் பிறக்க வேண்டும்!

அந்தப் பிள்ளையாண்டான் பெயர் ஞானஸ்கந்தனு?

நல்ல பெயர்! எக்கச் சக்க ஞானம்! அதான் கண்களையே திறக்க மாட்டேன் என்கிறான்!



அப்பாவாவது மூன்று வேளை சந்தி பண்ணும்போதுதான் காயத்ரி ஜபிப்பார்.

இவனே ஓயாமல் ஜபித்துக் கொண்டே இருக்கிறான்!

தினம் காலையில் ஒரு நாள் போல நாலு மணிக்கே எழுந்து ஆற்றங் கரைக்குப் போய், குளித்துவிட்டு ஈர வேஷ்டியுடன் மந்திரம் முணு முணுக்க வீட்டுக்கு வருவான் ஞானு.

பிறகு தன் குருநாதருக்கு (அதுதான் அவள் அப்பாவுக்கு) வெந்நீர் அடுப்பை மூட்டுவான். முன்பு மாதிரி நடேச சாஸ்திரிகளால் இப்போதெல்லாம் ஆற்றில் முங்கிக் குளிக்க முடிவதில்லை.

வயதாகிறது. ஆஸ்துமா வியாதி வேறு.

இந்த ஊருக்கு என்ன வருகிறதோ இல்லையோ... ஒரு டாக்டர் வந்தால் தேவலை

இந்தக் கிராமத்தில் நிறைய வியாதிகள்.

இவள் ஆற்றங்கரைக்குக் குளிக்கப்போகும் போது, நிதானமாக, சாவகாசமாக, புடவையைத் தோய்த்துத் தோய்த்துக் குளிக்கையில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் வம்பு, முக்கியமாக யார்யாருக்கு என்னென்ன வியாதி என்பதுதான்! சுகன்யாவுக்கு நிறையவே வம்பு கிடைக்கும்.

இந்த வம்பை வைத்துக் கொண்டு ஊறுகாயா போட முடியும்?

தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள ஒரு துணை கிடையாது! இதமான ஒரு உறவு கிடையாது. பெத்த அம்மா செத்து எத்தனை வருடங்கள் ஆகி விட்டனவோ முகமே நினைவில்லை.

அப்பாவின் மந்திர ஓசையிலேயே வளர்ந்து பெரியவள் ஆனவள் சுகன்யா.

''உன் பேரை சுகன்யான்னு ஏன் வச்சேன் தெரியுமா? சுகன்யா ஒரு சதி. ரிஷி

பத்னி. கற்புக்கரசி. அதே மாதிரி நீயும் சிறந்த சதியா விளங்கணும்'' – என்பார் அப்பா அடிக்கடி.

அப்பாவிடம் சிறு வயதில் சதி சுகன்யா கதையைக் கேட்டுத் தெரிந்து வைத்துக்-கொண்டிருந்தாள் சுகன்யா.

ஒரு ராஜாவின் மகள் சுகன்யா தன் சேடிகளுடன் காட்டில் விளையாடப் போகிறாள். ஒரு பெரிய கறையான் புற்று. அதில் பளபளவென்று உள்ளே ஏதோ தெரிய ஒரு குச்சியால் அந்தத் துவாரத்தில் குத்த.. உள்ளே...?

பல ஆண்டுகளாகத் தபஸில் ஈடுபட்டிருந்த ரிஷி ஒருவரின் கண்ணைக் குத்தி விடுகிறாள்.

தான் பண்ணியதற்குப் பிராயச்சித்தமாக அவரையே மணக்கிறாள் சுகன்யா!

அந்த ரிஷி இவள் கண்களுக்கு வாலிபனாகத் தெரிகிறார்.

கதையைக் கேட்ட சுகன்யா சிரித்தாள்.

தன்னைத் தாடி மீசையுடன் கூடிய ஒரு ரிஷியின் பத்தினியாக நினைத்துப் பார்த்த போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''நான் வேணு சதியா இருக்கேன். ஆனா என்னை ஏதாவது ஒரு 'தாடிச் சாமியாருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து நிஜமாகவே நீங்க சதி பண்ணிடாதீங்கோ அப்பா'' என்று கூறிச் சிரிப்பாள்.

''ஏம்பா புத்துக்குள்ளே பளபளன்னு தெரிஞ்சது அந்த ரிஷியோட கண்ணு?''– சிறுமி சுகன்யா கேட்பாள்.

''ஆமாம்மா.''

''ஏம்பா... கண்ணைத் திறந்தாத்தானே அது பளபளப்பாத் தெரியும்? புத்துக்குள்ளே உக்கார்ந்துண்டு ரிஷி கண்ணை மூடிண்டு தபஸ் பண்ணுவா கண்ணைத் தொறந்துண்டா தபஸ் பண்ணினார்?''

நடேச சாஸ்திரிகள் திணறுவார்.

''ஒருவேளை... அந்த ராஜகுமாரி தன் பிரண்ட்ஸோட விளையாடறதை அவர் புத்துக்குள்ளே இருந்தபடியே பார்த்துண்டு இருந்தாரோ என்னவோ?''

''தப்பும்மா... பெரியவாளைப் பத்தி அப்படி யெல்லாம் சொல்லக் கூடாது!''

சிறுமியின் குறும்புகள் நாளாவட்டத்தில் குறைந்தாலும், இந்தக் கேள்விகளும், இந்தச் சம்பவங்களும் அடிக்கடி அவள் மனத்துள் தோன்றிக் கொண்டே தான் இருந்தன.

இப்போது கண்களைமூடிக்கொண்டு இந்தப் புதுப்பிள்ளையாண்டான் சதா சர்வ காலமும் ஜபம் பண்ணிக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது...? அந்தக் கதை மாதிரி ஒரு குச்சி எடுத்து இவன் கண்களைக் குத்தவாமா என்று விளையாட்டுத்தனமாகத் தோன்றியது.

'சுருக்'கென்று கையில் ஏதோ குத்தியது!

ரோஜாவின் முள்!

பூமாலை தொடுத்துக் கொண்டிருந்தவள் பூக்களை மட்டுமேதான் பார்த்திருக்கிறாள்.

விட்டுப்போன ஒரு முள்–மெல்லக் குத்தியிருக்கிறது.

மாலை ரொம்பப் பெரிதாகப் போய்விட்டது.

ஏதேதோ எண்ணங்களில் தொடுத்த பூமாலை! மனத்துள் பாமாலை!

ஆயிற்று... சந்தனம் அரைத்து முடிந்தவுடன், அப்பாவும், ஞானுவும் கோவிலுக்குக் கிளம்பி விடுவார்கள்.

கோயிலுக்குப் பக்கத்திலேயே இருக்கும் கிணற்றில் ஞானு குடம் குடமாய்த் தண்ணீர் எடுத்துப் பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்வான். ஆற, அமர நின்று, நிதானமாக, அவசரப்படாமல் இவள் கட்டித் தந்த பூமாலையைப் போட்டுத் தினுசு தினுசாகப் பூக்களில் அலங்காரம் பண்ணுவான். நிறைய வரும்படி கிடைத்தால் சந்தனக் காப்பு, வெண்ணெய்க் காப்பு, அன்னாபிஷேகம், முப்பழ அபிஷேகம் என்று ஞானு ஜமாய்த்துத் தள்ளிவிடுவான்! அதிர்ஷ்டக்காரப் பிள்ளையார்! ஞானு வந்ததிலிருந்து அப்பாவுக்கு வேலைப் பளு குறைந்துவிட்டது. பிள்ளையாருக்கு அலங்கார பளு அதிகமாகி விட்டது!

எந்தப் பளுவும் குறையாமலும், கூடாமலும் இருக்கிற ஒரே ஜீவன் சுகன்யாதான்!

(தொடரும்)

ஈஸ்வர அல்லா தேரே நாம்!

மதமாற்றம் மலிந்துபோன இந்நாளில் நடந்த அதிசயம் இது.

எங்கள் அலுவலகத்தில் தட்டெழுத்துப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆயுத பூஜை கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பூஜைக்கு அலுவலகத் தலைமை அதிகாரி திரு கோமர் – கிறிஸ்தவர் – அழைக்கப்பட்டிருந்தார்.

சரஸ்வதியின் படத்துக்குக் கற்பூர ஆரத்தி எடுத்து ஆயுத பூஜையைத் தானே முன்வந்து செய்தவர் தலைமைத் தட்டெழுத்தராகப் பணிபுரியும் முஸ்லிம் நண்பர் திரு கலீல்.

அவர் கற்பூரத் தட்டை எல்லோருக்கும் காண்பித்து வந்தபோது கிறிஸ்தவத் தலைமை அதிகாரி கற்பூர ஒளியைக் கண்களில் ஒற்றிக் கொண்டு, விபூதி குங்குமத்தை நெற்றியில் இட்டுக்கொண்டார். -நா. கிருஷ்ணமூர்த்தி



விக்கிரமாதித்தன் கதை விளங்குகிறது

ரசிகமணி ரசித்த மணிகள்

மீ.ப.சோமு

டி.கே.சி தமிழகத்தின் ரசிகமணியாகத் திகழ்ந்தாலும் உள்ளத்தினுள்ளே அவர் ஒரு கவிமணியாகவே வாழ்ந்தார்! அவர் புனைந்துள்ள பாடல்கள் மிக மிகச் சிலவே! புனையாத பாடல் எண்ணில் அடங்காதவை!

கவிதைகள் பாடினால்தான் கவிஞனா? டி.கே.சி. அதற்கு ஒரு சான்றாக விளங்கினார். அவருடைய உரை நடையில் பல இடங்கள் கவிதைக்கு ஒப்பாக மிளிர்கின்றன!

சென்னையில் பல நாள் தங்குவார். பிறகு திருக்குற்றாலம் திரும்புவார். பிறகு மறுபடியும் சென்னைக்கு வருவார்: பலநாள் தங்கல்! இப்படியே சென்றது அவருடைய வாழ்க்கை!

காடாறு மாதம் நாடாறு மாதம் என்றே டி.கே.சி. தமது வாழ்க்கையைப் பற்றி அடிக்கடி சொல்லுவார்! இந்த அனுபவத்தை அவர் ஒரு நேர்த்தியான கடிதத்தில் மெல்லிதாய் இழையோடும் நகைச்சுவையுடன் ரசமாக எடுத்துச் சொல்கிறார்.

சென்னைவாழ்க்கை என்பது ஒரேபடபடப்பு. எல்லாம் அவசர மயம்! ஆனால் திருக் குற்றால வாழ்க்கையோ ஒரே நிதானம். எல்லாம் அமைதி மயம். சென்னைக் காட்சிகளின் படபடப்பையும் திருக்குற்றாலத்தின் தியான அமைதியையும் கோடு போட்டுப் பிரித்துக் காட்டுவது போல எழுதுகிறார் டிகேசி.

வர்ணனைகளிலே அவருடைய உள்ளத்துக்குள் ஒளிந்து கொண்டிருக்கிற கவிஞன் அப்படியே துள்ளி வெளியே வந்து விடுகிறான்!

அப்படிப்பட்ட ஒரு கடிதத்தைக் கீழே தருகிறேன்.

இந்தக் கடிதம் சென்னையிலிருந்து திருக் குற்றாலம் திரும்பியதும், கல்கி ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்களின் துணைவியார் ருக்மணி அம்மாளுக்கு அன்பும் பண்பும் கவித்துவமும் கலந்த தமிழ் நடையிலே 24-11-50ல் எழுதியது. கடிதத்தில் உள்ள ரசிகமணியின் கவியுள்ளத்தை அனுபவிப்பதோடு, பெண்களுக்கு எழுதுகிற கடிதத்தில் உழுந்தைப் பற்றியும், காணத்தைப் பற்றியும் இட்லி தோசைகளைப் பற்றியும் எத்தனை சுவையோடு அவர் ரசித்து எழுதுகிறார் என்பதையும் ரசிக்கலாம்!

கடிதத்தில் உள்ள பாசம், உறவுப் பாங்கு, செய்திகளைச் சொல்வதில் உள்ள பண்பாடு எல்லாம் சேர்ந்து கடிதத்தின் தமிழுக்கு எப்படி ஓர் இலக்கிய நயத்தைத் தருகின்றன என்பது முக்கியம்! எந்த ஒரு விஷயத்தையும் எத்தனை எளிய தமிழிலும் களிப்போடு சொல்லிவிடலாம் என்பதை எடுத்துக் காட்டுகிறது இந்தக் கடிதம். தம்முடைய நீரிழிவு நோயைப் பற்றியே எத்தனை உல்லாசத்தோடு டிகேசியால் பேச முடிகிறது என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். இதோ கடிதம்:

கதையில் விக்கிரமாதித்தன் ஆறு மாசம் காட்டிலும் ஆறு மாசம் நாட்டிலும் வசித்தான் என்று படிக்கிறோம். அதன் பொருள் எனக்கு நன்றாய் விளங்குகிறது இப்போது!

குற்றாலத்தை விட்டுச் சென்னைக்கு வந்ததும் வெகு ஜோராய் இருக்கும். கார்கள், கார்களின் சப்தங்கள், அவசரம் அவசரமாய் ஜனங்கள் அப்படியும் இப்படியுமாக ஓடுகிற காரியம் எல்லாம் ரசமாய்த்தான் இருக்கும் எனக்கு.

சில நாள் ஆனதும் எல்லாம் தொல்லையாய்த் தோன்றிவிடும். அதை எல்லாம் விட்டு விட்டு ரயிலேறுகிறேன்.

தென்காசியில் ரயிலடி வந்து சேருகிறேன். மாட்டு வண்டியில் ஏறுகிறேன். குற்றாலம் ரோட்டுக்கு வண்டி போகிறது.

மோட்டார்கிடையாது. மனிதர்கள் கிடையாது. ஒரே அமைதி! ஆலமரங்களும் மருத மரங்களும் சப்தம் போடாமல் தியான நிலையில் நிற்கின்றன. பசும் புல் தளங்கள் படுத்துத் தூங்குகின்றன. நெல் வயல்கள் லேசாய் மூச்சு விட்டுக் கொண்டு உறங்குகின்றன. ரோட்டின் வண்டித் தடங்கள் கூட ஏதோ நம்மோடு பின் தொடர்ந்து வருவது போலத் தோன்றுகின்றன.

குற்றாலம் வந்துவிடுகிறது. அருவி தானாக இரைந்து கொண்டிருக்கிறது. தன் சுருதியோடு கூடிய சங்கீதத்தைக் கேட்க ஆளில்லையே, எல்லாம் எம். எஸ். பாட்டு, எம். எஸ். பாட்டு என்றல்லவா ஆய்விட்டது என்று.



ரஜினியின் அறிவுரை!

தமிழ் நாடு திரைப்படக் கல்லூரி மாண வர் மன்றத் துவக்க விழா. எல்லோரும் பேசிய பிறகு ''ரஜினி காந்த் பேசட்டுமே'' என்று சபாநாயகர் ராஜாராம் சொல்ல, அமைச்சர் ஆர். எம். வீரப்பனும் வற் புறுத்த, வேண்டாமென்று ரஜினிகாந்த் ஒதுங்க, அப்பொழுது ராஜாராம் கூறிய ஒரு வாக்கியத்தினால் குத்தப்பட்டுப் பேச எழுந்துவிட்டார் ரஜினிகாந்த். அந்த வாக் கியம்:

''பணம் கொடுத்தாத்தான் பேசுவார் போலிருக்கு!''

''இல்லே, இல்லே! இதோ பேசறேன்'' என்று ஆரம்பித்த ரஜினி, திரை உலகில் முன்னேறுவதற்குக் கொடுத்த அறிவுரை:

''எல்லோரையும் போல நீங்களும் செய் தால் மக்கள் மனத்தில் பதிய மாட்டீர்கள். மாறுபட்டு வித்தியாசமாக ஏதாவது செய் யுங்கள்!''

விழா முடிந்ததும் தம் கணவருடன் கை கோத்துக் கொண்டு பத்திரமாக நகர்ந் தார் கர்ப்பிணியான திருமதி லதா ரஜினி காந்த்.

—சலன்

''இந்தக் கம்ப்யூட்டர் மனிதனைப் போலவே தான்! எந்த வேலையும் செய்யும்!''

''அடேடே! தப்பே செய்யாதா?''

''செய்யுமே! தப்பு செஞ்சுவிட்டு அடுத்த கம்ப்யூட்டர் மேல் பழியைப் போட்டு விடும்!''

-சம்பத் குமார்



சுகமாய் முனு முனுத்துக் கொண்டிருக் கிறது.

எல்லாம் ஜோர்தான்! காரணம் என்ன? விக்கிரமாதித்தன் காட்டுக்கு வந்திருக் கிறான், அவ்வளவுதான்!

உடனே கடிதம் போடாததற்குக் கார ணம் உண்டு.

டில்லியில் ராஜாஜி மூன்று நாள்த் தொடர்ந்து பகவத் கீதையைப் பற்றி ஒரு சங்கத்தில் பேசினார்கள். எல்லாம் வெகு ரசமாய் இருந்தன. அவைகளைப்பற்றி ராஜாஜிக்கு நீண்ட கடிதம் எழுத வேண்டி இருந்தது. எழுதி அனுப்பி விட்டேன். அத னால்தான் தங்களுக்குக் கடிதம் எழுதத் தாமசம்.

என்னுடைய உடம்பு கொஞ்சம் சௌகரி யம்தான். ஊசி போட வேண்டிய அவசியம் இல்லாதிருக்கிறது. எல்லாம் உழுந்தம் பெரு மாளின் அனுக்கிரகம்தான்!

உழுந்தந் தோசை பிரயோசனமாகத் தான் இருக்கிறது. வாய்க்கும் ருசியாக இருக் கிறது. இலகுவில் ஜீரணம் ஆகிவிடுகிறது.

நம்மவர்கள் உழுந்து என்கிற ◘ தவசத் தைக் கண்டு பிடித்துப் பயிராக்கி, இட்டலி தோசைகளோடு சேர்த்தார்கள். வடை சுட் டார்கள். உழுந்தங் களியைச் செய்தார்கள். வெகு சமர்த்தர்கள். மேல் நாட்டவருக்கு உழுந்து தெரியாது. இதற்குப் பெயரும் இல்லைதான். ''கருத்தக் காணம்'' (பிளாக் கிராம்) என்றார்கள். அவர்கள் நாமகரணம் சூட்டுகிற காரியம் வேடிக்கைதான். ''மரக் கட்டை ஆப்பிள்'' (வுட் ஆப்பிள்) என்று எழுதி ஒட்டினார்கள் விளாம்பழத்தின் தலை மேல்!

குதிரைக்குப் போடுகிறது செங்காணம். மனிதர்களுக்கு உதவாததுதான். செங் காணமே அப்படியானால் கருத்த காணத் தைப் பற்றி அதாவது உழுந்தைப் பற்றி என்ன சொல்ல!

அந்த உழுந்தில்தான் ''அமிர்தம்'' இருக் கிறதாகத் தெரிகிறது.

சில்கி அவர்களுக்கு உடம்பு சரிப்பட்டு வருகிறதல்லவா? எழுத்தில் மாத்திரம் உடம் பின் சேஷ்டை தெரிகிறதில்லை. எழுதிக் கொண்டிருந்தாலே ஒரு ''டானிக்'' தான் அவர்களுக்கு. வாசிக்கிறவர்களுக்கு டானிக் என்பதைப் பற்றியோ சொல்ல வேண்டாம்.

வேறுசில எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய கட்டுரையோ, சிறுகதையோ ஓரங்க நாடகமோ, ஈரங்க நாடகமோ எதை யாவது படிக்க வேண்டும். அவ்வளவுதான். முதலில் தலைவலி, பிறகு தூக்கம், பிறகு கைநாடி இறங்கிவிடும். எட்டிக் கொட்டை திராவகம் குத்தித்தான் நம்மை ஆளாக்க வேண்டும். எழுத்தின் வல்லமை இப்படி எல்லாம் இருக்கிறது!

◘ தவசம் - தானியம்


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
EGG
Halo
SHAMPOO
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரை வளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
HES. G. 4. TM

சி. எஸ். பேட்டி



பேட்டி கண்டவர்: கே.எஸ்.ஆர்

கேள்வி: தமிழ் நாட்டின் இன்றைய அரசியலையும் அதன் உடன் விளைவான பொருளாதார நிலையினையும் எப்படி வர்ணிப்பீர்கள்?

பதில்: 1967லிருந்து மாநிலக் கட்சிகள் தாம் தமிழகத்தில் ஆட்சியில் இருந்து வந்துள்ளன. இன்று நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டது என்ற குற்றச்சாட்டு அதிகமாக உள்ளது. முடிவுகள் எடுக்கப்படுவதில்லை; உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதில்லை. மொத்தத்தில் தேக்க நிலை. கடந்த காலத்தில் தமிழகம் இந்திய மாநிலங்களுள் முதன்மையான ஓரிடம் பெற்றிருந்தது. இன்றோ மிகவும் பின்தங்கிய மாநிலமாகி விட்டது. இது எப்படி நேர்ந்தது? ஆராய்வோம். வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் மின்சக்தி நிறையக் கிடைத்தது. மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இதனால் பல பேர் தமிழகத்தில் தொழில்கள் நிறுவ முன்வந்தனர். இதனால் ஒரு நாளைக்கு ஒரு தொழிலகம் தமிழ் நாட்டில் நிறுவப்படுவதாக அன்றைய தமிழக அமைச்சர் ஆர்.வி. பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடிந்தது. இன்று கதையே வேறு. மின் உற்பத்தி அதிகரித்தாலன்றித் தொழில் துறை இங்கு அபிவிருத்தி அடையாது.

இரண்டாவது மிக முக்கியமான விஷயம், மின் உற்பத்தித் துறையில் நாம் முதலீடு செய்துள்ளதற்கு ஏற்பப் பூரண பிரதிபலன் பெற்றாக வேண்டும். மின்வாரியத்தை நிர்வகிப்பதில் ஏகப்பட்ட அரசியல் இருப்பதால் இது சாத்தியமாவதில்லை. அரசு, மின் வாரியத் தலைவரை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருக்கிறது. இதனால் யாருமே ஸ்திரமாய் அமர்ந்து வேலை துவக்க முடியாதிருக்கிறது. மின் உற்பத்தி – தேவைகளைக் கணிக்க ஒரு நிபுணர் குழு அமைக்க வேண்டும். இக்குழு மின் துறையைக் கவனித்துக் கொள்ளச் சிறந்த நிர்வாகிகளையும் தேர்வு செய்ய வேண்டும். நமது அதிகரித்து வரும் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய பிரதானமான அமைப்பு நெய்வேலி தான். இதில் விசேஷக் கவனம் செலுத்துவதுடன் கடற் கரை யோரப் பகுதிகளில் அனல்மின் நிலையங்கள் அமைக்கலாம். இவற்றுக்குக் கடல் மார்க்கமாகக் கப்பலில் நிலக்கரி வந்திறங்க வேண்டும். ரயில்வே வாகன் பற்றாக்குறையால் மின்உற்பத்தி தடைப் படாமல் காக்கலாம்.

மூன்றாவதாகத் தொழில் உற்பத்தி அதிகரிக்கத் தொழிலாளர் – நிர்வாகிகள் நல்லுறவு வேண்டும். ஒரு காலத்தில் தொழிற் கூடங்களில் அமைதி நிலவியது. இன்று இல்லை. கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான அம்சம், தொழில் துறை தகராறுகளில் உறுதியான கொள்கைகளைக் கடைப் பிடிப்பதுதான். எல்லாத் தொழிற் சங்கத் தகராறுகளிலும் அமைச்சர்கள் சிக்கிக் கொள்ளக் கூடாது. இது முழுக்க முழுக்கத் தவறான அணுகுமுறை. பிரச்னைகளைச் சமாளிக்க ஒரு நடைமுறை சம்பிரதாயம் இருக்க வேண்டும். நிலைமை மிக மோசமாகும்போது தான் அரசு தலையிட வேண்டும். தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகளுடன் இணைந்துள்ளன. எனவே அரசியல் கட்சிகளிடையே அரசியல் ரீதியான மோதல், தொழிற் சங்கங்களிடையேயும் மோதலாக முடிகிறது.

கேள்வி: தொழிற் துறையின் தேவைகளுக்கு ஏற்ப ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் எப்படி ஒத்துழைக்கலாம்?

O "உங்களோட முதலாளித்துவமும் எங்களோட சோஷலிஸமும் உற்ற நண்பர்களாய் இருந்து ஒருவருக் கொருவர் உதவி ஒத்துழைக்கணும்னு ஆசைப்படறேன்"-என்று சொல்கிறாரோ ஸி.எஸ். ஜான்ஸனிடம்?



ரத்தத்தின் ரத்தமே!

தலைப்பைப் பார்த்தவுடன் ஏதோ இரட்டைஇலை சமாசாரம் என்று நினைப்பவர்களுக்கு மட்டும்:

போதை மாத்திரை மேல் கொண்ட வெறியால் கயவன் ஒருவனிடம் மானத்தை இழக்கத் துணிந்து, பின் உயிர் விடும் தன் தங்கையின் உதிரத்தைப் பார்த்து அவளைக் கதாநாயகன் 'ரத்தத்தின் ரத்தமே' என்று விளித்து, சபதமேற்கிறான். பின் வில்லன்களை அவன் பழி வாங்குவதுதான் நாம் ஆண்டாண்டு காலமாய்ப் பார்த்து பழகிய, புதுமை பொங்கி வழியும் கதை. திரைக்கதையும் திரிலோகசந்தருடையதுதான்.

ஜெய்சங்கர் மிடுக்காக வந்து சண்டை போடும் 'போலீஸ்' அதிகாரி. இன்னும் 'மலையாள மொழி' பேசி "தமிழைக் கொலை" செய்யும் ராதிகா இவருக்கு ஜோடி. ஹோட்டலில் அவர் பிரியாணியை ஒரு பிடி பிடிக்கும்போதுதான் அவருடைய உடல் வாகின் காரண ரகசியம் புலப்படுகிறது. ரொம்ப ரொம்ப செக்ஸியாய்த் தோன்றும் இலங்கை நடிகை கீதாதான் 'ரத்தத்தின் ரத்தம்.' நாகேஷ் வரும் காட்சிகளை விட வில்லன் ஜெயச்சந்திரன் வரும் காட்சிகளில் தான் தியேட்டரில் சிரிப்பொலி அதிகம். அதுவும் அவர் வாளைச் சுழற்றிக் கொண்டு வரும்போது ... ஹா.... ஹா... ஹா....! கண்ணைச் சிமிட்டுவதும் கையைச்சொடுக்குவதும் இன்னும் ஸ்டைல்தான் என்று நம்பிக் கொண்டிருக்கும் அசோகன்தான் Boss. சண்டைக் காட்சிகள் கேலிக் கூத்து.

மேலும் சலிப்பூட்டும் இரண்டு அம்சங்கள் பாடல்களும் வசனங்களும். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இந்தக் காலத்தில் 'பாச மலர்' காலத்து வசனங்கள் எழுதியிருக்கிறார் ஆரூர் தாஸ். இரட்டை அர்த்த வரிகளும் உண்டு. இன்னொரு விசேஷம்: டைரக்டர் ஜோதேல் ஆனந்த் உட்பட டெக்னீஷியன்களும் துணை நடிகர்களும் ஸ்ரீலங்கா தேசத்தவர்கள்.

இலங்கையின் எழில் பிரதேசங்களை அழகாய்ப் படமாக்கியிருக்கிறார் காமிராமேன் கபூர்—குறிப்பாக போட் சேஸிங் பிரமாதம். ஹாங்காங்கில்போடப்பட்ட பிரிண்ட் பார்வைக்குப் பாந்தமாயிருக்கிறது.

தமிழ்ப் படங்களை எந்த நாட்டவர் எடுத்தாலும் ஒரே மாதிரிதான் எடுப்பார்களோ? - அதாவது அபத்தமாய்!

— சிந்து ஜீவா

பதில்: இன்றைக்குமின் தொடர்பு கிடைப்பதோ மூலப் பொருள்கள் கிடைப்பதோ கஷ்டமாக இருக்கிறது. ஹோசூரை எடுத்துக் கொள்வோம். இந்தத் தொகுதியின் பிரதிநிதியாக நான் லோக சபையில் செயல்பட்ட போது ஹோசூர் தொழிற்பேட்டை திட்டத்தை ஆரம்பித்து வைத்தேன். அது இன்னொரு பெங்களூர் ஆகும் என்று கனவு கண்டேன். துரித வளர்ச்சிக்கு மின்சாரம் இன்றியமையாதது. பயிற்சி பெற்ற தொழிலாளர்களும் தேவை. இவர்கள் உள்ளூரில் கிடைப்பது அரிதாயிருந்தது. வெளியே இருந்து அழைத்து வரவேண்டியிருந்தது. அப்போது குடியிருப்புப் பிரச்னை தலையெடுத்தது. ஆகமொத்தம் இப்போது நிலைமை என்ன? கொஞ்சம்தான் அபிவிருத்தி அடைந்தது ஹோசூர். அங்கே தொழிலகம் அமைக்க. அனுமதி பெற்றவர்கள் கூட வேறு இடத்துக்குப் போகிறார்கள். அங்கே தொழிலகம் தொடங்க முன்வருவோர், இங்குமங்கும் பந்தாடப்படுகிறார்கள். அலுத்துச் சலித்து விடுகிறது அவர்களுக்கு. ஹோசூர், ராணிப்பேட்டை முதலான இடங்கள் உயர்தர ஐ.ஏ. எஸ். வர்க்கத்தினரிடம் விடப்பட வேண்டும். இவர்கள் அரசின் பிரதிநிதிகளாய் இருந்து தொழில்களைப் பொருத்தமட்டில் துரித முடிவுகள் எடுக்க அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் தொழில் தொடங்க முன்வருவோர்க்கு உதவியாக இருக்கும். இன்றைக்கோ திட்டவட்டமான கொள்கை ஏதும் இல்லாததாலும் தொடங்கவிருக்கும் தொழிலுக்குச் சம்பந்தமில்லாதவேறுவெளிக் காரணங்களை யொட்டி முடிவுகள் எடுக்கப்படுவதாலும் லஞ்ச ஊழல்கள் பெருகுகின்றன. தமது நியாயமான தேவைகள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எந்தத் தொழிலதிபருக்கும் இல்லை.

கேள்வி: உங்களுடைய பரந்த அனுபவத்தில் இன்றைய தமிழக ஆட்சியாளருக்கு என்ன யோசனைகள் கூற விரும்புகிறீர்கள்?

பதில்: அதிகாரங்கள் மையத்தில் குவியாமல் பரவலாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு அமைச்சரும் தாமே முடிவு எடுக்க அனுமதிக்கப்பட வேண்டும். தயக்கமின்றி அவர்கள் செயல்பட வேண்டும். அதிகாரம் இப்படிப் பரவலாக்கப்படாததாலும் அமைச்சர்களிடம் நம்பிக்கையில்லாததாலும்தான் இன்று முடிவுகள் எடுப்பதில் கால தாமதமாகிறது. அதிகாரம் பரவலாக்கப்படும் இதே கொள்கையை உயர் அதிகாரிகள் விஷயத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். அதிகாரிகள் செய்ய வேண்டியது என்ன, அமைச்சர்கள் செய்ய வேண்டியது என்ன, அமைச்சரவை செய்ய வேண்டியது என்ன என்பனவற்றைத் தெளிவாக அனைவரும் உணர்ந்திருக்க வேண்டும். முடிவெடுக்கும் உரிமையுடன் பொறுப்பும் இணைய வேண்டும். செயல் சுதந்திரம் இல்லையெனில் பொறுப்பும் இராது. அதிகாரம் பரவலாக்கப்படவில்லையெனில் தனிமனிதர் ஆட்சிதான் நடக்கும். தாமதங்களைத் தவிர்க்க முடியாது.

(தொடர்ச்சி: அடுத்த இதழில்)

வீட்டில் அனைவரின் கேசப் பராமரிப்புதானே? அதற்கு நம்பகமானது, விசேட ஃபேமிலி ஷாம்பூ பாமோலிவ்.



பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர், அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்



பாமோலிவ். எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது, வளமையான நவீன ஷாம்பூ. உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது. பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு நேசமானது - உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது

GK6E.PS.7 TM

பரிணமிக்கும் புதுயுக தர்மங்கள்



''பண்றதென்ன மங்களம்... எதிர் ஜாமீன் நாலாயிரத்துக்கு மட்டும் இல்ல... கல்யாணச் செலவுக்கும் சேர்த்து நாம் இப்பத் தோது பண்ணியாகணும். முடியற காரியமாத் தெரியலே... அதனால.. பேசாம கல்யாணத்தை நிறுத்தப் போறேன்....'' கர்ணீகர் கோபால சர்மாவின் தீர்க்கமான முடிவு.

''நன்னா இருக்கே.. ஏன் இப்படி மனசை இழக்கறேள்?''

வேறொண்ணும் தோணலியே மங்களம்''

போட்டிக் கதை - 8

ஜானகிமணாளன்

''போன காரியம் என்னாச்சு? என்னமோ போல வரேளே!''

''ஆமாம் மங்களம்! நம்ப வேதா கல்யாணத்துக்குப் பெருமாளைத்தான் நம்பிண்டு இருந்தேன். இப்பக் கையை விரிக்கறார்.''

''ஆ....ங்!'' மங்களம் அதிர்ந்து போனாள்.

''இல்லேன்னுட்டாரா? பின்னே அன்னிக்கு கையில ரெண்டாயிரம்தான் இருக்குன்னு நீங்க தயங்கினப்போ, 'அதைக் கொடுத்து நிச்சயம் பண்ணுங்கோ... பாக்கி நாலாயிரத்துக்கு நானாச்சு... கடனாத் தரேன்' அப்படீன்னாரே!''

''சொன்னார்... அது அன்னி நிலைமை... இது இன்னி நிலைமை.''

''இனிமே என்ன பண்ணப்போறேள்?''

''அதான் புரியல்லை... குழம்பறேன்.''

''இன்னும் வேற யாருட்டயாவது கேளுங்கோளேன்னா... தரமாட்டாளா?''

''இனிமே யாரும் நமக்குத் தரமாட்டா... அது நேக்குப்புரிஞ்சு போச்சு. ஏன்னா இனிமே நம்மாலே அவாளுக்கு ஆக வேண்டியது ஒண்ணும் இல்லே... காரணம் என்ன தெரியுமோ? இப்ப நான் இந்தக் கிராம கர்ணீகர் இல்லே... வேலை போயிடுத்து... எதை நம்பித் தருவா? பெருமாள் சொன்னப்புறம் தான் இது நேக்குப் புரிஞ்சுது... அது மட்டும் இல்ல... நம்ப வீட்டுக் கல்யாணங்களுக்கு ஊர்லே உள்ளவா ஆளுக்கு ஒரு செலவா ஏத்துண்டு செய்வா... ஒருத்தர் வந்து பந்தல் போடுவார்... ஒருத்தர் வாழை மரம் கொண்டு வந்து கட்டுவார்... அரிசி மூட்டை வரும்... மளிகைச் சாமான் வரும்... பால் தயிர்வரும்... இனிமே யார்கிட்டயும் போய் எதுவும் கேட்க முடியாதே! தரவும் மாட்டாளே. ஏன்னா... நான் இப்ப கர்ணீகர் இல்லையே! அதனால...''

''அதனால... என்னன்னா பண்ணப் போறேள்?''

''இத பாருங்கோ... தேதி வச்சிருக்கயே தவிர பத்திரிகையா அடிச்சுட்டோம்? இந்தச் சேதியெல்லாம் சம்பந்திக்குத் தெரிஞ்சாக் கேவலம். அதனால, வேற காரணம் சொல்லிக் கல்யாணத்தை ரெண்டுமூணு மாசத்துக்குத் தள்ளிவையுங்கோ... அதுக்குள்ள பகவான் வழி காட்டுவான்.''

கோபால சர்மாவுக்கு அது நல்ல யோசனையாகப்பட்டது. அன்றைக்கே சம்பந்திக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டார்.

''வாங்கோ சர்மா சார்! நீங்க பண்றது நன்னா இருக்கா? யாரோ 'உறவுக்காரா டில்லில இருக்கா; அவா சௌகரியம் பார்க்கணும்'னேள். ரெண்டு மூணு மாசம் தள்ளிப் போட்டேள். சரின்னேன்... மாசம் அதுக்கு மேலேயே ஆயிடுத்து... எப்பத் தேதி வைக்கப் போறேள்? இதைக் கேக்கத்தான் உடனே உங்களை வரச் சொன்னேன்...''

''சம்பந்தி! கோவிச்சுக்கப்படாது. அப்போ நான் சொன்னது பொய். ஒரு இடத்துல உங்களுக்குக் கொடுக்க நாலாயிரம் ரூபாய் கேட்டிருந்தேன். தரேன்னு சொல்லியிருந்தார். இடையில எனக்குக் கர்ணம் வேலை போயிடுத்து. அதனால அவர் கையை விரிச்சுட்டார். உங்ககிட்ட இதையெல்லாம் சொல்லிக்கவே வெட்கமா இருக்கு. புரட்ட முடியலே... அதனாலே...''

''அதுக்கு நான் என்னய்யா பண்ணணும்கிறீர்?''

''அந்த நாலாயிரத்தை என்னால இப்பக் குடுக்க முடியல்லை... நீங்க பெரிய மனசு பண்ணணும்.... அதை இனிமே என்கிட்டக் கேட்கப்படாது...''

''நன்னா இருக்கே நீங்கசொல்றது!''

''நான் கிராமக் கர்ணம். ஊர்ல உள்ளவா கல்யாணச் செலவை ஆளுக்கு ஒரு காரியமா ஏத்துண்டு செய்வா. இது வழக்கம். இதையும் நான் எதிர்பார்த்தேன். இனிமே அதுவும்

கிடைக்காது. அதுக்கும் சேர்த்துப் பணம் தேடணும். அதனலே நான் பேசின பவுன்லே ரெண்டைக் குறைச்கப் போட அனுமதிக்கணும்... வேற வழி இல்லே...''

''இப்படி நீர் சொன்ன வாக்கைக் காப்பாத்தமுடியாத மனுஷஞ இருப்பீர்னு தெரிஞ்சிருந்தா, உம்ம கூடச் சம்பந்தம் பண்ணிக்கவே முன்வந்திருக்க மாட்டேன்...''

''ஆத்திரப்படாதீங்கோ... ஆர அமர யோசிச்சுப் பாருங்கோ... நிர்ப்பந்தம் அப்படி... திடுதிப்புன்னு எனக்கு வேலே போயி, நிலைமை இப்படி ஆகும்னு கண்டேனு?''

''ஓய்! நான் பிள்ளையைப் பெற்றவன். உம்ம இஷ்டத்துக்கு ஆட என்னுல முடியாது. பேசினது பேசினதுதான். அப்படிச் செய்ய உம்மால இப்ப முடியலேன்னு பேசாம வேறே இடம் பாரும்....''

கோபால சர்மா பதறினர். ''சம்பந்தி! இப்படி நிர்த்தாட்சண்யமாப் பேசினு எப்படி? இன்னிக்கு முடியல்ல... பின்னுல ஒரு சமயம் வசதிப்பட்டா, என் பொண்ணுக்குச் செய்யாம வேற யாருக்குச் செய்யப்போறேன் தயவு–பண்ணணும்....'' கெஞ்சினர்.

''நாலேயப் பத்தி யாருய்யா கண்டா... வேணும்னு ஒண்ணு பண்றேன். அந்த நாலாயிரத்துக்கு என்கிட்ட நீர் கடன் வாங்கிண்டாப்பலே ஒரு நோட்டு எழுதிக்கொடும். பின்னுலே அந்தக் கடனே அடையும். ஆறு ரெண்டு பவுனேக் குறைச்சுக்க, என்னுல உத்தரவாதம் தர முடியாது. ஏன்னு, அது என் ஆம்படையாள் இஷ்டம்.''

''சம்பந்தி! அப்படிச் சொல்லாதீங்கோ... இந்த நிலேயில போயி கல்யாணத்தை நிறுத்தினு, நம்ம ரெண்டு பேரோட கௌரவமும் போயிடும்... அதனுல....''

''ஓய்! என் கௌரவம் ஏன்யா போகுது? நான் பிள்ளேயைப் பெத்தவன்யா. உம்ம பொண்ணு இல்லாட்டா, இன்னும் ஆயிரம் பொண்ணு... வேணும்னு உம்ம கௌரவம் இல்ல...இல்ல... உம்ம மானமும் மரியாதையும்தான்யா போகும். ஏன்னு, நீர் பெண்ணேப் பெத்தவர். தெரியுமோல்லியோ?''

''சம்பந்தி! நான் பெண்ணேப் பெத்தவன்கிறதனுலேதான் இப்படி உம்மகிட்ட பணிஞ்சு போறேன். அதுக்காக, நீங்க என்ன பேசினுலும் கேட்டுண்டு போவேன்னு நினேக்காதேங்கோ... நேக்கும் தன்மானம் உண்டு. வரம்பு மீறப்படாது. ஒரேயடியா நாக்குல நரம்பு இல்லாமப் பேசறேள்!'' — சர்மாவின் நெஞ்சு கொதித்தது. அடக்கிக் கொண்டார்.

அதுவரையில் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த மாப்பிள்ளேப் பையன் அடுத்த அறையிலிருந்து வெளிவந்தான். இந்தக் காலத்துப் பையன். இருப்பினும் தகப்பனர் முன்பு என்ன செய்ய முடியும்!


''அப்பா! அவர் கிட்ட இப்படியெல்லாம் நீங்க பேசிண்டு இருக்கிறதே நேக்குப் பிடிக்கல்ல... ஒத்து வரலேன்னு பேசாம அவர் கொடுத்த ரெண்டாயிரத்தைத் திருப்பிக் கொடுத்துட்டுப் போவேளா... அது இல்லாம....''

சம்பந்தி பிள்ளேயைப் பார்த்துக் கண்களே உருட்டினர். அவன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். சம்பந்தி உள்ளே போனர். மகனும் போனன். அங்கு இருவருக்கும் வாக்கு வாதம். மகன் கட்சிதான் வென்றது. சம்பந்தி ரெண்டாயிரத்தோடு வெளி வந்தார். பணம் கைமாறியது. சர்மா அங்கிருந்து கிளம்பினர்.

திருமணம் நின்று போயிற்று. கோபால சர்மாவுக்கு அவமானம் தாங்க முடியவில்லே. வீட்டிலேயே அடங்கிக் கிடந்தார்.

திடீரென்று ஒரு நாள் கடிதம் வந்தது. மாப்பிள்ளேப் பையன் போட்டிருந்தான். பிரித்துப் படித்தார். மனேவியிடம் சொன்னர்.

''மங்களம்! கல்யாணத்தை நிறுத்த வேண்டாம்னு எழுதியிருக்கார். அன்னிக்கு அப்பாவுக்காக அப்படிப் பேசினுளும். ரெண்டு மூணு பவுனே வித்துக் கல்யாணச் செலவைச் செய்துக்கச் சொல்லியிருக்கார். அப்பறம்... இன்னும் ஏழெட்டு நாள்ள, கல்யாணத்துக்கு தேதி வைக்க அவா அப்பா இங்க வரு



நதி ஒன்று கரை மூன்று



ராதிகாதான் நதி. ரொம்பச்சுறுசுறுப்பாய் நடனமாடிக் கொண்டு அடிக்கடி சிரிக்கிறார்.

கரை நம்பர் ஒன்று: சுதாகர்.
வழக்கம்போல் அப்பாவி விவசாயி.

கரை நம்பர் இரண்டு: மோகன்.
டிரிம்மாக இருக்கும் காட்டிலாகா அதிகாரி.
ஜீப் ஓட்டுவது, அடிக்கடி ஜஸ்டினுடன் மோதுவது, காதல் செய்வது—
இவரது பணிகள். ஒரு நல்ல நடிகர் வேஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்.

கரை நம்பர் மூன்று: திருமுருகன்.
விவசாய அதிகாரியான இவரது வேலைகள்:
பைக்கில் சுற்றுவது. அலுவலகத்திலும்(!) மொட்டை வெய்யிலிலும் ராதிகாவை ஓவியமாய்த் தீட்டுவது. அடிக்கடி கண்ணாடியை அட்ஜஸ்ட் செய்வது.

எந்தக் கரையை நதி நாடுகிறது என்பதே கதை.

கவுண்ட மணியும் இருக்கிறார். வழக்கம்போல் அவர் பாணியில் வசனம் பேசி அறுக்கிறார்.

எடிட்டிங்-டைரக்ஷன்: எம்.ஏ. திருமுகம். ஆகவே போனஸ் கீரி-பாம்பு சண்டை.

நினைவில் நிற்கும்படியாக ஒரு காட்சியைக்கூட இயக்காதது இவரது சாதனை.

ஒளிப்பதிவு, எடிட்டிங், இசை எல்லாமே வேண்டா வெறுப்பாய்ச் செய்திருக்கிறார்கள். பேனாவில் மைக்குப் பதில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கதை - வசனம், அடடா!

இடைவேளைக்குப் பிறகு சோகமோ சோகம். ஒரே இழுவை!

நளினி சாஸ்திரி பாஷையில் சொல்லப் போனால் தண்டம் பணம் மட்டுமல்ல, பொன்னான 3 மணி நேரமும்தான்.

– "சிந்து ஜீவா"

வாராம்... அப்போ அந்த நாலாயிரத்துக்கு நோட்டுக் கீட்டு எழுதிக் கொடுக்கா தீங்கோ... எல்லாம் ரகசியமா இருக்கட்டும். அப்படின்னு எழுதியிருக்கார்..."

"தேவலியே! நம்ப வேதா அதிர்ஷ்டக் காரிதான்..." பெற்றோர் பூரித்தனர்.

சம்பந்தி முன் ஹாலில் இருந்தார். ஒரு இளம் பெண் வந்தாள். மாப்பிள்ளைப் பைய னின் பெயரைச் சொல்லி விசாரித்தாள். அவன் வீட்டில் இல்லை.

"நீ யாரும்மா? என்ன விஷயமா அவ னைப் பார்க்கணும்?"

"நான் அவரோட ஆஃபீஸ்லதான் வேலை பார்க்கறேன். ஒரு முக்கிய விஷயமா பார்க்கணும்..."

"ஏதாவது ஆபீஸ் விஷயமா... இல்லே"

"எங்களுக்குள்ளே பர்ஸனல் மேட்டர்."

சம்பந்திக்கு வயிற்றைக் கலக்கியது. "வந்தாச் சொல்றேம்மா."

"நோ... நோ... நாங்க வழக்கமா மீட் பண்ற இடத்திலேதான், எனக்காகக் காத் துக்கிட்டு இருப்பார்... நான் அங்கேதான் போறேன். பார்த்துக்கறேன்."

அவள் போய்விட்டாள். இரவு மகன் வந்ததும் ஜாடையாக விசாரித்தார். வேறு ஜாதிப் பெண்ணாம். சூழ்நிலை விபரீதமாவ தைச் சம்பந்தி புரிந்து கொண்டார். மூளை சுறுசுறுப்பாகியது. நின்றுபோன வரனைப் புதுப்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. கர்ணீகரின் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டார். 'அன் கண்டிஷனல் சரண்டர்'. கல்யாணத்துக்குத் தேதி வைத் துக்கொண்டு வந்துதான் ஓய்ந்தார்.

பாவம்! மகனிடமே ஏமாந்துவிட்டார். அன்று ஆஃபீஸ் ஃப்ரண்டாக வந்தது அவன் ஆபீஸ் டைப்பிஸ்ட்... அவனுக்கு உதவுவதற்காக ஒரு நாடகம்.


'ஜல்...ஜல்'... என்று வாசலில் வண்டி வந்து நின்றது. கர்ணீகர் கோபால சர்மா எட்டிப் பார்த்தார். வந்தது பெருமாள். சர்மா மரியாதை தெரிந்தவர். எழுந்து சென்று வரவேற்றார்.

"என்ன ஐயா? சௌக்கியமா இருக்கிறீங் களா? இப்போது 'ங்களா' என்ற மரியாதை யில் ஒரு அழுத்தம்.

"வா, பெருமாளு!" சர்மாவிடம் பழைய அன்பு, பாசம், பற்று, எல்லாம்.

"அன்னிக்கு ஏதோ ஒரு மனக் கவலே.... கொஞ்சம் தாறுமாறாப் பேசிட்டேன். மனசுல வெச்சுக்கவாணாம்... மைத்தா நானு வந் திருந்தியன்னா, நாலாயிரத்தைக் கொடுத் திருப்பேன்... நீங்களும் வரல்ல... நானாவது வந்திருக்கலாம்... என்னமோ முட்டாள் தனம்... வரல்ல...."

"அதுக்கு இப்ப என்ன பெருமாளு!... பொண்ணு கலியாணம் மறுபடியும் நிச்சய மாயிருக்கு... அதே வரன். சம்பந்திக்குப் பெரிய மனசு... அந்த நாலாயிரத்தை வேண்டாம்னுட்டார்... இப்ப அந்தப் பணத்துக்கு அவசியம் இல்லாமப் போயி டுத்து..."



"தலைமுறை தலைமுறையாக மக்கள் பயன்படுத்திவரும் இந்திய மருந்துகளின் சக்தியே தனி...

அவற்றுள் தனிச்சிறப்பு வாய்ந்தது அமிர்தாஞ்சன்."

தலைமுறை தலைமுறையாக மக்கள் நம்பிக்கையோடு பயன்படுத்திவரும் அமிர்தாஞ்சன் பத்து மருந்துப்பொருள்கள் அடங்கியது. இவை பத்தும் இயற்கையின் அற்புதமான சக்திவாய்ந்த மருந்துகள். அதனால்தான் அமிர்தர்ஞ்சன் ஒரு சக்திமிக்க வலி நிவாரணியாக விளங்குகிறது.

இதன் பயனாக தலைவலி, ஜலதோஷம், உடல்வலி, சுளுக்கு இவை எல்லாவற்றுக்குமே அமிர்தாஞ்சன் விரைவாக நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. அமிர்தாஞ்சன் உபயோகிப்பதால் ஆபத்து இல்லை. இதனால் வேறு தீய விளைவுகள் எதுவும் ஏற்படாது.

அமிர்தாஞ்சன் — 80 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல குடும்பங்களில் பயன் பட்டுவரும் நம்பகமான மருந்து.

அமிர்தாஞ்சன்

தலைவலி. ஜலதோஷம். உடல்வலி. சுளுக்கு — அனைத்தையும் போக்க அருமையான மருந்து.



AM-2148

''அது போயிட்டுப் போவுது ஐயா! கல்யாணச் செலவைப் பத்திக் கவலைப்படாதீங்க... வழக்கப்படி, ஆளுக்கு ஒரு செலவா ஏத்துக்கிட ஏற்பாடுசெய்திடுவோம். கவலையை விடுங்க... பந்தச் செலவு என்னோடது...''

சர்மா குறுக்கிட்டார். ''பெருமாளு! நீ எனக்குப் பணம் இல்லேன்னு சொல்லி, ஏழெட்டு மாசம் ஆயிடுத்து... இத்தனை நாளா நீ இந்தப் பக்கமே வரல்ல... இன்னிக்குத் திடீர்னு வந்திருக்கே... இதோட காரணம் என்னன்னு நேக்குப் புரியாதுன்னு நினைச்சண்டுட்டே நீ... சூழ்நிலை இப்பத் தலைகீழா மாறிடுத்து... என் பிள்ளைக்கு ஆர்டர் வந்து ரெண்டு நாளாயிடுத்து... எனக்குப் பதிலா, இந்த ஊர்லயே, அவனைக் கர்ணமாப் போட்டிருக்கா...பரம்பரை உத்யோகம்னு நினைக்காதே! எல்லாம் சர்வீஸ் கமிஷன் மூலமாத்தான்... பரீட்சை எழுதினன் பாஸாயிடுத்து... வேலை கொடுத்திட்டா... இப்படி ஆகும்னு அன்னிக்கு நீர் எதிர்பார்க்கல்லே... என்னைக் கண்டா கண்டபடி திட்டிப்பிட்டே....''

பெருமாள் பதிலே பேசவில்லை. ஸ்தம்பித்து நின்று விட்டார்.

''இந்தச் சேதி தெரிஞ்ச உடனே, வண்டியைப் போட்டுண்டு இன்னக்கி எங்காத்துக்கே வந்துட்டே.... அது மட்டும் இல்லாம, கல்யாணச் செலவுக்கும் ஊர் வழக்கப்படி அது இதுன்னு ஆளுக்கு ஒரு செலவு ஏத்துக்க ஏற்பாடும் பண்றேங்கறே...''

பெருமாள் குறுக்கிட்டார், ''அதெல்லாம் ஒண்ணும் இல்ல....''

கர்ணீகர் தொடர்ந்தார். ''இதபாரு! நான் பழைய தலைமுறைக்காரன். அந்த நாள்ல, எங்கப்பா ஒரு நடை ஊருக்குள்ள ஒரு சுத்துச் சுத்திட்டு வந்தார்னு. நூறு நூத்தம்பது தேறும்... அறுவடையன்று, மூணு மரக்காலும், 'ஆறு மரக்காலுமா வந்து மூட்டைக் கணக்காக் குவியும். நெல்லு... இன்னும் எத்தனையோ வரும்படி....இப்போ அத்தனை இல்ல... இருந்தாலும் நான் அவர் பிள்ளையா வளர்ந்தவன். அதனால, இந்த மாதிரி ஒத்தாசையே யெல்லாம் எதிர்பார்த்தேன்.... ஏத்துண்டேன்... மேலேமேலே ஏத்துக்கவும் ரெடியா இருந்தேன். இப்பக் காலம் மாறிப்போச்சு..: என் பிள்ளை இந்தக் காலத்துப் பையன். என்னாட்டமா வளரல்ல. இதையெல்லாம் விரும்ப மாட்டான். கேவலம்னு நினைப்பான். என் பிள்ளை மட்டும்னு இல்ல... உன்னோட பிள்ளையும்தான். ஏன்... எல்லாருமேதான்... என் மாப்பிள்ளையைப் பாரேன்... எதிர் ஜாமீன் வாண்டாம்னுட்டு, தந்திரமா அப்பாவையே ஏமாத்திட்டானே! இவாள்ளாம் இளைய தலைமுறை... அவா பண்றதுதான் சரி... ஏன்னு இனிமே வரப்போற உலகம் அவாளுது... நாமெல்லாம் தார் போட்ட வாழை மரம். நம்ப காலம் முடிஞ்சு போச்சு. கீழ்க் குறுத்துதான் இனிமே வளரணும்... அதுக்கு நாம இடைஞ்சலா இருக்கப்படாது... ஒதுங்கிக்கணும். அதான் கௌரவம். இல்லேன்னு ஒதுக்கிடுவா...'' — கர்ணீகர் ஆவேசம் வந்தது போலப் பேசினார். பெருமாளிடம் பதில் இல்லை.

கோபால சர்மா தொடர்ந்தார்.

''இன்னிக்கு உலகத்துல எல்லாமே தலைகீழா மாறிண்டு வரது. இப்ப இருக்கிற பழக்க வழக்கம், சட்ட திட்டம், இன்னும் தர்மங்கள் எல்லாம் பழைய குப்பைகள். என்னிக்கோ ஏற்பட்டது. யார் யாரோ ஏற்படுத்தினது. இப்பப் புதுயுகம் பிறந்துண்டு வரது... அதுக்கு ஏத்தாப்போல தர்மங்கள் மாறித்தான் ஆகும்... ஆகணும்... தடுக்க யாராலும் ஆகாது... தடுக்கவும் கூடாது... ஏன்னு, இதெல்லாம் பரிணாம வளர்ச்சி... நிற்காது... வந்துதான் ஆகும்.

''எந்த மாற்றத்துக்கும் முதல்லே எதிர்த்தாக்குதல் இருக்கத்தான் செய்யும். அப்பறம் கொஞ்சம் கொஞ்சமா, அது மாறி அமையும். கடைசியில், இந்தச் சமுதாயம் அதைத் தன்வயமாக்கிண்டுடும் அதனால...''

சர்மாவிடம் ஒரு களைப்பு! நீண்ட பெருமூச்சு!

பிறகு சொன்னார்: ''அதனால மாற்றம் வரட்டும். நம்ப நாட்டு இளைய தலைமுறைக்காரா எல்லாம் நேர்மையா முன்னேறட்டும். அப்பத்தான் நாடு உருப்படும். நம்பளைப் போல இருக்கிற வயசானவாள, நம்பளோட பழைய குப்பையை எல்லாம் அவாகிட்டப் புகுத்தி, அவாளைக் கெடுத்துட வேண்டாம். சொல்றேன்னு கோவிச்சக்கப்படாது... பத்திரிகை அனுப்பறேன்... அவசியம் கல்யாணத்துக்கு வாங்கோ..''

கர்ணீகர் கோபால சர்மாவின் ஒவ்வொரு சொல்லிலும் பரிணமித்து வரும் புதுயுக தர்மங்களின் சாயல் பளிச்சிட்டு மின்னியது.

4

மாலை மணி ஐந்து. சூரியன் இன்னும் சூடாகவே இருந்தான். பார்வதி டாக்டர் ஆனந்தையும் கோவிந்தராஜாச்சாரியையும் தேநீர் விருந்துக்கு அழைத்திருந்தாள். எல்லோரும் மகிழ்ச்சி பொங்க ஹாலில் உட்கார்ந்திருந்தார்கள். ப்ரியா சோபா, நாற்காலிகளை அழகாக மாற்றியமைத்து வைத்திருந்தான். வீட்டை அழகுபடுத்த வேண்டும் என்ற ஒரு புத்துணர்ச்சி அவன்மேல் வழிந்து ஓடியது.

டாக்டரும் வக்கீலும் ஒரு பெரிய சோபாவில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கெதிராக வீல் சேரில் பார்வதி. அவளுக்கு மிக மிக அருகில் கிரிஷ். பார்வதி கிரிஷை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சாப்பிடுவதை ரசிப்பதில் அவளுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. ப்ரியா எல்லோரையும் உபசரித்துக் கொண்டே தானும் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். தேநீர் விருந்துக்கு என்ன கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி அவன் சிந்தித்து ஆராய்ந்து இன்பண்டங்களைத் தயார் செய்திருந்தான்.... மிந்திரிப் பருப்பு அல்வா... கீரைப் பக்கோடா... விஜிடபிள் சோமாஸ், உருளைக்கிழங்கு கேரட் வடை, நேந்திரங்காய் வறுவல்... க்ரேப் ஜூஸ்... மிக்ஸ்ட் ஃப்ரூட் ஸாலட். பார்வதியைத் தவிர மீதி எல்லோருமே வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள். முக்கியமாக கிரிஷ்! கிரிஷின் வெள்ளித் தட்டு சில நொடிகளிலேயே காலியாகிக் கொண்டிருந்தது. ப்ரியா அதை மீண்டும் நிரப்புவான். போதுமென்றோ, வேண்டாமென்றோ சொல்லும் அறிகுறிகள் எதுவும் கிரிஷிடம் காணப்படவில்லை. அதை ப்ரியாவும் ரசித்தான்.



சாப்பிட்ட பிறகு எல்லோரும் பார்வதியின் படுக்கை அறைக்குள் புகுந்தார்கள். பார்வதி தன்படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்தாள். ப்ரியா மீண்டும் எல்லோருக்கும் க்ரேப் ஜூஸ் பரிமாறினான்.

''டாக்டர்... மிஸ்டர் சாரி,'' பார்வதி தொண்டையைச் சரிசெய்து கொண்டாள். ''நீங்க எல்லாரும் என் கிரிஷை மீட் பண்ணியாச்சு. அதாவது என் மகனை! அவன் திரும்பி வந்ததை ஸெலிப்ரேட் பண்றதுக்குத்தான் இந்த டீபார்ட்டி... நான் ஒரு பைத்தியம். இந்த ஸிம்பிள் விஷயத்தைப் போய் ஒங்களுக்கெல்லாம் பெரிசா எக்ஸ்ப்ளேன் பண்றேனே! ம்... சரி. எல்லாத்தையும் விட உங்களுக்கு ஒரு விஷயத்தைப் பத்தி சொல்லப் போறேன். நத்திங் நியூ பட்.... அதாவது என்னுடைய மகன்-ப்ரியா, அவங்க விஷயம்!''

ஆனந்த் லேசாகக் கையைத் தட்டினார். கோவிந்தராஜாச்சாரி பார்வதிக்குப் பின்னால் மோடாவில் உட்கார்ந்திருந்த ப்ரியாவைப் பார்த்துச் சிரித்தார். அவளுக்கு கிரிஷின் கண்கள் தன்னை அளந்து எடை போடுவது சற்று சுகமாகவே இருந்தது. கிரிஷின் கண்களில் ஒரு தனி வகையான

கவர்ச்சி இருப்பதாக அவளுக்குப் பட்டது. ஒரு ஆணின் கண்களுக்கே இப்படியென்றால் அவன் கைகள்... உதடுகள்... ப்ரியாவின் உடல் லேசாகக் குளிர்ந்தது.

''எஸ். அவங்களைப் பத்தித்தான். ப்ரியாவும் கிரிஷ்-ம் இன்னும் கொஞ்ச நாள்லே தம்பதியாகப் போறாங்க!'' பார்வதி தலையைச் சாய்த்துச் சிரித்தாள்.



''ஹியர்! ஹியர்!'' ஆனந்த் கையைப் பலமாகத் தட்டினார். எல்லோருடைய முகங்களிலும் சந்தோஷத்தின் எதிரொலி. அறையில் சிரிப்பின் ஒலி. ப்ரியா மட்டும்தான் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பார்வதி மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

''மிஸ்டர் சாரி நான்' ஒரு மேஜரோட ஒய்ஃபா—இருக்கலாம்.' ஆனா சில விஷயங்கள்லே நான் கொஞ்சம் ஓல்டு ஃபாஷன்... அட்வகேட் சார் நீங்க ஒண்ணு பண்ணணும். ஒங்க வீட்டுக்கெல்லாம் வருவாங்களே ப்ராமின் ப்ரீஸ்ட் அவரைக் கொஞ்சம் அனுப்புங்களேன். நல்ல நேரம், நாள் அதெல்லாம் பார்க்கணும். எனக்கு என்னவோ அதுலெல்லாம் இன்னும் நம்பிக்கை இருக்கு.''

''அது நல்லதுதானேம்மா. ஆர்மிலேயிருந்தாலும் நீங்கள்ளாம் அந்தக் காலத்து மனுஷா...காலம் மாறிப்போச்சுன்னு சொன்னாலும், உள்ளே எட்டிப் பார்த்தா ஒண்ணும் மாறலே. கோவிலே மூடுன்னு கொடிபிடிக்கிறவா ஆத்ல கூடப் பெருமாளுக்கு நைவேத்தியம் நடக்கிறது. எனக்கே அந்த மாதிரி க்ளையண்ட்லெல்லாம் இருக்கா. எங்க ஃபேமிலி ஜோஸ்யர் பத்மநாப அய்யங்காரை அனுப்பறேன். அந்த நாள்லே வெள்ளைக்காரனுக்கே ஜாதகம் பார்த்தவர் அவர் இப்ப ஒங்களுக்கும் மாட்டுப் பொண்ணுான்னு வரப்போ அவரோட டச் வெச்சுக்கிறது நல்லது.''

''தேங்க்யூ மிஸ்டர் சாரி! அவரை அனுப்புங்கோ.''

சற்று நேரம் கழித்து சாரி சென்றுவிட்டார். ப்ரியா அவரைக் காரில் ஏற்றிவிட்டுத் திரும்பி வந்தாள்.

''ப்ரியா இங்கே வாம்மா. என் பக்கத்திலே உட்கார்.''

பார்வதி படுக்கையைத் தட்டினாள்.

ப்ரியா உட்கார்ந்தவுடனே அருகிலிருந்த கிரிஷின் வெப்பம் அவளைச் சூழ்ந்தது.

''எஸ் மம்மி.''

''ப்ரியா.... டாக்டர் எல்லாருமே கேளுங்க. இந்த நல்ல நாள்லே இன்னும் ஒரு முக்கியமான வேலை பாக்கி யிருக்கு.''

''அது என்னமம்மி?'' கிரிஷ் ப்ரியாவை முறைத்துப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

பார்வதி தன் படுக்கை அடியிலிருந்துஒரு நீளமான கவரை எடுத்தாள். அவளுடைய உயில்!

''அது என்னதும்மா அது?'' கிரிஷின் முகம் லேசாகச் சுழித்தது.

''பொறுமையா இருடா... எதுக்கெடுத்தாலும் கேள்வி கேக்கறது ஒரு ஃபாஷனாப் போயிடுச்சு. இது என்னுடைய உயில்.''

''என்னது? உங்க உயிலா? என்னம்மா இது? இதெல்லாம் எனக்கு ஒண்ணுமே புரியலே.''

ஆனந்த் தம் கையை உயர்த்தினார்.

''கிரிஷ் லெட் ஹர் எக்ஸ்பிளெயின்... ஒங்கம்மா அவங்க உயிலெ ஏற்கனவே நம்ம வக்கீலெ வச்சு எழுதியாச்சு. அதுக்குச் சரியான காரணங்கள் இல்லாமெ செஞ்சிருக்க மாட்டாங்க. ஒங்க மதர் ரொம்ப இண்டலிஜெண்ட் லேடி....''

''கிரிஷ், டாக்டர் சொல்றது கரெக்ட். நான்' சொல்றதைக் கவனமா கேளுடா... எனக்கோ வயசாச்சு. ஹெல்த்தும் சரியா இல்லே. அதனாலெதான் இந்த உயிலே எழுதி முடிச்சேன்... இந்தா ப்ரியா இதப் பத்திரமா வெச்சுக்கோம்மா. ஒங்கிட்ட ஒப்படைக்கிறேன். இனிமே எல்லாப் பொறுப்பும் ஒன்னுது.''

''மம்மி எங்கிட்ட எதுக்குக் கொடுக்கிறீங்க?''

ப்ரியா ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''ஏன் என்னுன்னு கேட்கக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன் ப்ரியா உனக்கு. வாயை மூடிண்டு நான் சொல்றதைப் பண்ணு. இந்தா''

ப்ரியா அந்தக் கவரைக் கையில் வாங்கிக் கொண்டாள். ஒரு நீண்ட நொடி அதை முறைத்துப் பார்த்தாள். பிறகு கட்டிலை விட்டு இறங்கி மூலையிலிருந்த மேசையைப் பார்த்து நடந்தாள். அதன் மேல் கிரிஷின் சிவப்பு நிறப் பெட்டி. ப்ரியா என்ன செய்யப் போகிறாள் என்று எல்லோரும் ஆவலோடு பார்த்தார்கள்.

''ப்ரியா என்ன பண்றே நீ?'' இது பார்வதியின் கேள்வி.

ப்ரியா பதிலேதும் சொல்லாமல் அந்தப் பெட்டியைத் திறந்து அதன் இடது பக்கத்தில் உள்ள பையில் உயிலை வைத்து மூடினாள்.

''ப்ரியா அதை ஏன் நீ கிரிஷ் பாக்ஸ்லே வெச்சே! நான் ஒங்கிட்டக் கொடுத்தேன். நீ என்னடான்னா... எனக்கு ஒண்ணும் புரியலே போ.'' பார்வதி புருவங்களை உயர்த்தி முறைத்துப் பார்த்தாள்.

''மம்மி அது உங்க பிள்ளைக்குச் சொந்தம். அவர் பெட்டிலே இருக்கிறதுதான் கரெக்ட்''

ஆனந்த் குறுக்கிட்டுப் பேசினார். ''மேடம் ப்ரியா சொல்றதிலே பாய்ண்ட் இருக்கு. பிகாஸ் அவளே கிரிஷுக்குச் சொந்தமாகப் போறவதானே ஒரு ஸிம்பாலிக் டச் மாதிரி அவ செஞ்சது!''

''அட அப்படியா அது! நான் ஒரு பைத்தியம் இதெல்லாம் எனக்கு எப்படிப் புரியும். என்ன இருந்தாலும் நம்ப ப்ரியா ரொம்பக் கெட்டிக்காரிதான்.''

பார்வதியுடன் மற்றவர்களும் சிரித்தனர், ப்ரியா உட்பட.

மணி எட்டு அடித்தது. ஓய்வு எடுத்துக் கொள்ள கிரிஷ் ஹாலுக்கு அந்தப்புறத்திலுள்ள தன் அறைக்குச் சென்று விட்டான். ப்ரியா அவனுக்கு அந்த இடத்தைக் காட்டினாள். அதற்குள் டாக்டர் ஆனந்த் தம் காருக்குச் சென்று கையில் தம் 'மெடிகல் பேக்' உடன் திரும்பி வந்தார்.

''டாக்டர் இதென்னது இந்த நேரத்துலே'' பார்வதியின் குரலில் சற்றுக் கோபமும் கலந்திருந்தது.

''ஒன்றுமில்லே மேடம். ஒங்களுக்கு ஒரு குட் நியூஸ்.''

''அது என்ன டாக்டர்?''

''இன்னியிலேருந்து உங்களுக்கு மருந்து கிடையாது!''

அதைக் கேட்டுக் கொண்டே வந்த ப்ரியாவின் முகத்தில் ஆச்சரியம். பார்வதி சந்தோஷத்தால் சிரித்தாள்.

''ஆமாம்மா ஒங்க புள்ளே வந்துட்டான் இல்லியா? இனிமே எதுக்கு மருந்தெல்லாம்... ப்ரியா இன்னிலேந்து ஸ்டாப் எவ்ரிதிங்... இந்த டாப்லெட்ஸ், இன்ஜெக்ஷன்ஒண்ணும் வேண்டாம்.''

''தேங்க்யூ டாக்டர், தேங்க்யூ'' பார்வதி நீண்ட பெருமூச்சை விட்டாள்.

''ப்ரியா நீ ஒண்ணு பண்ணு. இன்னிக்கி மட்டும்...'' ஆனந்த் தம் பையிலிருந்த ஒரு பிரிஸ்கிரிப்ஷன் பேடை எடுத்து வேகமாக எழுதினார். அதை ப்ரியாவிடம் கொடுத்தார்.

''ப்ரியா டேக் இட். இந்த மாத்திரை நாளேலேருந்து டெய்லி ரெண்டு கொடு. மத்தியானம், ராத்திரி, சாப்பாட்டுக்குப் பின்னாடி... இது வெறும் ஜெனரல் டானிக் மாதிரி.''

ப்ரியா டாக்டர் கொடுத்த காகிதத்தை வழக்கமாக மருந்துகளை வைக்கும் சிறிய டிராயரில் வைத்தாள். அவள் திரும்பிப் பார்த்தபோது டாக்டர் தம் பையிலிருந்து ஒரு பச்சைநிற பாட்டிலை வெளியே எடுத்துக் கொண்டிருந்தார்.

''டாக்டர் இதென்னது புதுசா?'' பார்வதியின் குரலில் இப்போது வெறுப்புக் கலந்திருந்தது.

''மேடம் நான் ப்ரியா கிட்டசொல்றேன். நீங்க ஒண்ணும் அப்ஸெட் ஆகாதீங்க... ஏக் ப்ரியா இன்னிக்கி கிரிஷ் திரும்பி

ரோஜா - மீரா – ஜோரா

அட்டைப் படத்தில் உள்ள மீரா பார்பியப் பாவை போல் தோற்றமளிக்கிறார். இல்லையா? ரோஜாப் பூக்களை அள்ளி இறைத்தாற் போன்ற 'ஸ்கர்ட்'டும்' எம்ப்ராய்டரியுடன் கூடிய 'டாப்'பும் அணிந்து முன்னாள் ஃபாஷனான நந்தினி கொண்டையை உச்சந்தலைக்கு இடம் மாற்றிய பெருமிதத்துடன் உட்கார்ந்திருக்கும் மீராவை வண்ணப் படம் பிடித்தவர்: ஹக்மோகன்.





"ஜனதாசெம் பளிச்சென்று இருக்க
பல கலர்களில் சேர்த்து அடிக்கலாம்
அதற்காக இப்படியா?"
ஜனதாசெம்
செமண்ட் பெயிண்ட்
குறைந்த அளவு நிறைந்த பரப்பிற்கு.
பிரத்யேக விற்பனைப் பிரதிநிதிகள் :
சென்னை நகரம் : M/s ஜோதி பெயிண்ட்ஸ்,
புரசைவாக்கம் போன் : 664131
EP-J-102-81

ராண்டார்கை செய்த வேண்டாத காரியம்!

■ "வருவான் ராஜகுமாரன்" என்ற இந்த நாவல் ராண்டார்கை அவர்களே எழுதி சென்னை டி.வி. நிலையம் ஏற்கனவே ஒளி பரப்பிய ஒரு நாடகத்தைப் போலவே இருக்கிறதே?" என்று கேட்டு எங்களுக்குச் சிலகடிதங்கள் வந்துள்ளன.

ஏற்கனவே டி.வியில் ஒளிபரப்பான ஒரு நாடகத்தின் அடிப்படையில்தான் இந்த நாவலைத் தாம் எழுதப் போவதாக ராண்டார்கை எங்களுக்குத் தெரிவிக்காதது அதிர்ச்சி தருகிறது.

இது பற்றி வினவியபோது, அதில் தவறேதும் இல்லை என்பது போன்ற தொனியில் ராண்டார்கை எங்களுக்குக் கடிதம் எழுதியிருப்பது இரட்டிப்பு அதிர்ச்சி! அவரது மர்ம நாவல்கள் கூட இத்தனை அதிர்ச்சி அளிக்காது.

எனினும் இச்சிறு நாவல் ஏற்கனவே நான்கு வாரங்கள் பிரசுரமாகி விட்டதாலும் கல்கியின் வெளியூர் வாசகர்கள் டிவி நாடகத்தைப் பார்க்க வாய்ப்பிருந்திருக்காது என்பதாலும் அவர்களுக்கு ஏமாற்றம் உண்டாகாதிருக்க நாவல் தொடர்கிறது. —ஆசிரியர்

வந்ததாலே ஒங்க மம்மிக்கு ஏகப்பட்ட எக்ஸைட்மெண்ட்... ஏற்கனவே அவங்களுக்கு ஹார்ட் வீக். ஸ்டெரெயினைக் குறைக்கறதுக்குத்தான் இதைச் சாப்பிடணும்... இதில் ரெண்டு டேப்லெட் இருக்கு. தூங்கறதுக்கு முன்னாடி ரெண்டையுமே கொடு. ஒரு கிளாஸ் சூடான பாலோடு. எவ்ரிதிங் வில் பீ ஃபைன்!"

"அப்பாடா. இந்த ரெண்டு மாத்திரையோட விட்டீங்களே. தேங்க்யூ? டாக்டர்." பார்வதி சிரித்தாள்.

பச்சை நிறப் பாட்டில் கைமாறியது.

"ப்ரியா கடைசியா கிரிஷ் எங்கே, என்னிக்கி பால் சாப்பிட்டானோ தெரியாது... அவனுக்குக் கொடுக்கற பால்லே நெறைய சர்க்கரை போடு. திக்காக் காச்சு... நம்ம வீட்டுலே குங்குமப்பூ இருக்கணும் இல்லேன்னு வாங்கிடு. பாதாம் பருப்பு, மிந்திரிப் பருப்பு, பிஸ்தா பருப்பு இதையெல்லாமும் வாங்கிடு. அதையெல்லாம் அரைச்சுப் பால்லே மிக்ஸ் பண்ணிக் கொடு. ரொம்ப ஹெல்த்தி. ப்ரியா நீயும் ஒரு டம்ளர் அடி. அந்த நாள்லே நான் மேஜருக்குத் தெனம் கொடுப்பேன்... அப்படியெல்லாம் சாப்பிட்டதினாலேதான் இத்தனை வியாதி வந்தும் பொழச்சி இருக்கேன். ரெண்டு பேரும் ஒரு கிளாஸிலே சாப்பிடணும்னு அவர் அடம் பிடிப்பாரு. அந்த நாள்லே அதுவே பெரிய விஷயம்..."

ப்ரியாவுக்குச் சிரிப்பு வந்தது.

படுப்பதற்கு முன் வெள்ளி டம்ளரில் பாலுடன் கிரிஷின் அறைக்குப் போனாள்.

தட்டியவுடனே கதவைத் திறந்தான் அவன். முழங்காலுக்கு மேல் பிடித்தமான ஒரு அரை நிஜார். அதற்கு மேல் ஒன்றுமில்லை. கட்டுமஸ்தான அவன் உடலில் எங்கு பார்த்தாலும் அடர்த்தியான முடி. லேசாக மயக்கத்தை ஏற்றும் ஆண் வாடை. அவளுக்குத் தலை சுற்றியது.

"ஹலோ... ஹலோ ப்ரியா நீயா! உள்ளே வாயேன்." கதவை நன்றாகத் திறந்துவிட்டான் கிரிஷ்.

ப்ரியா சங்கோஜத்துடன் உள்ளே சென்றாள். தனியாக இருக்கும் ஒரு ஆணின் அறையில் காலடி எடுத்து வைப்பது அவளுக்குப் புதிய அனுபவம். பால் டம்ப்ளரைக் கொடுக்கும்போது தன் விரல்களை கிரிஷ் சற்று அதிகமாகவே அழுத்தியதாகப் பட்டது அவளுக்கு. அவன் கைகள்... குட்டையான தடியான விரல்கள்...

"ப்ரியா உட்காரேன். இதோ டம்ப்ளரைக் கொடுக்கிறேன்."

"பரவாயில்லே. கார்த்தாலே எடுத்துக்கறேன். இங்கேயே இருக்கட்டும்."

அந்த நொடிகளை நினைத்துப் பார்க்கும்போதே அவள் உடல் புல்லரித்தது.

ப்ரியா படுக்கையில் புரண்டாள். கிரிஷின் கண்கள், முடியால் மூடப்பட்ட உடல், பாலை உறிஞ்சிடும் அவன் உதடுகள். அவளை என்னவோ செய்தன. மூச்சு சூடேறி லேசாக வியர்க்கத் தொடங்கியது. தூங்க வேண்டும் என்ற ஆசையே ஓடிப்போய் விட்டது.

...காலை ஏழு மணி. ப்ரியா எழுந்து குளித்துப் பார்வதியின் அறைக்குச் சூடான டீயுடன் சென்றாள். காலையில் எழுந்தவுடன் 'பெட் டீ' சாப்பிடுவது வழக்கம். ப்ரியா படுக்கை அறையில் நின்றுகொண்டு பார்வதியைப் பார்த்தாள். சாதாரணமாகப் பார்வதி ஆறரை மணியளவில் எழுந்திருப்பாள். ஆனால் அன்று இன்னும் எழுந்திருக்கவில்லை. "மம்மி....மம்மி...."

ப்ரியா பார்வதியின் முதுகை லேசாகத் தட்டினாள். சில நொடிகள் பொறுத்துப் பார்த்தாள்.


"மம்மி ஒங்க டீ... பையன் வந்தாச்சுன்னு இன்னிக்கு ஜாஸ்தி தூக்கமோ!"

புன்சிரிப்புடன் பார்வதியின் நெற்றியைத் தொட்டாள். அது சில்லென்றிருந்தது.. சிரிப்பு சுருங்கியது. கைகளை, முகம்... கழுத்து மார்பு எல்லா இடங்களிலுமே ஓட விட்டாள். உடலெங்கும் சில்லிட்டிருந்தது. அவளையும் அறியாமல் கை பார்வதியின் மூக்கை நோக்கித் தாவியது. மூச்சைக் காணோம்!

உடல் நடுங்க, கண்கள் விரிய அவள் பயங்கரமாகக் கத்தினாள்.

"கிரிஷ்! கிரிஷ்!... சீக்கிரமா வாங்களேன்.... மம்மி... மம்மிக்கி.... எனக்கு ரொம்பப் பயமா இருக்கு... கிரிஷ்! மம்மி போயிட்டாங்க போலேருக்கு கிரிஷ்!" ப்ரியா பயங்கரமாக வெகு நேரம் அலறிக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)



மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
matt finish
EYETEX
ஐடெக்ஸ்
38 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
அரவிந்த் லாபரடரீஸ் சென்னை 600033.
Imageads-AL-1304 Tam

நெருஞ்சிக் காட்டில் ஒரு குறிஞ்சிப் பூ

ராஜேஷ்குமார்



இரவு மணி பதினொன்று.

போர்டிகோவில் வந்து நின்ற காரினின்றும் ஏகப்பட்ட அலுப்பைச் சுமந்து கொண்டு கீழே இறங்கினாள் நடிகை கலாப்ரியா.

'சே! ஒரு டான்ஸ் ஷெட்யூலை எடுப்பதற்குள் இடுப்பை முறித்து விட்டான்கள்!'— வாய் விட்டுத் திட்டிக் கொண்டே, வெறுமனே சாத்தியிருந்த வாசல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனவள்— ஹாலில், அரை இருட்டில் சோபா-கம்-பெட்டில் உட்கார்ந்தபடி எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த கணவன் விமல் குமாரைப் பார்த்ததும் திகைத்துப் போனாள்.

'அட, அவுட் டோர் ஷூட்டிங் முடிஞ்சு எப்ப வந்தீங்க?'' — அவனை ஆவலோடு நெருங்கி அவன் மேல் இடித்துக்கொண்டு உட்கார்ந்தாள். அவன் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் குரல் கரகரக்கக் கேட்டான். ''ஏன் லேட்?''

''அதை ஏன் கேட்கறீங்க விமல்! அந்தப் புது டைரக்டர் புஷ்பராஜ் படத்துக்கான ஒரு டான்ஸ் ஷெட்யூல் இன்னிக்கு! நான் சரியாத்தான் ஆடினேன்... அவருக்கென்னவோ பிடிக்கல்லே... ஆயிரத்தெட்டுத் தடவை கட் சொல்லி—ஆயிரம் அடி பிலிம்மை வீணாக்கினப்புறம்தான் ஷாட் ஓ.கே. ஆச்சு! ஆமா, நீங்க எப்ப வந்தீங்க? எத்தினி டேட் காட்சி ஷூட் பண்ணாங்க? ... ஊட்டியிலே குளிர் அதிகமாமே?''

கலாப்ரியா ஆர்வமாய்க் கேட்க—கேட்க...

''டான்ஸ் ஷெட்யூல் எந்த ஸ்டுடியோவில நடந்தது?'' கடுமையாகக் கேட்டான்.

''வாஹினியில்!''

''கால்ஷீட் மத்தியானம் ரெண்டு மணிக்குத்தானே உனக்கு?''

''ஆமா....!''

''நீ காலைல பத்து மணிக்கே வெளியே புறப்பட்டுப் போயிட்டதா வேலைக்காரி வள்ளியம்மா சொன்னாளே!''

''நவநீத் புரொடக்‌ஷன்ஸ் போன் பண்ணியிருந்தாங்க... அவங்க எடுக்கப் போற படத்துல ஒரு செகண்ட் ஹீரோயின் பார்ட் எனக்கு. கதை பத்தி டிஸ்கஸ் பண்ணப் போறதாகவும் சம்பந்தப்பட்ட அத்தனை பேரும் வரணும்னும் சொல்லியிருந்தாங்க. பெரிய கம்பெனி... மறுக்க முடியல்லே... போனேன்!''

''டிஸ்கஷன் எங்கே நடந்தது?''

''ஓட்டல் தாஜ்ல! ஆனா சொன்னபடி இன்னிக்கு டிஸ்கஷன் நடக்கல்லே.... கதாசிரியர் வீட்ல யாரோ தவறிட்டாங்களாம். அதனால டிஸ்கஷனை ஒத்தி வெச்சுட்டாங்க. நான் ஓட்டலுக்குப் போனப்ப அங்கே யாரும் இல்லே. நவநீத் புரொடக்‌ஷன்ஸ் பார்ட்னர்ஸ் மூணுபேரும் மட்டும் இருந்தாங்க!''

''அவங்க கூடப் பேசிக்கிட்டிருந்தியாக்கும்!'' என்று விமல்குமார் வன்மமாய்ப் புன்னகைத்தான்.

''ஆமா!''

''அப்போ இந்தப் பத்திரிகையில வந்திருக்கிற நியூஸுக்கு நீ என்ன பதில் சொல்லப் போறே?'' — கையில் சுருட்டி வைத்திருந்த ஒரு செய்தித் தாளை அவள் மடிமேல் வீசியெறிந்தான் விமல்குமார்.

பத்திரிகையைப் பிரித்தவளின் விழிகளில் அந்தச் செய்தி சிக்கியது.

'கலையைப் பிரியமாகக் கொண்ட ஒரு நடிகையும் ஒன்பதாம் எண்ணைத் தலைப்பாகக் கொண்ட ஒரு புரொடக்‌ஷன்ஸின் மூன்று பார்ட்னர்களும் மொகலாய மன்னரின் காதல் சின்னமான ஓட்டல் ஒன்றில் — ஒரே அறையில் பட்டப்பகலில் மூன்று மணி நேரம் கதையைப் பற்றி டிஸ்கஷன் செய்தார்களாம். டிஸ்கஷன் செய்தது அந்தக் கதையையா? இல்லை அந்த நடிகையையா? அந்த விண்ணளந்த விமலநாதனுக்கே வெளிச்சம்!'


வெகுண்டாள் கலாப்ரியா. ''நான் ஒரு நடிகைன்னு தெரிந்துதானே என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க. நீங்களும் ஒரு நடிகர். நானும் ஒரு நடிகை. ரெண்டு பேருக்குமே இந்த சினி பீல்டின் பலஹீனங்களும் தெரியும்; பலங்களும் தெரியும். நீங்க தொட்டுத் தாலி கட்டின நாள்லேருந்து நான் சுத்தமாகத்தான் இருக்கேன்... இதை நம்பறதும் நம்பாததும் உங்க இஷ்டம்.''

''பளீர்!'' ஆவேசமாய்ப் பேசிக் கொண்டிருந்த கலாப் ப்ரியாவின் கன்னத்தை நோக்கிக் கையை வீசினான் விமல்குமார்.

நெருப்பாய் எரியும் கன்னத்தைப் பிடித்துக்கொண்டு —

கணவனை முறைத்தாள், கலாப்ரியா.

நினைக்க நினைக்க மனசு ஆறவில்லை விமல் குமாருக்கு!



எத்தனை துச்சமாய் எடுத்தெறிந்து பேசுகிறான்!

இவனை இப்படியே விட்டு வைத்தால் ரொம்பவும் துளுத்துப் போய்விடுவான். இவனை ஆரம்பத்திலேயே தட்டி வைக்க வேண்டும்.

எப்படி? யோசிக்க ஆரம்பித்தான்.

இரவு முழுக்கத் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டதுதான் மிச்சம். உருப்படியாய் ஒரு யோசனையும் உதிக்கவில்லை.

மறு நாள் காலை குளித்து உடை மாற்றிக் கொண்டு ஸ்டுடியோ புறப்பட்டுப் போக ஹாலுக்கு வந்தபோது அந்த யோசனை 'சம்பாலால்' வடிவில் சோபா-கம்-பெட்டில் உட்கார்ந்திருந்தது.

சம்பாலால் — இண்டியில் உள்ள மருந்துக் கம்பெனி யொன்றின் மானேஜிங் டைரக்டர் ஆரம்ப காலங்களில் விமல்குமாரோடு படித்தவன். இருவர் துறைகளும் வெவ்வேறாகி விட்டபடியால் சந்திப்புகளும் அபூர்வமாய் இருந்து வந்தது.

இன்றைக்கும் அந்த அபூர்வம் நிகழ்ந்தது.

''சம்பா... நீயா? எப்ப வந்தே?'' — ஆர்வமாய் வரவேற்றான் விமல்குமார்.

விமல்! எங்க மருந்து கம்பெனியோட வெள்ளி விழா ஆண்டு. வர்ற வாரம் ஜூபிலியை யொட்டி ஒரு சின்ன விழா ஏற்பாடு பண்ணியிருக்கோம். சீப்-கெஸ்ட்டா நீ வந்து கலந்துக்கணும்...கம்பெனி சேர்மன் கண்டிப்பாச் சொல்லிட்டார். என்ன வர்றியா...?''

''வர்ற வாரமா? எந்த டே?''

''சாட்டர்டே சனிவிங் பைவ்-தர்ட்டிக்கு பங்ஷன்.''

விமல் குமார் ஒரு விநாடி யோசித்தான்.

''வர்றேன்... கண்டிப்பா வர்றேன். அன்னிக்கி எனக்கு ஷெட்யூல் ஏதும் இல்லே!''

''தேங்க்யூ விமல்!''

அப்போதுதான் விமல் குமார் அவன் கையிலிருந்த மருந்துப் பெட்டி அட்டையைப் பார்த்தான்.

''என்ன சம்பா இது?''

''எக்ஸ்பரிமெண்டுக்காக லேபுக்குக்கொண்டு போக வேண்டிய மருந்து!''

''என்ன மருந்து?''

''அதை ஏன் கேக்கறே போ! காம்பினேஷனையும், பார்முலாவையும் மாத்தி தவறுதலா தயாரிச்சுட்டாங்க இந்த மருந்தை. பாய்சன் ஆயிடுச்சு. உடம்பு மேலே ஒரு துளி பட்டாப் போதும். சில மணி நேரத்தில உடம்பு பூராவும் கறுப்புக் கறுப்பா வட்டம் வட்டமாப் புள்ளிகள் விழ ஆரம்பிச்சுடும். ரத்தத்தில வேகமாகப் பாயற மருந்து இது. நல்ல வேளையா மார்க்கெட்டுக்குப் போறதுக்கு முன்னாடி டெக்னீஷியன் ஒருத்தர் கண்டு பிடிச்சுட்டார். நாங்க தப்பிச்சோம்!''

விமல்குமார் ஆர்வமானான்.

''எங்கே அந்த மருந்தை எடு பார்க்கலாம்!''

சம்பாலால் அட்டைப் பெட்டியைப் பிரித்தான். உள்ளே ஐம்பதுக்கும் மேற்பட்ட நீல

வண்ணச் சின்னச் சின்னப் பாட்டில்களில் அந்தத் திரவம் நிரம்பி யிருந்தது.

சாப்பிட்டுக் கொண்டிருந்த காப்பியில் கொஞ்சம் கைதவறி அவன் மேல் சிந்தி விட்டதாக நடித்தான் விமல்குமார். சம்பாவை வாஷ் பேஸினுக்குத் துரத்தினன். அந்த மருந்து அட்டைப் பெட்டியைத் திறந்து ஒரு பாட்டிலை உருவித்தன் காலிச் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான்.

அன்றைக்கு இரவு.

கலாப்ரியாவின் அறைக்குள் நுழைந்தான் விமல்குமார்.

ஸ்டூடியோவிலிருந்து இன்னமும் கலாப்ரியா திரும்பியிருக்கவில்லை.

கலா தினம் குளித்தவுடன் பயன் படுத்தும் லோஷன் பாட்டிலைத்தேடி எடுத்தான். பேண்ட் பாக்கெட்டில் இருந்த அந்த மருந்துப் பாட்டிலை எடுத்து மூடியைத் திருகி ஃபில்லரால் மருந்தை இழுத்து லோஷன் பாட்டிலில் விட்டான்.

''கலா...! இனிமேயோட உன்னோட சினிமா வாழ்க்கை அஸ்தமனமாகப்போகுது! கையில பத்துப் படம் இருக்கிற தைரியத்திலே என்னையா தூக்கி எறிஞ்சு பேசறே? நாளைக்குக் காத்தாலே நீ குளிச்சு முடிச்சு இந்த லோஷனைப் பூசிக்கிட்டதும் உன்னோட முகம் அலங்கோலமா மாறப் போகுது... அப்புறம் என்னோட நிழல்லதான் நீ உட்காரப் போறே... உன்னோட திமிரெல்லாம் ஒடுங்கப் போகுது!'' – வாய் விட்டு முனகினன் விமல்குமார்.

காரியத்தைக் கச்சிதமாக முடித்துக்-கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான். தன் அறைக்குத் திரும்பினன். சமையற்கட்டிலிருந்து வேலைக்காரி வள்ளியம்மை எதிர்ப்பட்டாள்.

''ஐயா! நான் வூட்டுக்குப் போகட்டுங்களா...? அம்மா வர்றதுக்கு ஒரு மணிக்கு மேலே ஆகுமாம்...''

''யார் சொன்னா?''

''அம்மாதான்! ஓட்டல் தேவியிலிருந்து போன் பண்ணி யிருந்தாங்க...''

''சரி... நீ போ...'' – கூறிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

அறைக்குள் நுழைந்ததுமே அந்தக் குழப்பம் அவன் மனசுக்குள் நுழைந்துகொண்டது.

'ஓட்டல் தேவிக்கு இந்த நேரத்தில் எதுக்காகப் போயிருக்கிருள்? இவளை...இவளை...! இப்படியே விடக் கூடாது.'

போர்ட்டிக்கோவில் நின்ற காரை நோக்கிப் போனான் விமல்குமார்.

ஓட்டல் தேவி.

ரிசப்ஷன் அறையிலேயே கலாப்ரியாவின் பி.ஏ. விமலா கிடைத்தாள்.

''விமலா!'' – உட்கார்ந்திருந்த விமலா பட்டென்று திரும்பினள். விமல்குமாரைக் கண்டதும் சரேலென எழுந்து நின்ருள்.

''கலா எங்கே?'' – கோபத்தை மென்றபடி கேட்டான் விமல்குமார்.

''இந்திப் பட டைரக்டர், தயாரிப்பாளர்களோட மேலே இருக்காங்க!''

''எத்தனையாவது நெம்பர் ரூம்?''

''நாத்தி ஆறு.''

அவன் வேகமாய் லிப்டில் ஏறிப்போய் அந்த அறையை நெருங்கினன்.

நெருங்க முயன்ற அதே நேரம்...

லேசாய்த் திறந்திருந்த இடைவெளியிலிருந்து அந்தச் சீறல் – எழுந்தது. கலாப்ரியாவின் சீறல்.

''மிஸ்டர் தோஷி பாண்டே! இந்தத் தொட்டுப் பேசற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம். எனக்குக் கல்யாணமாயிருக்கு. தாலி கட்டின புருஷன் வீட்ல இருக்கார்... நான் கைநீட்டிப் பணத்தை வாங்கினது உங்க படத்தில நடிக்கிறதுக்காக மட்டும் தான். என்னோட உடம்பைஉங்களுக்கு அடகு வைக்க இல்லை!''

''என்ன கலா...? ப்ரொட்யூஸரு ஏதோ ஆசைப்பட்டுக் கேக்குறாங்க... உன்னை அவருக்கு ரொம்பப் புடிச்சுப் போச்சாம்...மேலே ஒரு அஞ்சாயிரம் ரூபா வாங்கித் தர்றேன்..' இன்னிக்குப் பூரா அவரோட இருந்துடு'' தோஷி பாண்டே கெஞ்சிப் பேசினர்.

''சீ! நீயும் உன் பணமும்! யாருக்கய்யா வேணும் உம் பணம்? இந்தா!'' கலாப்ரியா




THE SEAL OF TANTEX QUALITY
டான்டெக்ஸ்®
ஒவ்வொரு வகையிலும் சிறந்தவை
தரத்தில், துணி வகையில், தயாரிப்பில், உருக்குலையாத நீடித்த உழைப்பில், எல்லா விதத்திலும் சிறந்தவை. சிக்கனமானதும் கூட.
IS : 4964
ஒட்டி உறவாட
டான்டெக்ஸ்
டான்டெக்ஸ் ரகங்கள்
ப்ரீஃப்ஸ் • வெஸ்ட்ஸ்
• காஷ்வெல்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள்
சிறுவர்களுக்கான ரகங்கள்
டான்டெக்ஸ்
ttk தயாரிப்பு
டி.டி. கிருஷ்ணமாச்சாரி & கோ
சென்னை-600 086.
Imageads M-TTK-1361 Tam

பிரிட்டானியா பால் பிஸ்கட்



வளரும் குழந்தைகளுக்கு சுவையான துணை



சத்துமிகுந்த, சுவையான

பிரிட்டானியா

மில்க் பிக்கிஸ்

பின்டாஸ் BBC.MB-3-172-TM

நோட்டுக் கற்றைகளைத் தூக்கி யெறியும் சத்தமும், நாற்காலி நகர்த்தப்படும் சத்தமும் ஒன்றாக எழுந்தது.

விமல் குமார் உள்ளம் சிலிர்க்க மெல்லப் பின்வாங்கினான். வராந்தாச் சுவர் மறைவில் சரேலென ஒண்டிக் கொண்டான். ஒரு சிறு புயலாய் அறையை விட்டு வெளியே வந்த கலாப்ரியா விமலைக்கூட எதிர்பார்க்காமல் படிகளில் இறங்க ஆரம்பித்தாள்.

வீட்டுக்குள் திரும்பித் தன் அறைக்குள் நுழையப் போன விமல் குமாருக்கு அந்த 'லோஷன்' நினைவு மனசைத் தாக்கியது.

முதலில் அதைத் தூக்கி எறிய வேண்டும்.

என் கலாப்ரியா நெருப்பு.

அவளைப் போய்ச் சந்தேகப்பட்டேனே சே!

ஜன்னல் வழியே கலாப்ரியாவின் அறையை எட்டிப் பார்த்தான் விமல்குமார்.

இன்னமும் அவளுடைய அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

ஒருவேளை குளிக்கிறாளோ?

மனம் பகீரென்றது விமல் குமாருக்கு.

குளித்து முடித்ததும் அந்த லோஷனைத் தானே தொடுவாள் கலா?

படபடக்கும் மனசோடு அறையை விட்டு வெளியே வந்தான். கலாப்ரியாவின் அறை நெருங்கிக் கதவைத் தொட்டான். கதவு லேசாய்த் திறந்து கொள்ள—

படுக்கையில் படுத்தபடி புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்த கலாப்ரியா புத்தகத்தை மூடியபடி எழுந்து உட்கார்ந்தாள். நல்லவேளை அவள் குளிக்கவில்லை. நிம்மதிப் பெருமூச்சொன்றை விட்டான் விமல்குமார்.

''என்ன?'' என்றாள்.

''கோபமா கலா?'' இழைந்தான்.

கலாப்ரியா சிரித்தாள் மெல்ல. ''உங்க மேலே எனக்கென்ன கோபம்? உங்களுக்குத் தான் என் மேலே கோபம்!''

''ஸாரி கலா!''—அவள் தோளைத்தொட்ட படி படுக்கையில் உட்கார்ந்தான்.

''இப்போ இந்தக் கலா உங்களுக்கு வேணு மாக்கும்!'' — கலாப்ரியா சிரிக்க—

''ம்...'' தலையாட்டினான் விமல்குமார்.

''அப்போ ஒன் மினிட்... இருங்க குளிச் சிட்டு வந்துடறேன். உடம்பு பூராவும் கசகசன்னு வேர்வை!''

அவள் எழுந்து குளியலறைக்குள்போனாள். அவள் போன மறு விநாடியே டிரஸ்ஸிங் டேபிளில் அந்த லோஷனைத் தேட ஆரம் பித்தான் விமல்குமார்.

பரபரவென்று கண்களை ஓட்டினான்.

ஏதேதோ மேக்அப் சாதனங்கள் கண்களில் தட்டுப்பட அந்த லோஷன் மட்டும்...

அது கிடைக்கவேயில்லை.

திகைத்துப் போய் உட்கார்ந்தான்.

அதே நேரம்...

ஊரை விட்டு ஒதுங்கியிருந்த அந்தக் குப்பத்தில் — ஒரு குடிசையில்...



கருத்து: ராமு

வள்ளியம்மை தன் கையில் வைத்திருந்த அந்த 'லோஷன்' பாட்டிலைக்காட்டிக்காட்டித் தன் கணவனிடம் பெருமையடித்துக் கொண் டிருந்தாள். ''யோவ்.... பார்த்தியா....! 'கலா'ம்மா போட்டுக்கிற ஸ்நோ! இன் னிக்கு அந்தம்மா ஊட்ல இல்லாத நேரம் பார்த்து 'கபால்னு' தட்டிக்கினு வந்துட் டேன். நாளைக்கிக் காத்தாலே குளிச்சதும் மொதக் காரியமா இதைத்தான் பூசிக்கப் போறேன்...''

கண்ணுசாமி அவள் கையில் இருந்த லோஷனைச் சட்டென்று பிடுங்கினான். ''கக மாலம்... திருடிட்டா வந்தே...? வாண் டாண்டி... இந்தப் பொருளு! ஒழுக்கத் திங்கறதே ஒடம்புல ஒட்ட மாட்டேங்குது. இது வேறே எதுக்கு... வேண்டாம்...''

கூவத்தை நோக்கி ஆவேசமாய் ஓடிக் கொண்டிருந்த அந்தச் சாக்கடையில் அதை வீசி எறிந்தான்.

''அட்டப் பாவி மனுஷா! நீ நல்லாயிருப் பியா? காசு குடுத்து நீயாவும் ஒரு பொருளை வாங்கித் தரமாட்டே... நானும் எடுத்துட்டு வந்தா... அதையும் ஞாயம் பேசி... பெர்ரிய அரிச்சந்திர பிரபு மாதிரி கடாசிப்புடறே! உன்னை வெச்சிக்கினு நான் என்னய்யா பண்றது?''


இரவு முழுதும் புலம்பிக் கொண்டே இருந் தாள் வள்ளியம்மை.

சினிமா உலகில் தீபாவளி

சினிமா உலகில் சிலர் தீபாவளி கொண்டாடுவதை கற்பனை செய்து பார்த்தேன். வேடிக்கையான கற்பனை!

கற்பனை : திரைஞானி
படம் : ராஜு..





ஜெய்சங்கர்
ஹேண்ட்ஸ் அப். மரியாதையா சொல்லிடு, எங்க தீபாவளி லட்டு?
போங்க. நீங்களோ உங்க விளையாட்டோ? ஜில்லை நடிக்கறேன் என்கிறதுக்காக இதுக்கெல்லாமா துப்பாக்கி நீட்டறது!
விஜயகாந்த்
புரட்சி வெடி இருக்கா? புரட்சி வெடி!
கமலஹாசன்
வீடெல்லாம் டிசைன் டிசைனா வெடித்தோரணம் கட்டினது வாணிதான். எப்படி இருக்கு வெடி டிசைன்?
ஜெயமாலினி
நீங்க விலையைக் குறைக்காட்டா பரவாயில்லே. துணியைக் குறைங்க. அது போதும்! காலே அரைக்கால் மீட்டர் எனக்கு எக்கச் சக்கம்!
உசிலை மணி
எனக்கு யானை வெடி கொடுத்தாத் தான் சாப்பிடுவேன்.
சுமன்
எதுக்கப்பா ஏணி?
உங்களுக்கு அம்மா எண்ணெய் தேய்ச்சு விடச் சொன்னாங்க. அதுக்குத்தான்.

Madras to Moscow

இந்திய-சோவியத்நல்லுறவுக்கு மிக அதிகமாகப் பணியாற்றியுள்ளவர் பூர்ணம் சோமசுந்தரம். ஆம். பூர்ணம் விசுவநாதன், எழுத்தாளர் உமாசந்திரன் ஆகியோரது சகோதரர்தான்! அவரது திடீர் மறைவு ஏற்படுத்தியிருக்கும் அதிர்ச்சியும் துயரமும் அவரை அறிந்தவர்கள் மனத்திலிருந்து மறைய நீண்ட காலம் ஆகும்.

இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்தபோது ராணுவ சேவையில் பர்மாவுக்கு அனுப்பப்பட்டார் சோமு. பர்மா ஜப்பானியப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானபோது சோமு ராணுவக் கைதியானார். எப்படியோ ஜப்பானியரின் கடுமையான காவலுக்குத் தப்பிப் பினாங்கு சென்றார். நேத்தாஜியின் தலைமையில் இந்திய தேசிய ராணுவம் உருவாகியிருந்த சமயம். அதன் கொள்கைகளை விளக்கும் தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பு கிடைத்தது. பின்பு ஆஜாத் ஹிந்த் ரேடியோவின் பாங்காக் நிலையத்தில் ஹிந்தி அறிவிப்பாளராகப் பணியாற்றினார்.

ஜப்பானியர் நேசப் படைகளால் முறியடிக்கப்பட்டுப் பின்வாங்க நேர்ந்தபோது, பிரிட்டிஷ் படைகள் பாங்காக்கைக் கைப்பற்றி, நேத்தாஜியுடன் ஒத்துழைத்த இந்தியர்களைக் கைது செய்தது. சோமுவின் துடிப்பான இயல்பு அந்தக் கைதி முகாமிலிருந்தும் இரண்டு பஞ்சாபி நண்பர்களுடன் அவரைத் தப்பியோடச் செய்தது. பர்மாக் காடுகள் வழியே பல இன்னல்களைச் சந்தித்துக் கால்நடையாகவே இந்தியாவை வந்தடைந்தார். ஏற்கனவே பிரிட்டிஷ் இந்தியப் படையில் இருந்தவராதலால் பூனாவிலிருந்த தமது ராணுவ அதிகாரிகளுக்குத் தான் தாய்நாடு திரும்பி வந்திருப்பதைப் பற்றி எழுதியதும் பூனாவுக்கு வரும்படி உத்தரவு வந்தது. பூனாவில் இறங்கியதும் கைது செய்யப்பட்டார். பிறகு ஐ. என். ஏ. வீரர்கள்மீது டெல்லி செங்கோட்டையில் வழக்கு நடந்து முடிந்ததும் விடுதலையாகிச் சென்னைக்குத் திரும்பி வந்தார்.

ராஜாஜியின் வியாசர் விருந்து நூலை ஹிந்தியில் மொழி பெயர்க்கும் பணியை ஏற்றார். சிறந்த முறையில் இரண்டே மாதத்துக்குள் பணியை முடித்துவிட்டார்.

டெல்லியில் ஹிந்திப் பத்திரிகை ஒன்றில் உதவி ஆசிரியராகப் பணியாற்ற அழைப்பு வரவே அங்கு சென்றார். முதலில் 'அமர் பாரத்' பத்திரிகையிலும் பிறகு 'நவபாரத் டைம்ஸ்' பத்திரிகையிலும் பணியாற்றினார்.

ஹிந்தி நாளிதழ்களில் தமிழரான சோமுவின் சேவை! 'வியாசர் விருந்து' ஹிந்தி மொழிபெயர்ப்புக்கென அவருக்கு ராஷ்டிரபதி பரிசும் கிடைத்தது. அமரர் கல்கியின் 'கள்வனின் காதலி'யை 1953ல் ஹிந்தியில் மொழிபெயர்த்துப் பெருமை அடைந்தார்.

பின்னர் மாஸ்கோவில் Progress Publishing House என்ற வெளியீட்டு நிறுவனத்தின் தமிழ்ப் பிரிவில் நியமனம் பெற்றுச் சென்ற போதிலும் வெகு விரைவிலேயே ரஷ்ய மொழியிலும் அவர் நல்ல தேர்ச்சி அடைந்து விட்டதால் அந்த நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தொடர்பு கொண்டு தம் பங்கைச் செய்தார். ரஷ்யா சென்ற ஆறு ஆண்டுகளுக்குள்ளேயே ரஷ்ய அரசு அவருடைய பணியைப் பாராட்டிக் கௌரவித்தது. அவருடைய ஒத்துழைப்பால் தமிழ்-ரஷ்ய அகராதி உருவாயிற்று. அவர் கடைசியாகத் தொடர்பு கொண்டிருந்த முக்கியமான பணி ஹிந்தி-ரஷ்ய அகராதி தயாரிப்பு.

ஒரு சமயம் அவர் தாய்நாட்டுக்கு வந்திருந்தபோது திருப்பதி உண்டியலில் இரண்டாயிரம் ரூபாய் போட்டார். சென்னை திரும்பும்போது ''என்ன வேண்டுதல்?'' என்று கேட்டார் சகோதரர் உமாசந்திரன்.

''மாஸ்கோவில் ஒரு இளம் பஞ்சாபி தம்பதி. ஒரு தடவை இளைஞனுக்குக் கடுமையான ஜுரம். ஜன்னி கண்ட நிலை. நான்தான் அவனை அருகிலிருந்து ராப்பகலாகக் கவனித்துக் கொண்டேன். அவன் இளம் மனைவி தவித்த தவிப்பு என் நெஞ்சை உலுக்கியது. இளைஞனுக்கு நோய் தீர்ந்து உடல் நலம் திரும்ப ஏழுமலையானைப் பிரார்த்தித்துக் கொண்டேன்'' என்றார் சோமு.

எல்லாரும் தனக்காக, தன் குடும்பம் அல்லது நிறுவனத்துக்காக நேர்ந்து கொள்வார்கள். சோமு ஒரு நண்பனுக்காகப் பிரார்த்தித்துப் பெருந் தொகையைக் காணிக்கையாகவும் செலுத்தினார். அதுமட்டுமல்ல, தம் பிரார்த்தனை பற்றி சோமு அத்தம்பதியிடம் பிரஸ்தாபிக்கவே இல்லை!

உமாசந்திரன் கூறக் கேட்டு எழுதியவர்:
சுட்டி கிருஷ்ணன்



○ பூர்ணம் சோம சுந்தரம் தம் ரஷ்ய மனைவி குழந்தைகளுடன்.

அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

17

அன்றைக்குக் காலையில் எழுந்திருக்கும் போதே மனசில் ஒரு உற்சாகம் ஏற்பட்டது. மூன்று மாதங்களில் எத்தனை பெரிய வித்தியாசம் ஏற்பட்டு விட்டது என்று நினைக்கையில் சாந்திக்கு ஆச்சரியமாக இருந்தது. காலையில் எழுந்த நேரத்திலிருந்து ஆஸ்பத்திரிக்குக் கிளம்பும்வரை ஒரு கலக்கம் இருக்கும். நடராஜன் எதற்குக் கத்துவானோ எந்தச் செய்கையை, வார்த்தையைத் தப்பாக எடுத்துக்கொள்வானோ என்கிற எதிர்பார்ப்புடன் கூடிய கலக்கம். அவனுக்குக் கோபம் வராதபடிக்குப் பார்த்துப் பார்த்து அவசரமாகச் செய்து முடிக்க வேண்டிய டென்ஷன். அதனால் மார்பில் ஏற்பட்டுக் கொண்டிருந்த படபடப்பும் தலை சுற்றலும்!

இப்பொழுது படபடப்பு இல்லை. தலைச் சுற்றல் இல்லை. புதிதாக ஒரு தெம்பு வந்த மாதிரி இருக்கிறது.

வீட்டிலிருந்து துரத்தப்பட்டு அவள் ஆஸ்பத்திரியில் இருந்த முதல் நாலைந்து நாட்கள் அவளுக்கு மகாக் கூச்சமாக இருந்தது. பார்வைகளையும் கேள்விகளையும் சந்திக்கவே தயக்கமாக இருந்தது. வாஸ்தவத்தில் எந்தவிதமான பார்வைக்கும் கேள்விக்கும் யாருக்குமே நேரமில்லை என்று விரைவில் புரிந்தது. அவள் பிரிந்து வந்தது எந்த விதமான அசம்பாவிதமோ அவமானமோ இல்லை என்று சுற்றுப்புறம் சர்வ சாதாரணமாக எடுத்துக்கொண்டதை நினைக்கையில் எத்தனை பெரிய பிரமைகள் மனசில் இருந்தன என்று புரிந்தது. இப்பவும் மனத்தின் அடியில் ஒரு கசப்பு இருந்தது. அனுபவித்த அனுபவங்களின் நினைவு. ஆயுசு உள்ள வரையில் அது எங்கோ தன்னுள் ஒட்டிக்கொண்டிருக்கும் என்று தோன்றிற்று.

''எய் சாந்தி இன்னும் ரெடியாகல்ல நீ?''

அவள் பரபரப்புடன் தன்னைத் தயாரித்துக்கொண்டாள். இந்த ஹாஸ்டலுக்கு வந்த பிறகு இந்த உடம்புக்கு வந்துவிட்ட சோம்பேறித்தனத்தை நினைத்து வெட்கமாக இருந்தது. முன்பு வீட்டில் எத்தனை வேலை செய்துவிட்டு அரை மணி நேரம் பஸ்ஸில் பிரயாணம் செய்து சரியான நேரத்துக்கு டியூட்டிக்கு வந்துவிடுவோம்! இப்போது ஒரு பொறுப்பும் இல்லாமல் டிரஸ் செய்து கொண்டு கிளம்புவதற்கு யாரோ ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்த உடம்பும் மனசும் ஒரு பூதம். அதற்கு வேலை கொடுத்துக்கொண்டிருக்கா விட்டால் சோம்பல் வந்துவிடும். ஆஸ்பத்திரி வேலை போதாது. பின் வேறு என்ன வேலை செய்ய முடியும்?

அவள் அவசரமாகக் காலை உணவை முடித்துக்கொண்டு சக நர்ஸ்களுடன் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து ஓ.பி.டி.யின் கூட்டத்தைத் தாண்டிக்கொண்டு விரைந்தாள்.

''சாந்தி!''

அவள் சட்டென்று திரும்பினாள். ரமா சோப்ராவைப் பார்த்துச் சந்தோஷமான ஆச்சரியத்துடன் அருகில் சென்றாள்.

''என்ன ரமா? எப்படி இருக்கே? உடம்பு சரியில்லையா?''

''எனக்கில்லே. ரமேஷுக்கு. ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட். கை விரல்லே ஃப்ராக்சர்.''

''வேறே ஒண்ணும் காயமில்லையே?''

''இல்லே. நல்லவேளை!''

ரமா தயக்கத்துடன் சாந்தியைப் பார்த்தாள்.

''என்ன ஆச்சு சாந்தி உனக்கு? ஆளையே காணும்?''



சாந்தி புன்னகைத்தாள். மற்ற நர்ஸ்கள் அவளுக்காகக் காத்திருந்தார்கள்.

''அது ஒரு கதை. இப்ப எனக்கு நேரமில்லே ரமா. டாக்டரைப் பார்த்தப்புறம் உனக்கு நேரமிருந்தால் ரிஹாபிலிடேஷன் வார்டுக்கு வரயா?''

''வரேன். இன்னிக்கு லீவுதான் ரெண்டு பேருக்கும். உங்கிட்ட எத்தனையோ விஷயங்கள் பேசணும் சாந்தி.''

''வா!''

சாந்தி நகர்ந்தாள். மார்பு வேகமாக அடித்துக் கொண்டது.



ரிஹாபிலிடேஷன் வார்டுக்குப் போய் ரெஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுப் புன்னகை மாறாமல் ஒவ்வொரு பேஷண்டாகப் பார்வையிட்ட கையில் ரமாவின் தயக்கப் பார்வை எதிரில் நின்றது.

'உங்கிட்டே எத்தனையோ விஷயங்கள் சொல்லணும் சாந்தி.!'

'என்ன விஷயங்கள்? சொல்லப் போகிறாளா? கேட்கப் போகிறாளா? நடராஜனைப் பத்தியா?'

இரண்டு பேர்களுக்கு 'ஸ்பாஞ்ச் பாத்' கொடுத்து முடிப்பதற்குள் நடராஜன் எப்படி இருக்கிறான் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் திடீரென்று கட்டுப்படுத்த முடியாமல் போயிற்று. மனப் பிரமைகள் எல்லாம் மீண்டும் மனத்தை அடைத்துக் கொண்ட மாதிரி இருந்தது.

ரமா வார்டுக்குள் வந்ததும் மறுபடியும் இதயம் அடித்துக் கொண்டது. பத்து நிமிஷத்தில் வருகிறேன் என்று பேஷண்டிடம் சொல்லிவிட்டு அவள் ரமாவின் கையைப் பிடித்துக்கொண்டு பால்கனிக்குச் சென்றாள். இருவரும் சட்டென்று என்ன பேசுவது என்று தோன்றாமல், பிறகு ரமா கேட்டாள்.

''ஏன் வீட்டை விட்டுப் போயிட்டே, சாந்தி?''

''போகல்லே துரத்தப்பட்டேன்!''

ரமாவின் கண்கள் வியப்புடன் அகல விரிந்தன.

சாந்தி மெல்லிய குரலில் சுருக்கமாகச் சொன்னாள். மீண்டும் அவற்றை நினைவுகூர்கையில் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் துளிர்த்தது.

''என்னாலே நம்பவே முடியல்லே சாந்தி! நான் பக்கத்திலே இருக்கேன், உன் கஷ்டத்தை எப்படி வெளியே காண்பிக்காமே இருந்தே?''

''இதெல்லாம் காண்பிக்கக் கூடிய விஷயமில்லே ரமா. என்னை விரட்டக்கூடிய அளவுக்கு நான் என்ன தப்புப் பண்ணினேன்னு புரியல்லே.''

ரமா ஒரு விநாடி அவளை உற்றுப் பார்த்தாள்.

''நடராஜனுக்குத் தங்கை இருக்கிறாளா?''

''இல்லே.''

''தங்கைன்னு சொல்லிண்டு யாரோ ஒருத்தி உங்க வீட்டிலே இருக்கா.''

சட்டென்று ஓர் அதிர்வுடன் சாந்தி அவளைப் பார்த்தாள்.

ஓ. இதுதான் காரணம். ஒரு அபாண்டப் பழி சுமத்தி அவளைத் துரத்தினதற்கு இதுதான் காரணம்.

அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு புன்னகைத்தாள்.

''அது தங்கையில்லே ரமா!''

''எங்களுக்கும் சந்தேகம்தான். நீ எவனோடேயோ ஓடிப்போயிட்டேன்னு நடராஜன் கூசாமச் சொல்றார் சாந்தி!''

அவமானத்தில் முகம் சிவந்து போயிற்று. தன்னுள் எழுந்த சீற்றத்தை அவள் அவசரமாக விழுங்கினாள்.

''சொல்லட்டும் ரமா — இனிமேல் என்னை எந்தச் சொல்லும் பாதிக்காது.''

எப்படிச் சமாதானப்படுத்துவது என்று யோசிப்பவள் போல் ரமா நின்றாள்.

''எனக்காக வருத்தப்படாதே ரமா. நான் ரொம்ப நிம்மதியா இருக்கேன். வாஸ்தவத்திலே அவரைப் பத்தி நினைக்கக் கூட நேரமில்லே எனக்கு!''

இதை நம்ப முடியாதவளாய் ரமா பேசாமல் நின்றாள்.

''எங்களாலே ஏதாவது உதவ முடியுமானால் செய்யறோம் சாந்தி. சமாதானத்துக்கு வழியே இல்லையா?''

''எனக்குத் தோணலே ரமா. பைத்தியக்காரி மாதிரி பத்து நாளைக்குத் தினமும் வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினேன். கொஞ்சம் கூட மனுஷத்தனமே இல்லாமே துரத்திட்டார். இன்னொருத்தியோட ஏற்பட்ட சிநேகிதத்தினாலே வேணும்னே என்னை நடத்தை கெட்டவள்னு சொல்லித் துரத்தியிருக்கிற புருஷன்கிட்டே எனக்குச் சமாதானம் ஏற்படும்னு நினைக்கிறியா? அத்தனை மானம் கெட்டவள் நான்னு நினைக்கறயா? எதுக்காக நான் திருப்பி அவர் கிட்டே போகணும்?''

உணர்ச்சி வசப்பட்டு அவள் முகம் சிவந்து போயிற்று. கண்களில் நீர் தளும்பப் பார்த்தது. ரமா ஒரு அவசரத்துடன் அவள் தோளைத் தட்டினாள்.

''டேக் இட் ஈஸி சாந்தி. நீ சொல்றது வாஸ்தவம்தான். அவர் கிட்டத் திரும்பிப் போய்ச் சேர்ந்துக்கறதிலே ஒண்ணும் அர்த்தமில்லே. நீ சம்பாதிக்கிறே. சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லே. எதுக்குப் பயப்படணும்?''

ரமா போய் வெகு நேரத்துக்கு மார்பு படபடத்துக் கொண்டிருந்தது. இதற்காகவா இதற்காகவா என்று ஆத்திரம் பொங்கிப் பொங்கி எழுந்தது. எத்தனை கேவலமானவன் நீ! நீயெல்லாம் எதற்குக் கல்யாணம் என்கிற பந்தத்தில் நுழைந்தாய்? உனக்கு மனைவி ஒரு கேடா? கணவன் என்கிற லேபிள் வேறு? அந்த லேபிளில் உன்னை மறைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்வாயா?

''**சா**ந்தி!''

அவள் சட்டென்று சுயநினைவுக்கு வந்தாள்.

ஹரியின் பார்வையில் கனிவும் கருணையும் தெரிந்தன.

''குட் மார்னிங் ஹரி!''

அவன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

''என்ன விஷயம் சாந்தி?''

''ஒண்ணுமில்லையே?''

''விஷயம் இருக்கு. இன்னிக்கு அரை மணி லேட். யாரோடயோ பால்கனியில் சூடாப் பேசிண்டிருந்ததைப் பார்த்தேன்.''

அவள் சிரித்தாள்.

''சூடான சமாசாரம்தான். என் புருஷன் வேறொருத்தியை வீட்டிலே கொண்டு வந்து வச்சிருக்காராம். அதனாலே தான் எனக்கு அங்கே இடமில்லாமப் போச்சுன்னு இப்பப் புரியுது.''

''நஷ்டம் அவருக்குத்தான்; உங்களுக்கில்லை.''

''அப்படியெல்லாம் நான் என்னை ஏமாத்திக்கத் தயாராயில்லே! ஹரி நான் எதிலேயோ தோத்துப் போனேன்னுதான் தோணறது.''

''ஸ்டுப்பிட்!''

அவன் பதிலே சொல்லாமல் கண்களில் எட்டிப்பார்க்க முயன்ற கண்ணீரை விரட்டித் தன் வேலைகளைக் கவனித்தான். என்ன நேர்ந்து விட்டது நமக்கு என்று திகைப்பு ஏற்பட்டது.

அவனிடம் திரும்ப வேண்டும் என்கிற அடிமனத்தின் எண்ணம் அவனுடன் வாழ வேண்டும் என்கிற வேட்கையினால் ஏற்பட்டதல்ல. தான் மோசமானவள் இல்லை என்று சமூகத்துக்கு ஊர்ஜிதப்படுத்தவே...



கருத்து: வசுந்தரா

பொறுப்புள்ள பெற்றோர் நீங்கள்



உங்கள் குழந்தையின் பொன்னான எதிர்காலம் உங்கள் கையில் மிகவும் அவசியமான கல்விச் செல்வத்தை அவனுக்குத் தர நீங்கள் எல்லா வழிகளிலும் முயற்சி செய்கிறீர்கள் முயற்சியில் கனரா பாங்க் உங்களுக்கு உதவ முடியும்.

உங்கள் குழந்தை சிறுவனாக இருக்கும் போதே, அவனுடைய தேவைகள் குறைவாக இருக்கும் போதே கனரா பாங்க்கில் சேமிக்கத் துவங்குங்கள். அவன் பெரியவனாக வளர்ந்து அவனது தேவைகளும் அதிகரிக்கின்றன. அப்போது முன் கூட்டியே ஆலோசித்துச் சேமிக்க ஆரம்பித்ததை எண்ணி உங்களை நீங்களே மெச்சிக் கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளுக்கு ஏற்ப கனரா பாங்க்கில் பல சேமிப்புத் திட்டங்கள் உள்ளன. வித்யா நிதி உங்கள் குழந்தைகளின் கல்விச் செலவுகளுக்கு உதவுகிறது. நிரந்தர டெபாசிட் திட்டத்தில் சேமிக்கத் தொடங்கிய 7 வருடங்கள் கழித்து நீங்கள் மாதந்தோறும் சேமித்த தொகைக்குச் சமமான தொகையை மாதந்தோறும், எண்ணிலாக் காலத்திற்கும் திரும்பப் பெறலாம். அதே நேரத்தில் உங்கள் அசல் குறையாமல் அப்படியே இருக்கின்றது.

இன்றே உங்கள் அருகாமையில் உள்ள எங்கள் கிளையை அணுகுங்கள். கனரா பாங்க் உங்கள் பொறுப்புக்களை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறது.

கனரா பாங்க்

(தேசியமாக்கப்பட்ட பாங்க்)

நாடெங்கிலும் 1,300 க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன.

அதற்கு இப்பொழுது வழியில்லாமல் போய்விட்டது.

ஊர்ஜிதப் படுத்தித் தான் என்ன சாதிக்கப் போகிறோம்?

இந்தமாதிரி ஆண்களை என்னசெய்யலாம்? இத்தனை கேவலமாக நம்மை நடத்தினவனை என்ன மாதிரி அவமானப்படுத்தலாம்?

அவளுக்கு மறுபடியும் ஆத்திரம் கட்டுக் கடங்காமல் போயிற்று.

''நீங்கள் உங்களைச் சாந்தப்படுத்திக் கொள்ள வேண்டும் சாந்தி!''

திடீரென்று அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

''உங்களுக்குப் புரியாது என் கோபம், என் துக்கம்.''

அவன் அவள் கையை மென்மையாகத் தட்டினான் சமாதானமாக.

''ஆணும் பெண்ணும் ஒத்த மனசாய் ஜோடி அமையறது ரொம்பக் கஷ்டமான சமாசாரம் சாந்தி. எத்தனையோ பொருத்தம் பார்த்து உங்களுக்குக் கல்யாணம் நடந்திருக்கும். கடைசியிலே இப்படி நிற்க வேண்டி வந்திருக்கு! நான் மாயாவை மன சார நேசிச்சேன். ஆனால் அவளோடு சந்தோஷமாய் ஆயுசு முழுக்க இருந்திருப் பேனான்னு இப்பச் சந்தேகமா இருக்கு. இந்த விபத்துக்கப்புறம் மனுஷ சுபாவம் பளிச்சுன்னு புரியறது.''

''என் சுபாவத்தைப் பத்தி என்ன புரிஞ்சிருக்கு?''

''ஒரு மட சாம்பிராணின்னு புரிஞ்சிருக்கு. ரொம்ப மூடத்தனமான மனசு. நான் பிரியம் வைக்கிற அளவுக்கு நீயும் வைன்னு எதிர்பார்க்கிற....''.

''எதிர்பார்க்கிறது தப்பா?''

''ரொம்பத் தப்பு. அனுபவத்திலே சொல்றேன். சாந்தி, மாயாவுக்குக் கல்யாணம் ஆகியிருக்கும் நேத்து!''

''ஓ!''

சட்டென்று அவளுள் ஒரு பச்சாத்தாபம் எழுந்தது. நம்மைவிட இவனுடைய நிலைமை மோசம் என்று தோன்றிற்று.

அவன் மென்மையாகச் சிரித்தபடி சொன்னான்.

''நம்ம ரெண்டு பேருக்கும் ஒரு விசித்திர மான பொருத்தம் இருக்கு ஹரி.''


''ரொம்ப ஆச்சரியமான பொருத்தம்.''

ஹரி சில விநாடிகள் அவளைப் புன்னகையுடன் பார்த்தான்.

''சாந்தி நான் உங்களை ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே?''

''என்ன விஷயம்?''

''நீங்க பழசைப் பத்தியெல்லாம் மறந்திடணும். நீங்க பட்ட கஷ்டங்கள், பட்ட அவமானங்கள், ஆண் வர்க்கத்துக்கு மேலே பொதுவா ஏற்பட்டிருக்கக் கூடிய அவநம்பிக்கை எல்லாத்தையும் மறந்துடணும். நீங்க தனியா இருக்கிற வரைக்கும் உங்களாலே மறக்க முடியாது. அதனாலே...''



கருத்து : ஸீதா

''அதனாலே?''

அவள் தயங்கினாள்.

''தப்பா நினைக்க மாட்டீங்களே!'' என்றான் மறுபடியும். பிறகு தொடர்ந்தான்:

''இன்னும் ஒரு மாசத்திலே நான் டிஸ்சார்ஜ் ஆகிப் போயிடுவேன். என்னைச் சேர்ந்தவர்கள் யாருமில்லை எனக்கு. என்னோடு நீங்க தங்குவீங்களா? தோழமை கொடுப்பீங்களா?''

அவள் திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள்.

'நீயா இப்படிக் கேட்டாய்?' என்கிற மாதிரி திடீரென்று இனம் புரியாத ஒரு சீற்றம் ஏற்பட்டது. எத்தனை கேவலமாகப் போய்விட்டது நம் நிலைமை என்கிற ஆக்ரோஷம் எழுந்தது.

(தொடரும்)



க்ர்துலயம்

கதை வசனம்: ஜி.கே.

காட்சி 1

மார்க்கண்டேயன் வீடு

காமேஸ்வரன் (புத்தகம் படிக்கிறார்): 'கற்பில் சிறந்தவளே சாவித்திரி! இன்னும் ஒரு வரம் கேள் என எமன் கூற, சாவித்திரியும் நான் கற்புடையவளாகப் பல குழந்தைகளைப் பெற்று என் மாமன் என் குழந்தைகளுடன் விளையாட வேண்டும். எனக் கேட்க, எமதர்மன் சற்றும் யோசிக்காமல் ''தந்தேன்'' எனக் கூற சத்யவான் உயிர் பெற்று எழுந்தான். எமன் எமலோகம் திரும்பினான்.

(ஹாஹா... என்ற சிரிப்புச் சத்தம் கேட்க காமேஸ்வரன் திரும்பிப் பார்க்க வாசற்படியில் எமன் நிற்கிறான்.)

- ✕ போலீஸ் சீனு: தூமகேது
- ✕ சிவசங்கரன்: சித்ரகுப்தன்
- ✕ எஸ். வி. சேகர்: மார்க்கண்டேயன்

- ✕ அனிதா: சாவித்திரி
- ✕ எஸ். வி. சேகர்: மார்க்கண்டேயன்

எமன்: என்ன பெரியவரே, பதறுகிறீர்கள்!

காமே: யார் நீ?

எமன்: இதோ இப்போது படித்தீரே. அந்த ஏமாந்துபோன எமன் நான்தான். முட்டாளைப் பெற்ற மூடனே. எங்கே உனது மகன்?

காமே: ஏதோ ஆபீஸ்லே டிராமா காம்பெடிஷன்னு போயிருக்கான். காப்பி சாப்பிடறீங்களா? என் உயிரைத்தான் எடுக்க வந்திட்டீங்களோன்னு நினைச்சு நான் ரொம்பப் பயந்துட்டேன்.

எமன்: நான் உமது உயிரை எடுக்கத்தான் வந்துள்ளேன். உமது பையனிடம் கூறிவிட்டு எடுத்துச் செல்லலாம் என்றுதான் உமது பையனைத் தேடுகிறேன்!

காமே: எனக்கு என்னடாப்பா எமா அப்படி வயசாயிடுத்து? 60 வயசெல்லாம் ஒரு வயசா? அமெரிக்காவிலே எல்லாம் இந்த வயசிலே மறுபடியும் மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கிறா. ஆனா நான் பையனை நெனைச்சு ரெண்டாந்தரம் கூட கல்யாணம் பண்ணிக்காம இருக்கேன்!

எமன்: கிழவரே. நீர் நிறையப் பாவம் செய்து இருக்கிறீர். உம்மை விட மாட்டேன்.

காமே: அப்படி என்னப்பா பாவம் நான் செய்துட்டேன்?

எமன்: ம்... உழைத்துச் சம்பாதித்துக் கொண்டு வரும் உன் மகனின் சம்பளத்தையெல்லாம் பிடுங்கிக் கொண்டு அவனுக்குச் செலவுக்குக் கூடப் பணம் தருவதில்லையாமே. இது பாவமில்லையா?

முழு நீள நாடகம்



காமே: ஹூம். உனக்கு என் பையனைப் பத்தித் தெரியாது. அவன் கெட்ட கேட்டுக்கு லவ் வேறே!

எமன்: அது உமக்குத் தெரிந்து விட்டதா?

காமே: தெரியாம என்ன? என் பையன் எதிர் வீட்டுத் தமிழ் வாத்தியார் பொண்ணு சாவித்திரியை லவ் பண்றான்.

எமன்: பொல்லாத கிழம் நீர். ஆமாம், அப்படி அவர்கள் காதலிப்பதில் தவறு என்ன?

காமே: அந்தத் தமிழ் வாத்தியார்கிட்டே சிநேகம் செய்ய என்ன இருக்கு? ஒரு சிலப் பதிகாரப் புத்தகம், ஒரு திருக்குறள். ஏதாவது கேட்டால் அப்பனும் பொண்ணும் அடுக்கு மொழியிலே மானுவுக்கு மானு கானுவுக்கு கானுன்னு எதையாவது பேசுறாங்க.

(சாவித்திரி வருகிறாள்)

சாவி: மாமா, யாரு இவன்? முரட்டு மீசையெல்லாம் வெச்சிண்டு?

காமே: இவன்தான் எமதர்மன்.

சாவி: மாமா, உங்க பையன் மார்க்கண்டேயன் இருக்காரே. அவருக்கு மீசையை வச்சுக் கிரீடத்தைத் தலையிலே கவுத்திரு இப்படித்தான் இருக்கும்.

எமன்: சாவித்திரி நீ எதுக்கு இங்கே நிக்கறே? மார்க்கண்டேயன் இல்லேன்னு வீட்டுக்குப் போக வேண்டியதுதானே?

சாவி: என்னய்யா ஒரயடியா வெரட்டறே. யோவ், அவரோட உயிரை எடுத்துக்கிட்டுப் போறதுக்கு ஏதாவது அத்தாட்சி வெச்சிருக்கியா?

எமன்: வாரண்டோடயா வரவேண்டும்? பெண்ணே விலகிப் போ. உன் காதலை வெறுக்கும் இவருக்காக நீயேன் வாதாடுகிறாய்?

சாவி: இன்னிக்கு வெறுக்கலாம். நாளைக்கு அவர் ஒத்துப் போயிட்டா? என்ன இருந்தாலும் அவர் என் மாமனார்!

காமே: அடாடா! என்ன பக்தி. அம்மாடி, சாவித்திரி! என்னை எமன் எடுத்துச் சென்றாலும் நீயே எனக்கு மாட்டுப் பெண்.

சாவி: என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க மாமா.

எமன்: என்னையும் (இருவரும் நமஸ்கரிக்கிறார்கள்.)

காமே: நல்லா இருங்க. ஆமா, எமன் கையிலே ஏது ஸீக்கோ வாட்ச்? டேய், யாருடா நீ? (அடிக்கக் கையை ஓங்குகிறார்.)

மார்க்கண்டேயன்: அப்பா, அப்பா, நான் தான்பா!

காமே: ஏண்டா பாவி, மார்க்கண்டேயா. இது என்னடா வேஷம்?

மார்க்: ஆபீஸ்லே சத்தியவான் சாவித்திரி டிராமா. நான்தான் எமன். உனக்குக் காமிக்கலாமேன்னு மேக்கப் கலைக்காம அப்படியே வந்தேன். சும்மா உன்னைப் பயமுறுத்தினேன். இவ வந்து கெடுத்துட்டா.

சாவி: சாரி. நான் உங்களை மரியாதை இல்லாம அவன் · இவன்னு பேசிட்டேன்.

மார்க்: பரவாயில்லே சாவித்திரி எங்க அம்மாகூட அப்பாவை அப்படித்தான் சொல்லுவா.

காமே: சரி சரி. நான் நாராயணசாமி வீடு வரைக்கும் போயிட்டு வர்றேன். உப்புமா பண்ணி வச்சிருக்கேன். எடுத்துப்போட்டுண்டு சாப்பிடு. (போகிறார்)

(இரண்டு கிங்கிரர்கள் உள்ளே வந்து சாவித்திரி, மார்க்கண்டேயன் பேசுவதைக் கவனிக்கிறார்கள்.)

சாவி: டிராமாவிலே உங்க ஆக்டிங்கைப் பார்த்து நல்லா அப்ரிசியேட் பண்ணினாங்களா?

மார்க்: ஓ! எவ்வளவு பாராட்டு தெரியுமா? நாலு பொண்ணுங்க வந்து என்னைச் சுத்தி நின்னு...

சுந்தா: எமன்
பாலன்: பீமகேது
எஸ். வி. சேகர்: மார்க்கண்டேயன்



சாவி: துடப்பைக் கட்டையை எடுங்க...

மார்க்: ஆட்டோகிராப் கேட்டாங்க. வேற ஒண்ணுமில்லே.

சாவி: தொடப்பம் சுத்திப் போட. திருஷ்டிப் பட்டிருக்குமே!

மார்க்: நான் பயந்தே போயிட்டேன்.

சாவி: சீக்கிரம் மேக்கப்பைக் கலைச்சிடுங்க. பசியோட இருப்பீங்க. பால் பாயசம் வச்சிருக்கேன். போய் எடுத்துண்டு வரேன்.

மார்: சீக்கிரம் வந்துடு. அப்பா வரதுக்குள்ளே. அப்புறம் அவர் வேறே பங்கு கேப்பார்! (சாவித்திரி போகிறாள்)

தூமகேது: இவன்தானே மார்க்கண்டேயன்.

பீமகேது: நம் தலைவர் சொன்ன அட்ரஸ் இதுதான். அவர் கூறிய அடையாளமும் சரியாத்தான் இருக்கு.

எம: அவனுக்கு நாம் நம்மைக் காட்டுவோம்.

(இருவரும் மந்திரம் ஜபிக்க மார்க்கண்டேயனுக்குத் தெரிய வருகிறார்கள்.)

மார்: ஏண்டா எங்கப்பா கிட்டே காமிக்கணும்னு நான்தான் வேஷத்தைக் கலைக்காம டாக்சி பிடிச்சிண்டு வந்தேன். நீங்க ஏண்டா என் வீட்டுக்கு வந்து நிக்கறேள்?

(இருவரும் சிரிக்கிறார்கள்)

மார்: ஏண்டா சிரிக்கிறீங்க? இப்படித் தலையிலே கொம் போட பஸ்ஸிலேயா ஏறி வந்தீங்க? வெட்கமா இல்லே?



ஜ பாலன்: பீமகேது

தூம: நாங்கள் உன் உயிரை எடுக்க வந்திருக்கிறோம்.

மார்: என் உயிரை எடுக்கவா? இன்னுமா? ஏற்கனவே ரிகர்ஸல்லே தான் உயிரைஎடுத் திட்டீங்களே!

பீம: ரிகர்ஸலா? ஏதோ உளறுகிறாய்!

மார்: இங்கே தூய தமிழ்லே பேசு! டிராமாவிலே மட்டும் எவ்வளவு அடிச்சிண்டாலும் மெட்ராஸ் பாஷையிலே பேசித் தொலைக்கிறே!

தூம: டிராமாவா? என்ன பிதற்றுகிறாய்? நாங்கள் உண்மையான கிங்கிரர்கள். எம லோகத்திலிருந்து வருகிறோம்.

மார்: என்னது. எமலோகமா?

பீம: தூமகேது! என்ன இவனிடம் பேச்சு? பாசக் கயிற்றை வீசு!

மார்: இதுவா பாசக் கயிறு? ஆமா இன்னொரு முனை எங்கே?

தூம: எமதர்மர் பிடித்துக் கொண்டிருக்கிறார். வா, போகலாம்.

மார்: யோவ், எனக்கு இன்னும் 24 வயசுகூட ஆகலேய்யா.... ப்ளீஸ்!

பீம: இந்தியனோட சராசரி வயசே 21 தான். 3 வருஷம் ஜாஸ்தியாவே வாழ்ந்துட்டே. வா, போகலாம்!

காட்சி 2

(மேல் உலக நீதி மன்றம். சித்ரகுப்தன் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறான். அவன் எதிரில் ஒரு பெரிய பேரேடு வைக்கப்பட்டிருக்கிறது. இரு கிங்கரர்கள் வருகின்றனர்.)

தூம: பிரபோ! நீங்கள் குறிப்பிட்ட நபரின் உயிரை எடுத்து வந்து விட்டோம்.

சித்ர: அப்படியா, சந்தோஷம். கொண்டு வாருங்கள் அந்த உயிரை.

(கிங்கரர்கள் மார்க்கண்டேயனை இழுத்து வருகிறார்கள்.)

சித்ர: வா, மானிடப் பதரே, வா.

மார்: யோவ், பதர் கிதர்னே நடக்கறதே வேறே. பதர்னு என்னய்யா அர்த்தம்?

சித்ர: அதெல்லாம் எனக்குத் தெரியாது. மேல் லோகத்தில் வம்ச பரம்பரையாக மானிடர்களை இப்படித்தான் அழைக்கிறோம்!

தூம: ஜடகேச, மடவாச கரு எருமை வாசன் எரிபுருவ பெரு மீசை உயர் விசுவ ரூபன், கதியென்று விதியென்று கயிறுக் கொண்டு அயராத தேவன், அவன் சிவனோர்க்கு நேசன். மண்ணிலே காலன், விண்ணிலே தேவன், காலத்திலேமூலன், ஞானத்தின் சீலன், கண்டவர் விண்டிட, விண்டவர் கண்டிட, எம தரும ராசன் பராக், பராக்!

மார்: அடேடே, நல்ல மெக்ஸிகன் ரிதம் மோட ஜோரா இருக்குதய்யா. எங்கே இன்னொரு தடவை சொல்லு!

தூம: சும்மாயிருய்யா. தெனமும் ஒரு தடவை பராக் சொல்றதுக்குள்ளேயே உயிர் போற மாதிரி மூச்சு வாங்குது. எமதர்மர் வேற ஒரு வார்த்தை குறைஞ்சாலும் அங்கேயே நின்னுண்டு வரமாட்டேன்னு அடம் பிடிக்கிறார். தப்பித் தவறி ஏதாவது மாத்திச் சொல்லிட்டா இன்னும் ரெண்டு கொம்பு மொளைக்கட்டும்னு சபிச்சிடுறார். பாரு இன்னும் அங்கேயே நிக்கறார். ஏன் தெரியுமா மறந்து போய் ஒரு பராக் விட்டுட்டேன். மூணு தடவை கரெக்டா சொல்லியாகணும் அவருக்கு... எம தர்ம ராசன் பராக் பராக் பராக்.

(எமதர்மன்வந்து ஆசனத்தில் அமர்கிறார்.)

எமன்: ஆம் கோன் ஹை?

மார்க்: என்னய்யா எமன் இந்தியிலே பேசறார்?

சித்ர: பிரபோ. இவன் தமிழன்.

எமன்: ஓஹோ இவனைப் பார்த்ததும் ஏதோ பம்பாயைச் சேர்ந்த சேட் என்று எண்ணி விட்டேன்!

மார்: அதானே பார்த்தேன். உனக்கு ஹிந்தி தெரியுமா?

எமன்: இந்தி மட்டுமா? உலகத்து பாஷை எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். சப்போஸ் துபாய்லேந்து ஒருத்தனை இங்கே கொண்டு வந்தா அவனிடம் தமிழிலா கேட்க முடியும்? சரி, விசாரணை ஆரம்பமாகட்டும்.


சித்ர: நீ உன்னைப் பெற்று எடுத்த தாய்க்கு அவளுடைய கடைசிக் காலம் வரைக்கும் சோறு போடாமல் கஷ்டப்படுத்தினாய்!



சாரதா'ஸ் வெற்றியின் ரகசியம்—
திருமணம் மற்றும் எல்லா
பண்டிகைகளுக்கும்
காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுப்
புடவைகளில் ஒப்புயர்வற்ற
டிசைன்களையும், ரகங்களையும்
அளிக்கிறது என்பது
எல்லோருக்கும்
தெரிந்ததுதான்.
சாரதாஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
SARATHA'S
MADRAS & TRICHY
தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு

சுத்தமோங்கும் ஆரோக்கிய சுகத்திற்கு...

லைப்பாய் பர்ஸனல்



புதிய லைப்பாய் பர்ஸனல்—அழுக்கிலுள்ள
கிருமிகளைக் கழுவிக் களையும்
ஈடிணையற்ற லைப்பாய்
திறமைக்கு...மேலும் சிறப்பு:
சுத்தமயமான ஆரோக்கிய
சுகமளிக்கும் நுரை வளப்பம்,
சுறுசுறுப்புத் தரும் சுகந்தம்.
பொலிவு மிகுந்த மேலுறைப்
பேக்கிங்கிலே புதுமையழகு
வடிவ சோப். குளித்திடுவீர்...
குளித்திடப் புதுமை லைப்பாய்
பர்ஸனல்...நவீன
மனிதருக்கான நவீன சோப்.



லைப்பாய் பர்ஸனல்

சுறுசுறுப்பூட்டும் இதன் சுகமே அலாதி!

மார்: போலீஸ். உன் பேரு என்ன சொன்னே? சந்திரகுப்தனு சமுத்ர குப்தனு என்னமோ சொன்னியே?

சித்ர: சித்ர குப்தன்!

மார்: எனக்கு வர கோவத்துலே உன்னை ஓங்கி ஒரு அறை குடுக்கலாமான்னு இருக்கு. நான் பெத்த தாய்க்குச் சோறு போடலியா? ஏன்யா, உனக்கு மூளை இருக்கா? எனக்குத் தாயே கிடையாது!

சித்: ம்... நீ என்ன டென்ட் ட்யூப் பேபியா?

மார்: அப்படிச் சொல்லலேய்யா. என்னைப் பிரசவித்த உடனே என் தாய் என் முகத்தைக் கூடப் பார்க்கல்லே. இறந்து போயிட்டா.

சித்ர: கொடுத்து வைத்தவன் உன் தாய். உன் முகம் பார்க்கும்படியாவா இருக்கு? (திடுக்கிட்டு) ஹா, என்ன சொன்னாய்? உன் தாய் சிறு வயதிலேயே இறந்து விட்டாளா? (அதிர்ச்சி) சித்ரகுப்தனின் லெட்ஜரில் பிழையா? (எமன் தலையின் மேல் கத்தி சற்று இறங்குகிறது.)

மார்: ஏன் தப்பு வராது? தெருவுக்கு ஒரு சித்ரகுப்தன் இல்லேன்னாலும் அட்லீஸ்ட் ஒரு நாட்டுக்கு ஒரு சித்ரகுப்தனாவது இருக்கணும். அகில உலகத்துக்கும் நீயே சித்ர குப்தனாக இருக்கணும்னு ஆசைப் பட்டா இப்படித்தான் குழப்பம் வரும்!

சித்ர: நீதானே 41, எல்லையம்மன் கோவில் வீதியில் இருக்கும் மார்க்கண்டேயன்?

மார்: புதுசா, பழசா?

எமன்: அது என்ன, புதுசா, பழசா?

மார்: கார்ப்பரேஷன்லே இப்போ எல்லார் வீட்டு நம்பரையும் மாத்தியிருக் காங்க. என் வீட்டு நம்பர் பழசு 16. புதுசு 41. நீ எந்த 41ஐச் சொன்னே?

சித்ர: அய்யய்யோ. புது நம்பர் கொடுத்த விஷயம் இதுவரைக்கும் என் காதுக்கு எட்டவில்லையே?

மார்: ஏன்யா நீ என்ன ரிப்பன் பில்டிங் லேயா இருக்கே? அங்கே போட்ட ஆர்டர் உன் காதிலே எப்படிய்யா விழும்?

சித்ர: நண்பனே, நான் கொண்டு வரச் சொன்னது உன்னையல்ல. பழைய நாற்பத்து ஒன்றில் இருக்கும் மணி கண்டனை. குழப்பம் நேர்ந்து விட்டது. மன்னித்துவிடு.

மார்: ம்... ஏதோ மாம்பலத்திலே விருந்து சைதாப்பேட்டைக்கு அழைச்சுக் கிட்டு வந்த மாதிரி பேசறியே. எப்படிய்யா திரும்பப் போவேன்? லோகத்தையே மாத் திட்டியேய்யா!

எமன்: ம்... சித்ரகுப்தா என்ன இது சிறு குழப்பம்?

மார்: சிறு குழப்பமா? பெருங் குழப்பம். ஆளை மாத்தித் தூக்கிக்கிட்டு வந்துட்டாங் கய்யா!

எமன்: ஆ! எமதர்மன் ஆட்சியில் தர்மம் தவறிவிட்டதா!...

(தன் தலைக்கு மேல் இருக்கும் கத்தியை எமன் பார்க்க அது வேகமாக ஆடுகிறது.) இது வேறு ஒரு பயமுறுத்தல்! (சிங்கா தனத்தை விட்டு எழுந்து வந்து சித்ரகுப் தன் நாற்காலியில் அமர்கிறான் எமன்.)

சித்ர: பிரபோ! என்ன இது! தாங்கள் இங்கு அமர்வதோ!

எமன்: என்ன இங்கு அமர்வதோ? நீ செய்த பிழைக்கு என் தலையிலேதானேய்யா கத்தி விழும்? வேண்டுமானால் நீ சென்று அந்த நாற்காலியில் உட்கார்.

மார்க்: போலீஸ். நீங்க யாரு வேணு மானாலும் அந்த நாற்காலியில் உட்காருங்க. என்னைத் தப்பாக் கொண்டு வந்திட்டீங்க. அதைக் கவனிங்கன்னா நாற்காலிச் சண்டை போட்டுக்கிட்டு இருக்கீங்களே!

எமன்: ம்... பொறு மானிடனே. பொறு. இவனை என்ன செய்யலாம் சித்ரகுப்தா?

(கிங்கரன் ஓடி வருகிறான்.)

தூம: பிரபோ! பரமசிவன் ரவுண்ட் ஸுக்கு வருகிறார்!

எமன்: அய்யய்யோ! இவர் வேறு நேரம் கெட்ட நேரத்தில் ரவுண்ட்ஸ் வருகிறாரே. இந்த விஷயம் தெரிந்தால் அவ்வளவுதான். நான் தொலைந்தேன்!

மார்: பரமசிவனா? அவர் தானே உங்க டிபார்ட்மெண்ட் சீப்? வரட்டும். அவர்கிட்டே நியாயம் கேட்கிறேன்!

பீம: பிரபோ! பரமசிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து லேசாகப் புகை வந்து கொண்டிருக்கிறது. அது எந்நேரமும் திறக்கலாம்.



✖ போலீஸ் சிறு: நாமசேது

எமன்: மார்க் கண்டேயா, நான் உன்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து அவரிடத்தில் எதையும் கூறிவிடாதே. அவர் ரவுண்ட்ஸ் முடிந்து போனதும் உனக்கு ஏதாவது வழி செய்கிறேன்!

மார்: பிராமிசா?

எமன்: பிராமிஸ்! (கையிலடித்துத் தரு கிறார்.)

(சிவன் வருகிறார்.)

சிவன்: எமதர்மா? என்ன இது? உன் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்தி சற்று இறங்கி ஆடிக்கொண்டிருக்கிறது!

எமன்: ஆமாம், நீலகண்டரே. ஏனோ தெரியவில்லை. அந்தக் கத்தி சில நாளாகவே ஆடிக் கொண்டிருக்கிறது. கயிறு நைந்து விட்டது போலும்!

சிவன்: இங்கு ஏதோ அதர்ம வாடை வீசுகிறதே. அது ஏன்?

எமன்: அதர்ம வாடையா? இருக்காதே! ம்.... ஹாங்... அது வந்து. இதோ இந்த மானிடப் பதர் பூலோகத்தில் நன்றாகப் பட்டை அடித்து விட்டு வந்திருக்கிறான்....

சிவன்: என்ன எமதர்மா? உன் பேச்சின் போக்கே சரியில்லை. பட்டை அடிப்பது அதர்மமா? ம்... நீரில்லா நெற்றி பாழ் என்ற பழமொழியை மறந்தனையா? எனக்கு விருப்பமான விபூதிப் பட்டை நெற்றியில் அடித்துக் கொள்வது அதர்மமா?

எமன்: அபசாரம். மகா பிரபோ. நான் சொன்னது அந்தப் பட்டையல்ல. பட்டைச் சாராயம். அதாவது மதுபானம்.. சோம. பானம் அருந்தி யிருக்கிறான்!

சிவன்: ம்... சரி சித்ரகுப்தா! அக்கௌண்ட்ஸ் எல்லாம் சரியாக உள்ளதா? ம்... கவனமாக இருக்க வேண்டும் எந்தச் சமயத்திலும் இன்டர்னல் ஆடிட்டிங் வரும். நாம் நம் டிபார்ட்மெண்டில் குறைவில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சித்ர: இதோ இந்த உயிர் கூட எண்ட்ரி ரிகார்டில் பதிவாகி உள்ளது. என் லெட்ஜரிலும் போஸ்ட் செய்து கொண்டு விட்டேன்.

சிவன்: ம்... சரி... லெட்ஜரைக் காட்டு கையொப்பம் போட்டு விட்டுச் செல்கிறேன். ம்... எமதர்மா... நான் சென்று வருகிறேன். தர்மம் குலையாமல் பார்த்துக்கொள்!

எமன்: சரி பிரபோ! (சிவன் போகிறார்) ம்... அப்பாடி ஒரு வழியாகப் பிழைத்தேன். நீ நெற்றிக் கண்ணைப் பார்த்தாயா, எப்படி இருந்தது?

மார்: பம்பரா ஓடுது! கே. பாலசந்தர் சொந்தப் படம்! எஸ். பி. முத்துராமன் டைரக்ஷன் அடுத்த படம் பாக்யராஜ் பண்றாரு.


ரமணி: நாரதர்

எமன்: அடச்சே! அதைக் கூறவில்லை. சிவனின் நெற்றிக் கண்ணைப் பார்த்தாயா? புகை வந்ததோ?

மார்: புகையும் வரலை, ஜலமும் கொட்டலை என்யா இப்படிப் பயந்து சாகறே?

எமன்: சரி, சரி! சித்ரகுப்தா! தவறுதலாய்க் கொண்டு வந்த —இவனைப் பூலோகம் அனுப்பிவிடு!

சித்ர: மன்னிக்க வேண்டும் மகாப் பிரபோ! இவன் பிராமணன். அதனால் அனுப்ப இயலாது.

மார்: என்னய்யா இங்கேயும் பார்வர்ட் கம்யூனிட்டி ப்ராப்ளமா? நான் என்னய்யா காலேஜ் அட்மிஷனு கேக்கறேன்? பூலோகத்துக்குத் திரும்பத்தானேய்யா போகணும்னு சொல்றேன்.

எமன்: என்ன சித்ரகுப்தா, இவனைத் திருப்பி அனுப்புவதற்கும் இவன் பிராமணன் என்பதற்கும் என்ன சம்பந்தம்?

சித்ர: பிராமணர்கள் வீட்டில் நீண்ட நேரம் பிணத்தை வைத்திருப்பது இல்லை. தவிரவும் இவன் தந்தை ரேசுக்கு நேரமாகிவிட்டது என்று இவன் இறந்த உடனேயே அவசரம் அவசரமாய்க் கிரியைகளை முடித்து விட்டார்; இவன் உடலை எரித்து விட்டார்!

மார்: உடம்பை எரிச்சிட்டாங்களா!... யோவ், பாவிகளா! நான் என்னய்யா செய்வேன்? அய்யய்யோ, சாவித்திரி! உன்னை விட்டுப் பிரிந்து வந்துவிட்டேனே! யோவ்! நீ நாசமாப் போக! சிவன் இருக்கிற இடம் எங்கேயா இருக்கு? கம்ப்ளெயிண்ட் கொடுக்கப் போறேன்! அது பேர் என்ன?... ஹ....கைலாசம்! எங்கேயா அது இருக்கு?

எமன்: பொறு மாணிடனே, பொறு... கோபம் கொள்ளாதே. சித்ர குப்தா என்ன செய்வது?

சித்ர: சற்று அவகாசம்கொடுங்கள் சுவாமி! ஏதேனும் வழி தெரிகிறதா என்று பார்ப்போம்.

எமன்: ஆமாம் மார்க்கண்டேயா! என்னை நம்பு! உனக்குக் கட்டாயம் ஒரு வழி செய்கிறேன்.

மார்: இன்னிக்கு ரஜினி படம் ரிலீஸ்யா. டிக்கட் ரிசர்வ் பண்ணி யிருக்கேனே!

எமன்: கவலைப்படாதே என்னிடம் உள்ள வீடியோவில் பார்க்கலாம்!

காட்சி 3

(தேவலோக நீதிமன்றம்)

எமன்: குட்மார்னிங், மார்க்கண்டேயா!

மார்க்: குட்மார்னிங்!

எமன்: நன்னு தூங்கினையா?

மார்க்: என்னய்யா இது நரக வேதனை. ஒரு கொசு கூடக் கடிக்கவில்லையே! கொசு கடிக்காம தூக்கமே வரலை!

பீம: சைலன்ஸ்! சைலன்ஸ்! சைலன்ஸ்!

எமன்: விசாரணை ஆரம்பமாகட்டும்!

தூம: எம். எல். ஏ. வேதாசலம்! எம். எல். ஏ. வேதாசலம்! எம். எல். ஏ. வேதாசலம்!

சித்ர: ம். சொல்லு. நான் சொல்வது எல்லாம் சத்தியம். சத்தியத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

எம். எல். ஏ.: நான் தமிழன். சத்தியம் என்பது வடமொழிச் சொல். நான் தமிழில் தான் பேசுவேன். தமிழ் என் மூச்சு.

மார்: மூச்சு. அது நின்னுதானே இங்கே வந்திருக்கீங்க.?

சித்ர: சரி. தமிழிலேயே சொல்லு!

எம். எல். ஏ.: பிராமிசா நான் சொல்வது உண்மை, உண்மை தவிர வேறில்லை!

எமன்: உமது தொழில் என்ன?

எம்.எல்.ஏ.: எம். எல். ஏ.

எமன்: எம். எல். ஏ. என்றால்?

எம். எல். ஏ.: எம்.எல்.ஏ. என்றால்... எம்.எல்.ஏ. தான். அதுக்கு முழுசா என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியாது.

எமன்: உமது படிப்பு என்ன?

எம்.எல்.ஏ.: பி.ஏ. கெமிஸ்ட்ரி.

மார்: சத்தியம்! சத்தியம்! சத்தியம் பேச வேண்டும்!

எம்.எல்.ஏ.: சரி. ஐந்தாம் கிளாஸ் தமிழ் மீடியம்.

எமன்: எம்.எல். ஏ. ஆவதற்கு முன்னால் என்ன தொழில் செய்து கொண்டிருந்தீர்?

எம்.எல்.ஏ.: பால் வியாபாரம்.

எமன்: ஓஹோ! ஏன் மார்க்கண்டேயா! உங்கள் ஊரில் எம். எல். ஏ. ஆகவேண்டுமானால் முன்னால் பால் வியாபாரம் செய்ய வேண்டுமா?

மார்: பால் வியாபாரம் மட்டும் இல்லே. பொட்டு. புண்ணுக்கு விக்கலாம். எவர்

சில்வர் பாத்திரம் விக்கலாம். காய்கறி பழம் விக்கலாம். ஏன், சாராயம் கூட விக்கலாம். ஆனா படிச்சிருக்கக் கூடாது!

எமன்: நீர் எந்தக் கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏ.?

மார்: எதையாவது ஏடாகூடமாக் கேட்டு வெப்பியே. பாருங்க எப்படித் திருதிருன்னு முழிக்கிறார். யோவ் சொல்லேன்யா!

எம். எல்.ஏ.: தலைவர் அவர்களே...! நான் எந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்று கேட்டீர். நான் 1980 ஜனவரி 1ம் தேதியிலிருந்து ஜனதா. 3ம் தேதியிலிருந்து இந்திரா காங்கிரஸ். 7ம் தேதியிலிருந்து பாரதிய ஜனதா. 11ந் தேதியிலிருந்து தி.மு.க.வுக்கு வந்தேன். 20ம் தேதி பெங்களூர் சென்றபோது 2 நாட்கள் அர்ஸ் காங்கிரசில் இருந்தேன். பிறகு 22ந் தேதி த. நா. கா. கா. காங்கிரசுக்கு வந்தேன். பிப்ரவரி 12ம் தேதி காலை மீண்டும் தி.மு.க. 12ம் தேதி மாலையே அ.தி.மு.க. மீட்டிங் போனேன்.

எமன்: போதும் நிறுத்து மானிடனே. எனக்குத் தலையைச் சுற்றுகிறது.

எம். எல். ஏ. நாங்கள் சரித்திரம் படைத்தவர்கள். பரந்த நோக்கம் கொண்டவர்கள். ஜாதி, மத, கட்சி வேறுபாடுஇல்லாதவர்கள்.



✖ அனிதா: சாவித்திரி

✖ எஸ். வி. சேகர்: மார்க்கண்டேயன்

எமன்: ம். சித்ரகுப்தா. இவர் கணக்கில் நீ எழுதிவைத்துள்ள பாவ புண்ணியக்கணக்குகளைக் கூறு.

சித்ர: மன்னிக்க வேண்டும் பிரபோ. இவர் கணக்கில் பாவம் எதுவும் இல்லை. எல்லாம் புண்ணியம்தான்.

மார்: யோவ், நல்லாப் பாருய்யா. வீட்டு நம்பர் சரியாப் பார்த்துத்தானே கூட்டிக்கிட்டு வந்தீங்க?

எமன்: ஏன் அப்படி ஒரு சந்தேகம், மார்க்கண்டேயா?

மார்: பின்னே? அரசியல்வாதிங்கஒரு. பாவமே இல்லேன்னு சொல்றீரே!

எமன்: புண்ணியங்களைப் படி சித்ரகுப்தா!

சித்ர: இதோ பிரபு. இவர் தேர்தல் காலத்தில் மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறார்.

எமன்: ஆஹா! அப்படி ஒரு அருமையான எம். எல். ஏ.வா இவர்!

மார்: யோவ், சித்ரகுப்தா! இந்தாளு என்ன வாக்குறுதி மக்களுக்குக் கொடுத்தார்? சொல்லு!

சித்ர: நான் எம்.எல்.ஏ. ஆனால் என்னால் இயன்ற அளவு பலபேருக்கு வேலை வாங்கித் தருவேன்னு வாக்குறுதி கொடுத்தார். அதை நிறைவேற்றி வைத்துள்ளார். பல குடும்பங்கள் பிழைக்கின்றன. அது புண்ணியமில்லையா?

மார்: யார் யாருக்கு வேலை வாங்கி வெச்சார்? அவரு சித்தப்பா, அவரு மச்சான், அவரு மாமன், அவரு தங்கச்சி, அவரு அண்ணன் இவங்களுக்குத்தான். தவறிப்போய் உறவே இல்லாத ஒரு பொண்ணுக்கு வேலை வாங்கிக் கொடுத்தாரு. ஆனா அது இப்போ இவரோட மூணாவது செட் அப்.

எமன்: சித்ரகுப்தா! மார்க்கண்டேயன் கூறுவது நியாயம்தான். இவன் தண்டிக்கப்பட வேண்டியவனே. நரகத்துக்கு அனுப்பு.

எம். எல். ஏ.: எமரே, எங்களுக்கு நரகமும் ஒண்ணுதான், நகரமும் ஒண்ணுதான். 'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்' என்று அண்ணா கூறியிருக்கிறார். நாங்கள் எதற்கும் அஞ்சோம். அண்ணா அன்று என்னிடம் சொன்னார்....

அண்ணாவின் குரல்: தம்பி, மார்க்கண்டேயா! அவனைச் செவிட்டில் ஒரு அறை விடப்பா. எதையாவது செய்துவிட்டு என் பேரிலே பழியைப் போடுகிறான். இவன் மட்டும் இல்லை. இவனை மாதிரி ரொம்பப் பேர் பூலோகத்திலே சுத்தறாங்க.

எமன்: ம்... இவனை நரகத்துக்கு இட்டுச் செல்லுங்கள்!

பீம: டைரக்டர் ஜாரதி ஜால்ரா ஜாரதி ஜால்ரா, ஜாரதி ஜால்ரா!

(டைரக்டர் வருகிறார்.)

எமன்: ஜாரதி ஜால்ரா! உமது தொழில் என்ன?

டைரக்: சினிமா டைரக்டர், கதை வசனகர்த்தா, எடிட்டர், காமிரா, மியூசிக், பாடலாசிரியர், கதாநாயகன்....

எமன்: அது சரி. நீர் இந்த சினிமாத் துறைக்கு வர்றதுக்கு முன்னால் என்ன செய்து கொண்டிருந்தீர்?

டைரக்: விவசாயம்.

எமன்: அதுக்கும் சினிமாத் துறைக்கும் என்ன சம்பந்தம்?

டைரக்: ஒரு தடவை நான் உழுதுண்டு இருக்கும்போது கலப்பையிலே ஏதோ சிக்கிக் கொண்டது. என்னனு பார்த்தேன். அது ஒரு பிலிம் ரோல். தமிழ்ப் பட உலகமே என்னை அழைக்கிறது மாதிரி தோணிச்சி. பீல்டிலே குதிச்சிட்டேன். ஒரு பேட்டியிலே இப்படித்தான் எழுதியிருக்காங்க.

எமன்: விவசாயத்துக்கும் படத் தொழிலுக்கும் என்ன சம்பந்தம்?

மார்: அங்கே கலப்பை பிடிச்சவன் இங்கே கிளாப்புக் கட்டையைப் பிடிக்கிறான். அங்கே விதையைச் செலக்ட் பண்ணினா இங்கே கதையை செலக்ட் பண்றான். அங்கே பம்பு செட்டு போட்டுத் தண்ணி அடிச்சாரு இங்கே ரூம் போட்டுக்கிட்டுத் தண்ணி அடிக்

இருக்கு. அங்கே யூரியாவுக்கு அலேஞ்சாரு. இங்கே ஏரியாவுக்கு அலேஞ்சாரு....

எமன்: சந்தோஷம். உழைத்து முன்னுக்கு வந்திருக்கிறார். ம்... இவன் ஆற்றலே நாம் மதிப்போம். சித்ரகுப்தா! இவரது பாவ புண்ணியங்களைக் கூறு.

சித்ர: இவர் தமது பல பாடல்களால் உலக மக்களை நல்வழிப்படுத்தியிருக்கிறார்.

மார்: இவர் பாட்டாலே நல்வழிப்படுத்தினாரா? பாட்டா அது! சகிக்காது.

டைரக்: இந்த மாதிரி சின்னப் பசங்களுக்கெல்லாம் தத்துவப் பாட்டுன்னாப் பிடிக்காதுங்க!

எமன்: அப்படியா? என்ன அப்படித் தத்துவப் பாடல்?

டைரக்: ரத்தத்தின் நிறம் சிவப்பு, பாலின் நிறமோ வெளுப்பு! கடல் நீர் என்பது கரிக்கும். ஆனால் சர்க்கரையோ எப்பவும் இனிக்கும் இதுதான் ஆண்டவன் படைப்பு!

எமன்: இந்த மாதிரிப் பாடல்கள் நானே எழுதுவேனே ம்... இவன் எவ்வளவு புண்ணியம் செய்தவனாய் இருந்தாலும் சரி. இந்தப் பாடலுக்காகவே இவன் தண்டிக்கப்பட வேண்டியவன். இவன் எழுதிய பாட்டுக்களை லட்சம் தடவை இவனே கேட்க வேண்டும். இதுதான் சரியான தண்டனை!

சுருளி குரல்: அதுமட்டும் இல்லீங்க. நான் செத்துப்போயிட்டேன்னு என் பேமண்டைக் கொடுக்காம ஏமாத்திட்டாருங்க!

எமன்: அப்படியா? சித்ரகுப்தா! இவனைத் தண்டித்தே தீர வேண்டும். கொண்டு போங்க எண்ணெய்க் கொப்பரைக்கு!

டைரக்: எண்ணெய்க் கொப்பரையா! ஹையா! எண்ணெய்க் கொப்பரை!

(மகிழ்ச்சியோடு போகிறார்)

எமன்: மார்க்கண்டேயா! இது என்ன? மானிடர்கள் எண்ணெய்க் கொப்பரை என்றால் பயப்படாமல் மகிழ்ச்சி கொள்கிறார்களே!

மார்: எங்க ஊர்லே எண்ணெய்ங்கிறதே கிடைக்கிறதில்லே. கிடைச்சாலும் யானைவிலே குதிரை விலே. அதனாலே எண்ணெய் தேய்ச்சுக்கிற பழக்கத்தையே எல்லாரும் விட்டுட்டாங்க. இங்கே எண்ணெய்க் கொப்பரையிலே முழுகணும்னு சொன்னதும் சந்தோஷம் பிச்சுகிட்டுப் போவுது!

சித்ர: பிரபோ! என்ன இது! இவன் கூறுகிறான் என்பதற்காக எல்லோரையும் நரகத்துக்கே அனுப்புகிறீர்கள்! கேவலம் மானிடன் பேச்சுக்கு மதிப்புத்தருவதா?

மார்: யோவ். என்னய்யா குறைஞ்சு போச்சு மானிடனுக்கு? இன்னிக்குச் சாயங்காலம் சொர்க்கத்திலே தேவர் ஹால்லே சர்வ கட்சி மீட்டிங்! அனைத்துக் கட்சித் தலைவர்களும் எனக்கு ஆதரவு தந்து பேசுவாங்க. அப்புறம் தெரியும் உன் நிலைமை. அதுக்கப்புறம் சொல்லு இந்த மானிடனைப் பத்தி!

காட்சி 4

எமன்: சித்ரகுப்தா! நிலைமை மோசமாகி விட்டது. சர்வ கட்சி மீட்டிங் பற்றி சர்வேஸ்வரன் காதில் விழுந்தால் நம் கதி என்னாவது?

சித்ர: நம் கதி என்று கூறுகிறீர்கள். என் கதி என்று கூறுங்கள். மந்திரிகள் மாறினாலும் செக்ரட்டரிகள் மாறுவதில்லை. எமதர்மன் மாறினாலும் சித்ரகுப்தன் மாறுவதில்லை.

எமன்: எல்லாம் உன்னால் வந்ததுதான். ஆள் மாராட்டம் செய்து விட்டாய். மாட்டிக்கொண்டு விழிக்கிறேன்.

(நாரதர் வருகிறார்.)

நார: நாராயண! நாராயண!

எமன்: யாரது? ஓ நாரதரா! இங்கு எதற்கு வந்தீர்? இங்கே ஏற்கனவே இருக்கிற கலகம், கலவரம் போதாதா?

நார: இல்லை எமதர்மா. உனக்கு உதவத்தான் வழி தேட வந்திருக்கிறேன். மார்க்கண்டேயன் உன் கண்ணில் விரலை விட்டு ஆட்டுகிறானாமே!

எமன்: அதற்குள் அது உமக்குத் தெரிந்து விட்டதா? அவ்வளவுதான். நான் செத்தேன்.

நார: எல்லார் சாவுக்கும் காரணமாயிருக்கும் நீ சாவதா?

சித்ர: பிரபோ! இப்படிச் செய்தால் என்ன? ஆக்கும் கடவுளான பிரம்மாவிடம்



✖ ராஜாமணி: எம். எல். ஏ.

நிலைமையைக் கூறி ஒரு உடலைப் படைக்கச் செய்வோம். அதனுள் மார்க்கண்டேயனைப் புகுத்திப் பூலோகம் அனுப்பி வைப்போம்!

எமன்: செய்யலாம் சித்ரகுப்தா. ஆனால் பிரம்மா இப்போது இங்கு இல்லியே. அவர் டூர் போயிருக்கிறார். அவர் அஸிஸ்டெண்ட் வஜ்ரகும்பன்தானே சிருஷ்டியையே கவனித்துக் கொள்கிறான்!

நார: வஜ்ஜிரகும்பன்தானே ஆக்டிங் பிரம்மாவாக இருக்கிறான்? கவலையை விடு எமதேவா! வஜ்ஜிரகும்பன் நம்ம சித்ரகுப்தனுக்கு நெருங்கிய நண்பன்தானே?

சித்ர: ஆமாம் பிரபோ! நானும் அவனும் ஒன்றாகத்தான் செக்ரடேரியல் கோர்ஸ் பரீட்சை எழுதினோம். செக்ரட்டரி போஸ்ட்டுக்கும் வந்தோம்.

நார: அதுவும் இல்லாமல் எமதேவா, வஜ்ஜிரகும்பன் ஒரு மாதிரி பேர்வழி! அன்பளிப்பு என்றால் போதும். அசடு வழிவான்!

எமன்: அப்படியா? அப்படியானால் வேலை சுலபமாக முடிந்து விடும். சித்ரகுப்தா! நீ வஜ்ஜிரகும்பனை இங்கு அழை!

சித்ர: அப்படியே பிரபு! (ஒரு பட்டனை அமுக்குகிறான்) வஜ்ஜிர கும்பா 'ப்ளீஸ் ரிப்போர்ட் டு எமதர்மா'ஸ் கோர்ட்!

(படீரென்று ஒரு வெடிச் சத்தம். வஜ்ர கும்பன் வருகிறான்.)

வஜ்ஜி: காலதேவனுக்குக் காலை வணக்கங்கள்.

எமன்: ம்... நல்லது. எனக்கு உன்னிடத்தில் ஒருசிறு உதவிதேவைப்படுகிறது. எனக்கு உடனடியாக டூப்ளிகேட்டாக ஒரு மானிட உடல் தேவை.

வஜ்ஜி: பிரபோ, அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன.

எமன்: என்ன அது?

வஜ்: பிரம்ம தேவன் எலும்புகளை எண்ணி வைத்து விட்டுப் போயிருக்கிறார். அவரை மீறி நான் ஏதாவது செய்தால் என் எலும்புகளை எண்ணி விடுவார். கோடவுனில் நான் உற்பத்தி செய்யப்போகும் உடல்களுக்குத் தேவையான எலும்புகளும் உயிர்களும் மூளைகளும் மட்டும்தான் கணக்காக உள்ளன. ஒன்றுதான் என்றால் அட்ஜஸ்ட் பண்ண முடியும்.



✖ ஸ்ரீதர்: பரமசிவன்

எமன்: என்ன அது?

வஜ்: சதைகள்.

சித்ர: அது மட்டும் எப்படி சாத்தியமாகும்?

வஜ்: அதாவது ஒரு குழந்தையை 10 பவுண்ட் ஒரு குழந்தையை 7 பவுண்டு, ஒரு குழந்தையை 6 பவுண்டில் படைக்க வேண்டும் என்று குறிப்பில் இருக்கிறது. நான் அவை எல்லாவற்றையும் குத்து மதிப்பாக நாலரைப் பவுண்டில் படைத்துவிடுவேன். இப்படி எல்லாம் மிச்சம் பிடித்து வேண்டுமானால் சதையைத் திருடலாம். அப்படியும் ஏதாவது குறைந்தால் இங்குதானே சிபிச் சக்கரவர்த்தி இருக்கிறார். உதவுவார். உயிரோ தங்களிடம் இருக்கிறது. மூளை வேண்டுமானால் வைக்கலாம். இல்லாவிட்டால் வேண்டாம். ஆமாம் இவன் எங்கு பிறக்கப் போகிறான்?

எமன்: இந்தியாவில்!

வஜ்: அப்போது மூளை இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை!

சித்ர: பின் என்னதான் உனக்குத் தேவை?

வஜ்: எலும்பு மட்டும்தான் தேவை. அஸ்தி கிடைத்தாலும் போதும், எலும்புகளை சிருஷ்டித்து விடுவேன்.

எமன்: அதற்கு என்ன செய்யலாம்?

சித்ர: பூலோகத்தில் மார்க்கண்டேயனது அஸ்தியைக் கங்கையில் கரைக்க ஏற்பாடுகள் செய்து அவர்கள் வீட்டு சாஸ்திரிகள் வசம் ஒப்படைத்து இருக்கிறார்கள். அதை எடுத்து வரச் செய்து விடுவோம்.

எமன்: இதற்குள் அந்த ஐயர் அதைக் கங்கையில் கரைத்து இருந்தால்?

சித்ர: இல்லை பிரபோ. இன்னும் இரண்டு பேர் சாகக் கிடக்கிறார்கள். எல்லாருடைய அஸ்திகளையும் ஒரே செலவில் கரைத்து விடலாம் என்று இதை வைத்து இருக்கிறார்.

எமன்: அப்படி என்றால் உடனே மார்க்கண்டேயனது எலும்புகள் அடங்கிய கலசத்தை எடுத்து வர ஏற்பாடுகள் செய்.

காட்சி 5

எமன்: மார்க்கண்டேயா, இப்போது உனக்குச் சந்தோஷம்தானே?

மார்: ம். கலசத்தைக் கொண்டு வந்து மூன்று நாள் கழிச்சுத்தான் உடம்பைப் பண்ணி யிருக்கீங்க.

எமன்: மார்க்கண்டேயா, இனி நீ இஷ்டம் போல் உன் வீட்டுக்குச் செல்லலாம்.

மார்: தாங்க்யூ. சீனு குனு வரேன்யா. மிஸ்டர் நாரதரே வரேன். என்னைப் பார்க்காம எங்கப்பா துடிச்சுப் போயிருப்பார். என்னைத் தேடிக் கொண்டு இங்கேயே வந்தாலும் வந்துடுவார். அவ்வளவு பாசம்.

(புறப்படுகிறான். எதிரில் அவன் தகப்பனார் காமேஸ்வரன் வருகிறார்.)

காமே: மார்க்கண்டேயா!

மார்: பாத்தியா! நான் சொன்ன மாதிரி வந்துட்டார்! (திடுக்கிட்டு) ஹா! என்னப்பா நீ இங்கே வந்துட்டே?

காமே: என்னடா நான் என்னமோ வேணும்னு வந்த மாதிரி. கேக்கறே. என் விதி முடிஞ்சு போச்சு. வந்துட்டேன்.

மார்: அடடா! வீட்டுச் சாவியை யார் கிட்டே கொடுத்திட்டு வந்திருக்கே?

காமே: வீட்டுச் சாவியா? என்னடா என்னமோ திரும்பிப் போறவன் மாதிரி கேக்கறே?

மார்: கரெக்ட். நான் திரும்பி நம்ம உலகத்துக்குப் போறேன். நம்ம தெருவில் பழைய 41ல் இருக்கிற மணிகண்டனைக் கொண்டு வர்றதுக்குப் பதிலா புது 41ல்ல இருக்கிற என்னை மாத்திக் கொண்டு வந்துட்டாங்க.

காமே: அப்படியா! இரு நானும் வந்துடறேன். போல் நானும் புது 41ஐச் சேர்ந்தவன்தான். வரேன். வாடா போகலாம்.

சித்ர: பெரியவரே. உம்மை நாங்கள் சரியாகத்தான் கொண்டு வந்துள்ளோம். உம்ம பையன் விஷயத்தில் ஏற்பட்ட குழப்பத்துக்குப் பிறகு எமலோகத்தில் போட்டோகிராபி டிபார்ட்மெண்ட் ஒன்னு ஏற்படுத்தி விட்டோம். எல்லார் போட்டோவும் எங்களிடத்தில் உள்ளது. ஆகையால் நோ மிஸ்டேக்ஸ் ஹியர் ஆஃப்டர்.

மார்: சித்ரகுப்தா எங்கப்பா போட்டோவைப் பெரிசா என்லார்ஜ் பண்ணிக் குடுத்துடு. வீட்டிலே மாட்டிக்கிறேன். செலவு மிச்சம். சரிப்பா நான் வரேன்.

காமே: வருஷா வருஷம் ஒழுங்கா தெவசம் பண்ணுடா.

மார்: மிஸ்டர் எமதர்மரே. விசாரணையே தேவையில்லை. எங்கப்பாவைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். சொர்க்க லோகத்துக்கு அவர் லாயக்கில்லே! நான் வரேம்பா!

காமே: நீ அங்கே போய் என்னடா பண்ணப் போறே?

மார்: ஏன், நம்ம வீட்டை வாடகைக்கு விட்டுட்டு. ஒரு போர்ஷன்லே நானும் சாவித்திரியும் ஒற்றுமையா குடும்பம் நடத்துவோம்.

காமே: ஹூக்கும்... பிளாட் பாரத்திலதான் நீ குடும்பம் நடத்தணும். நான் வீட்டை வித்தாச்சு!

மார்: என்னது! வீட்டை வித்தாச்சா? எதுக்கு வித்தே?

காமே: ரேசுக்குத்தான். ஒரு லெக்லே போச்சு. நல்ல வேளை. உன்னோட பி. எப். இன்சூரன்ஸ் எல்லாம் செட்டில் ஆச்சு. நாமினிங்கிற பேர்ல நான் வாங்கி அதையும் ரேஸ்லே விட்டாச்சு. ஏன் உன் எஸ். எஸ். எல். சி. புக்கைக்கூட வித்துட்டேன்.

மார்: என்ன விளையாடறியா? நான் செத்துப்போய் இன்னியோட நாலு நாள் ஆறது. அதுக்குள்ளே எப்படி இந்தியாவிலே பி. எப். இன்ஷூரன்ஸ் எல்லாம் செட்டில் ஆகும்?

காமே: நாலு நாளா? நீ செத்து இதோட நாலு வருஷம் ஆறது!

மார்: நாலு வருஷமா?

நார: மார்க்கண்டேயா! இங்கு ஒரு நாள் என்பது பூலோகத்திலே ஒரு வருஷம்.

மார்: நான் எங்கேயாவது ஒரு வேலையைத் தேடிண்டு வாடகை வீட்டிலேயாவது சாவித்திரியோட குடும்பம் நடத்தப் போறேன்.

காமே: அதுவும் முடியாதே.

மார்: ஏன்? அவளையும் வித்துட்டியா?

காமே: சாவித்திரி இப்போ எதித்தாத்திலே இல்லே. அவ மனசு சரியில்லாம மாறு மாறுவுக்கு மாறுன்னு சொல்லி எங்கேயோ மதுரைப் பக்கம் போயிட்டா.

மார்: சாவித்திரியும் இல்லையா? அய்யய்யோ! இனிமே பூலோகம் போய் என்ன புண்ணியம்? யோவ், எமா! உன்னாலே தான்யா இவ்வளவு கஷ்டம். இப்பவே போய் பரமசிவன் கிட்டே சொல்லி உன்னை என்ன பண்றேன் பாரு!

நார: மார்க்கண்டேயா! கொஞ்சம் பொறு. இங்குள்ள பஞ்சகல்யாணி குதிரையை உங்கப்பாவுக்குக் காட்டு. அதற்குள் உனக்கு நான் ஒரு வழி செய்கிறேன்.

மார்: இன்னும் பத்து நிமிஷத்திலே வருவேன். அதுக்குள்ளே ஒரு ஏற்பாடு செய்யலே அவ்வளவுதான். நெற்றிக் கண் ஞாபகமிருக்கட்டும்!

(மார்க்கண்டேயன் அப்பாவை அழைத்துக்கொண்டு போகிறான்.)

நார: எமதர்மா, பிரம்மதேவன் ஒரே உருவம் போல் ஏழு உருவம் செய்கிறார் என்பது உனக்குத் தெரியும்—இல்லையா?

எமன்: உலகத்தில் ஒவ்வொருவரைப்போலவும் ஏழு பேர்கள் உள்ளார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். எஸ்.பி. முத்துராமன் ஒரு படம் கூட எடுத்தாரே.

சித்ர: காற்றினிலே வரும் கீதம்.

நார: கரெக்ட். மார்க்கண்டேயனைப் போல உருவம் கொண்ட மற்ற ஆறுபேர்கள் விதியைப் பற்றி சித்ரகுப்தா உனக்குத் தெரியுமே. சொல்லு பார்க்கலாம்!

சித்ர: இதோ ஒரு நொடியில் கூறிவிடுகிறேன். (பேரேட்டைப் புரட்டுகிறார்.)

சித்ர: பிரபோ! அந்த ஆறு பேரில் மூன்று பேர் ஏற்கனவே இறந்து விட்டனர். மீதி இருப்பவர்களில் ஒருவன் ஷியாங்காய் என்பவன். சீனாவில் இருக்கிறான். பாக்ஸ்டர் என்ற ஒருவன் இங்கிலாந்தில் இருக்கிறான். இன்னொருவன் பெயர்... ஆ... இதோ... கண்ணப்பன். அவன் மதுரை என்னும் ஊரில் மேற்கு ஆவணி மூல வீதியில் 81ம் நம்பர் வீட்டில் இருக்கிறான்.

நார: அப்படியா! அவன் விதியைக் கூறு.

சித்ர: சுவாமி, நாம் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்!

நார: என்ன சித்ரகுப்தா?

சித்ர: அந்தக் கண்ணப்பனின் விதி நாளையோடு முடியப் போகிறது!

நார: அப்படியா! எப்படி?

சித்ர: நாரதரே! நாளை அவன் ஏதோ வேலை நிமித்தம் சென்னை செல்ல இருக்கிறான். வழியில் திருச்சி அருகே அவன் பயணம் செய்யப்போகும் பஸ் கவிழப் போகிறது. அதில் அந்தக் கண்ணப்பன் நசுங்கிக் கூழாகி இறக்கப் போகிறான்!


※ சிவ சங்கரன்: சித்ரகுப்தன்

நார: வெரி குட்! அவனுக்குப்பதிலாக மார்க் கண்டேயனை அங்கு அனுப்பிவிடு.

எம்: ஆகா! அற்புதமான யோசனை. சித்ரகுப்தா! அந்தக் கண்ணப்பன் மதுரை அட்ரஸைக் கொடுத்து மார்க்கண்டேயனை அனுப்பினவை.

சித்ர: அப்படியே சுவாமி. நாளைதானே அனுப்ப வேண்டும்?

நார: சிவ சிவா! பூமியில் நாளை என்பது இன்னும் ஐந்து நிமிடங்களில் வந்துவிடும்!

எமன்: அய்யய்யோ! மார்க்கண்டேயா! கண்ணு மார்க்கண்டேயா!

(எமன் மார்க்கண்டேயனைத் தேடி ஓடுகிறான்.)

காட்சி 6

(கண்ணப்பன் வீடு. அனுசூயா உட்கார்ந்திருக்கிறாள். மாமனார் ராமபத்ரன் உள்ளே நுழைகிறார்.)

ராம: ஏம்மா, கண்ணப்பன் ஊருக்குக் கிளம்ப ரெடியாயிட்டானா? அவன் துணி மணியெல்லாம் எடுத்துப் பெட்டியிலே வெச்சுட்டியா? நான் போய்க் குதிரை வண்டி கூட்டிண்டு வந்துடறேன்.

அனு: எல்லாத்தையும் வச்சுட்டேன். நீங்க போய்க் கூட்டிண்டு வாங்கோ.

(போகிறார்.)

கண்ணப்பன்: ஏய் அனுசூயா ரெண்டு ரெண்டு பேண்ட் சட்டையை பெட்டிலே வையுன்னு சொன்னா ரெண்டு பேண்ட் சட்

இம்மாத ரத்தினம்

அக்டோபர் மாதத்தில் பிறந்தவர்களுக்குரியது ஓபல் (OPAL) என்று சொல்வார்கள். இது வெள்ளை, சாம்பல், நீலம், பச்சை மற்றும் சிவப்பு நிறங்களில் இருக்கும். ரத்தினங்களின் கடினத்தன்மையை மோஸ் அளவில் மதிப்பிடுவார்கள். இதன் கடினத்தன்மை 5.5–6.5. ஓபல், அழகு, செல்வம் ஆகியவற்றைக் குறிக்கும்.



இவரது செல்வச் செழுமைக்கு உதவுகிறது இந்தியன் பாங்க்

என்றும், எங்கும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் ரத்தினம்
இந்தியன் பாங்க்

வங்கிகளுக்கு அடிப்படை பணம். தனிநபரும் நிறுவனங்களும், நாடுகளும் செழிப்புற்றிருக்க பணம் உதவுகிறது. ஆக்கப் பணிகளுக்கு பண உதவி தருவதோடு, அனைத்து விதமான நிதி அலுவல் களுக்கும் உதவி செய்கிறோம்.

ஒரு வார்த்தை சொல்லுங்கள். உங்கள் சார்பில் வாடகை, கட்டணங்கள் போன்றவற்றை அவ்வப்போது செலுத்தி விடுவோம். உங்கள் பணத்தை வேறு கிளைகளுக்கோ, வேறு கணக்கு களுக்கோ மாற்றவேண்டுமானால் அதையும் செய்கிறோம். அதோடு உங்கள் செக்குகள், பென்ஷன் தொகை போன்றவற்றை நாங்கள் பெற்றுத்தருகிறோம்.

நலிவுற்றோருக்குக் கடனுதவி அளிப்பதற்காக இந்தியன் பாங்கில் தனிப்பிரிவு இருக்கிறது. சொந்தத் தொழில் நடத்த கடன்தரும் திட்டங்கள் உள்ளன— அதுவும் சலுகை வட்டியில். சிறுதொழில்கள், விவசாயம், ஏற்றுமதி ஆகியவற்றில் தனி கவனம் செலுத்துகிறோம்.

உங்கள் சேமிப்பு, கிடுகிடுவென்று வளர, உங்கள் தேவைக்கேற்ற பல திட்டங்கள் இந்தியன் பாங்கில் இருக்கின்றன.

இந்தியன் பாங்க்

உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி

இப்போது பவள விழா ஆண்டில் நடைபோடுகிறது.

ADWAVE/IB/1750/TAM

டையைப் பீரோவிலே வெச்சுட்டு மத்த துணி மணி எல்லாத்தையும் எடுத்துப் பெட்டிலே வெச்சிருக்கே. மூட்டைத் துணியோட போனு பாக்க வண்ணான் மாதிரி இருக்கும்.

அனு: அவ்வளவு வேண்டாமா உங்களுக்கு? அப்ப சின்ன பெட்டியிலே அளவா வெச்சு எடுத்துண்டு வரேன்.

(அனு உள்ளே போக சாவித்திரி வருகிருள்)

சாவி: மார்க்கண்டேயன்!

கண்ண: வாம்மா சாவித்திரி நீ எங்கே வந்தே?

சாவி: மார்க்கண்டேயன்! நீங்க ஊருக்குப் போயிட்டு ரெண்டு நாள் கழிச்சுத்தான் வருவீங்களாமே. ரெண்டு நாள் உங்களைப் பார்க்காம நான் எப்படி இருப்பேன்?

கண்ண: என்னடா பெரிய எழவாப் போச்சு. மார்க்கண்டேயன், மார்க்கண்டேயன்! யாரது மார்க்கண்டேயன்? நான் கண்ணப்பன். நாலு வருஷமாச் சொல்லிண்டு இருக்கேன். திருப்பித் திருப்பி மார்க்கண்டேயன், மார்க்கண்டேயன், மார்க்கண்டேயன்னு கூப்பிட்டு உயிரை வாங்கிண்டு இருக்கே!

சாவி: மார்க்கண்டேயன்! நீங்க மார்க்கண்டேயன் இல்லேங்கிறது எனக்குத் தெரியும். ஆனு என்னைப் பொறுத்தவரை நீங்க மார்க்கண்டேயன்தான்!

கண்ண: எனக்கும் உன்னை மாதிரி பைத்தியம் பிடிக்க வெச்சுட்டுத்தான் மறு காரியம் பார்ப்பே போலிருக்கு!

சாவி: அங்கிள், தப்பா நினைக்காதீங்க. நான் மெட்ராஸ்லே இருந்தப்போ என் வீட்டுக்கு எதிர் வீட்டுலே மார்க்கண்டேயன்னு ஒருத்தர் இருந்தார். அவரும் நானும் ஒருத்தரை ஒருத்தர் உயிராக் காதலிச்சோம். அவர் ஒரு நாள் பொட்டுன்னு உயிரை விட்டுட்டார். நீங்க அவரை மாதிரியே இருக்கேன்.



✖ பாலு: வச்சிரகும்பன்

கண்: அதனுலே நானும் பொட்டுன்னு போகணும்கிறியா?

சாவி: இல்லே. அதனுலே நான் உங்களை மார்க்கண்டேயன்னு கூப்பிட்டுண்டு மனசைத் தேத்திண்டு இருக்கேன்.

கண்ண: அம்மாடி சாவித்திரி. நான் கல்யாணம் ஆனவன். நீ பாட்டுக்கு என் ஒய்ஃப் இல்லாதபோது இந்த மாதிரியெல்லாம் இருக்கிறது நல்லா இல்லே. ஏற்கனவே அவ ஒரு சந்தேகப் பிராணி.

(அனுசூயா வருகிருள்.)

கண்ண: என்னடி, என்னுச்சு? எதுக்கு மாவு மிஷின் மாதிரி பல் அரைக்கிறே?

அனு: ஏங்க, உங்களுக்கு இதெல்லாம் நல்லா இருக்கா? அந்தப் பொண்ணுக்குப் பைத்தியம்னு சொல்லிக்கிட்டே உங்ககிட்ட இப்படி வர அனுமதிக்கிறீங்க... ஹி ஹின்னு பல்லே இளிக்கிறீங்களே....

கண்ண: இதோ பாரு அனுசூயா. நான் ஊருக்குக் கிளம்பும்போது கண்ணைக் கசக்கிண்டு நிக்காதே.

சாவி: என்ன அக்கா, அங்கிள் ஊருக்குக் கிளம்பறப்போது அழறேன். இப்ப நான் அழறேனு பாருங்க!

(அப்பா–ராமபத்ரன் வருகிருர்.)

ராம: டேய் கண்ணப்பா, குதிரை வண்டி ரெடி.

கண்ண: என் தலையெழுத்து. நான் போய்த் தொலையறேன்.

சாவி: அப சகுனமா ஏதாவது சொல்லாதீங்க. போயிட்டு வரேன்னு சொல்லணும். பார்த்து நிதானமாப் போங்க. அங்கிள்!

(கண்ணப்பன் போகிருன். ராமபத்திரன் உள்ளே செல்கிருர்.)

அனு: என்னடி அங்கிள்? என்ன அங்கிள்?

சாவி: மார்க்கண்டேயன் அங்கிள்!

அனு: இதோ பார். அங்கிள்னு மட்டும் கூப்பிடாதே. அப்புறம் ஏமாந்தா ஒரு நாள் கல்யாணம் பண்ணிண்டு வந்து நிப்பீங்க!

சாவி: நீங்க என்னன்னு நினைச்சுண்டு இருக்கேள்? நான் கண்ணப்பனைக் காதலிக்கிறேன்னு அய்யய்யோ! என் மார்க்கண்டேயன் எங்கே இந்தக் கண்ணப்பன் எங்கே? அவர் நல்ல அழகு. கம்பீரம். புத்திசாலி!

அனு: போதும்டி நிறுத்து. உன் மார்க்கண்டேயனை விட என் புருஷன் ஒண்ணும் குறைஞ்சு போயிடல்லே. அவர் கிட்டேயும் நீ சொல்ற எல்லாம் இருக்கு. இனிமே நீ இந்த வீட்டுப் பக்கம் வரக் கூடாது.

சாவி: நான் ஏன் வர்ரேன்? அவர் திரும்பி வரத்தான் ரெண்டு நாளாகுமே?

அனு: வெளியே போடி கழுதை! கெட் அவுட்!

(அனுசூயா உள்ளே போகிருள். சாவித்திரி வெளியேறுகிருள். கிங்கரர்கள் வருகிருர்கள்.)

தாம: மார்க்கண்டேயா யாரும் இல்லேம்... வா.

(மார்க்கண்டேயன் வருகிருன்.)

மார்: ம்...வெளியே... போற பொண்ணு எங்கேயோ பார்த்த முகமா இருக்கு...

தாம: இதுதான் நீ இருக்க வேண்டிய வீடு. நாங்கள் வருகிறோம். மறக்காதே. உன் பெயர் கண்ணப்பன்.

மார்: இந்த வீட்டிலே யார் யார் இருக்காங்க? நான் அவங்களுக்கு என்ன உறவு? இதெல்லாம் சொல்லிட்டுப் போங்க.

பீம: அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நீதான் பெரிய நடிகனுச்சே. சமாளி.

தாம: விஷ் யூ ஆல் த பெஸ்ட் (போகிருர்கள்.)

மார்: சார் சார்!

(கண்ணப்பனின் தகப்பனுர் ராமபத்திரன் வருகிருர்.)

ராம: என்னடா இது? சொந்த வீட்டிலே சார்னு கூப்பிட்டுண்டு? ஊருக்குப்போறேன்னு சித்த முன்னுடிதானே கிளம்பினே. உடனே திரும்பி வந்து நிக்கறே?

மார்: ஆமாம். இப்போதான் கிளம்பினேன். ஆனு இப்பவே திரும்பி வந்துட்டேன்.

வண்ண ஒளி சிந்துவது
தீபாவளி
எழில் வண்ணம் சிந்துவது
கோ-ஆப்டெக்ஸ்



- கண்ணைக் கவரும் கவின்மிகு படைப்புகள்
- எண்ணிட முடியாத எழிலார்ந்த சேலைகள்
- சின்னஞ் சிறுவர்களுக்கு
  மின்னும் வண்ணச் சட்டைத் துணிகள்
- பாங்கான வேட்டிகள்
- பல்வகை லுங்கிகள்
- படுக்கை விரிப்புகள்
- அலங்காரத் துணிவகைகள்
- ஆடை அணிகலன்கள்

தீபாவளி சிறப்புத் தள்ளுபடி



1.10.81. முதல்

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

ராம: என்னடா, என்னமோ கேட்டா என்னமோ சொல்றே? இதுக்குத்தான் அந்த எதிராளாத்து பைத்தியம் சாவித்திரிகிட்டே பேசாதேன்னு சொன்னேன். அம்மா அனு சூயா இங்கே வாயேன். யாரு வந்திருக் கான்னு பாரு.

அனு: யாரு? என்னது! போன உட னேயே திரும்பி வந்திட்டீங்க?

மார்: ஆமாம். வந்துட்டேன்.

அனு: ஆமா, ஊருக்கு எடுத்துக்கிட்டுப் போன பெட்டி படுக்கை எங்கே?

மார்: ஆங்!... பெட்டி தொலேஞ்சு போச்சு. அதுதான் சகுனம் சரியில்லேன்னு திரும்பி வந்துட்டேன்!

அப்பா: குதிரை வண்டிலே போகும் போதே பெட்டி தொலேஞ்சு போச்சா? ஆமா, பேண்ட் புதுசா இருக்கே ஏது?

மார்: ஆமா. குதிரை வண்டி குடை சாஞ்சு பேண்ட் அழுக்காப் போயிடுத்து. கடையிலே வேறே வாங்கிப் போட்டுண்டுட் டேன். அது சரி, யாரோ சாவித்திரின்னு சொன்னிங்களே,—யாரு அது?

அனு: ஒண்ணும் தெரியாத மாதிரி வேஷம் போடறீங்களா? உங்களேயே சுத்திச் சுத்தி வருமே எதிர் வீட் டுச் சனியன்! பைத் தியம்!

மார்: அவ இங் கேயா இருக்கா?

ராம: குதிரை வண்டி குடை சாஞ்சு போய் ஏற் கனவே பிரண்டு கிடக்கான்! அவன் கிட்டப் போய் அந்தப் பைத்தியம் சாவித்திரியைப் பத்திச் சொல்லி ஏன்பயமுறுத்தறே. போய்க் காப்பி கொண்டு வந்து கொடு.



✖ சாரநாத் சீனிவாசன்: கண்ணப்பனின் அப்பா

அனு: இதோ கொண்டு வரேன். (போகிறாள்.)

ராம: உனக்கு நேரம் சரியில்லேயோ என் னவோ. நான் பக்கத்துத் தெரு ஜோஸ்யர் சிவராமனேப் பார்த்துட்டு வந்துடறேன்.

(ராமபத்திரன் போகிறார். அனுசூயா காப்பியுடன் வருகிறாள்.)

அனு: காப்பி சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுத்துக்குங்கோ. நான் பக்கத்து கோவில்ல ஒரு அர்ச்சனே பண்ணிட்டு வந்துடறேன்.

(அனுசூயா போகிறாள். சாவித்திரி வரு கிறாள்.)

சாவி: என்ன அங்கிள், அதுக்குள்ளேயா ரெண்டு நாள் ஆயிடுத்து? காலம் எவ்வளவு வேகமா போறது, பார்த்தேளா?

மார்: சாவித்திரி நீயா! நீ இந்த ஊர்லயா இருக்கே? அப்பா சவுக்கியமா?

சாவி: என்ன கண்ணப்பன் அங்கிள்! வேளேயாடறீங்களா? நாலு வருஷமா பாக்க றீங்க. இண்டல் பண்றீங்களா?

மார்: அய்யய்யோ. நான் கண்ணப்பன் இல்லே சாவித்திரி. நான் உன் மார்க்கண் டேயன்.

சாவி: இதெல்லாம் தப்பு கண்ணப்பன். உங்க மனேவி இருக்கும்போது ஒரு பேச்சு, இல்லாதபோது ஒரு பேச்சு. இதெல்லாம் எனக்குப் பிடிக்கலே.

மார்: கண்ணப்பன்... கண்ணப்பன்... யாரது அந்த மடையன் கண்ணப்பன்? டீ...சாவித்திரி. என்னேத் தெரியலேயாடி?

சாவி: என்ன டி போட்டுப் பேசறீங்க? மார்க்கண்டேயன்னு சொல்லி என்னே ஏமாத் தப் பாக்கறியாடா?

மார்: என்னது... டாவா? சாவித்திரி என்ன இது?

சாவி: பின்னே என்ன? இவ்வளவு நாள் என்னேக் கண்டதும் கன்னு பின்னுன்னு திட்டித் துரத்திட்டு இப்போ திடீர்னு டீ போட்டுப் பேசி அன்னியோன்யம் கொண் டாடுறியே!

மார்: சாவித்திரி நான் நிஜமாகவே மார்க்கண்டேயன்தான். உன்னே மனசாரக் காதலிச்ச மார்க்கண்டேயனேதான். உனக் காகவே மேலோகத்திலே இருக்கிற எங்க அப்பா பேச்சைக் கூடக் கேட்காம மறுபடி யும் வந்திருக்கேன். வா. நாம எங்கேயாவது ஓடிப் போயிடலாம்!

சாவி: சீ சீ சீ. துஷ்டனே! நான் சொன் னதையெல்லாம் நல்லா ஞாபகம் வெச்சிக் கிட்டு எங்கிட்டேயே பிளேட்டைத் திருப் பறியா! ரொம்ப நல்லாயிருக்கு. என்ன சொன்னீங்க? ஓடிப் போயிடலாம்னு?

மார்: ஓடின்னு நிஜமாவே ஓடி இல்லே. ரயில்லேயோ பஸ்ஸிலேயோதான்!

சாவி: நிச்சயமா நீங்க என் மார்க் கண்டேயன் இல்லே. என் மார்க்கண்டேயன் கன்னிப் பெண் கிட்டே கண்டபடி பேசறவர் இல்லே. கண்ணியமா நடந்துக்குவார். கடமை உணர்ந்தவர். கல்யாணம்பண்ணிக்க ஆசைப் பட்டவர். என்னேக் கண்ணுக்குக் கண்ணு நெனேச்சார். கானுவுக்கு கனுப் போட்டுப் பேசிட்டேன். ஏன்னு நான் தமிழ் வாத்தி யார் பொண்ணு!

மார்: சாவித்திரி, அப்போ நான் மறு படியும் பூலோகத்துக்கு வந்ததே வேஸ்ட் தானு?

சாவி: நீங்க பூலோகத்திலே பிறந்ததே வேஸ்ட்!

மார்: அய்யய்யோ, சாவித்திரி! நான் சொல்றதைக் கேளு. சாயங்காலம் தெப்பக் குளம் பக்கம் வா. விவரமாச் சொல்றேன். உனக்கு அப்போ புரியும். (அனுசூயா—வரு கிறாள்.)

சாவி: (அனுவைப் பார்த்து) ஐ பிட்டி யூ (போகிறாள்.)

அனு: என்னது... தெப்பக்குளம்?

மார்: ஒண்ணுமில்லே. மீனாட்சி அம்ம னுக்கு வேண்டிண்டு தெப்பக்குளத்திலே குளி, உன் பைத்தியம் தெளியும்னு சொன்னேன்.

அனு: இல்லே. ஏதோ மறைக்கிறேள். இது எங்கேயோ போய் முடியப் போறது!

மார்: ஆமாம். எங்கேயோ போய்த்தான் முடியப் போறது! (பதறியவாறு) ஏய் அனு சூயா. இதோ பாரு. நான் கொஞ்சம் வெளியே போய்ட்டு வந்துடறேன். எனக்

காகக் காத்திருக்க வேண்டாம். சீக்கிரம் தூங்கிடு. என்ன? (ஓடுகிறுன்)

காட்சி 7

[எமலோகம்]

சித்ர: பிரபோ! பிரபோ!

எமன்: என்ன சித்திரகுப்தா. என்ன இவ்வளவு பதற்றம்?

சித்ர: மோசம்போய் விட்டோம் பிரபோ!

எமன்: என்ன சித்திரகுப்தா? விஷயத்தைக் கூறு.

சித்ர: பஸ் ஓட்டுனர், நடத்துனர் வேலை நிறுத்தம்! கண்ணப்பன் பயணம் செய்ய இருந்த பஸ் மதுரையை விட்டுக் கிளம்பவே இல்லே! கண்ணப்பன் தனது வீட்டுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறுன்!

எமன்: அய்யய்யோ! மறுபடியும் தர்மம் குலேந்து விட்டதே! ஒரே வீட்டில் ஒரே உருவத்தில் இரு நபர்களா? அனுசூயாவுக்கு ஏதாவது ஏடாகூடமாக நடந்தால் அது என் பொறுப்பு அல்லவா? கிங்கரர்களே! நீங்கள் உடனே சென்று மார்க்கண்டேயனே அழைத்து வாருங்கள். வர மறுத்தால் பாசக் கயிற்றை வீசுங்கள். ம்.. உம்... கம் ஆன். க்விக்.

காட்சி 8

[கண்ணப்பன் வீடு]

கண்ண (வந்துகொண்டே): ஏய் அனுசூயா! அனுசூயா! அப்பாடி! ஒரே டயர்டு. ஏய் அனுசூயா!

அனு: என்ன வேணும்? ஏன் இப்படிக் காட்டுக் கத்தல் கத்தறேன்?

கண்ண: அறிவு கெட்டவளே! ஏண்டி. ஒரு மனுஷன் ஊருக்குக் கிளம்பியவன் போக முடியாமத் திரும்பி வந்திருக்கேன். என்ன ஆச்சு, ஏன் போகலே, அப்படியெல்லாம் கேக்கலே.... ஏன் கத்தறேன்னு மட்டும் கேட்கத் தெரியறது!

அனு: ஏதோ ஒருவாட்டி ஊருக்குப் போக முடியாமத் திரும்பி வந்தா ஆச்சரியப் பட்டுக் கேக்கலாம். நிமிஷத்துக்கு ஒரு வாட்டி அதையே திரும்பத் திரும்பக் கேட்க நான் பைத்தியம் இல்லே!

கண்ண: அடிக்கடி திரும்பி வரேனு. உளறுதே. காப்பி கொண்டு வா.

அனு: இந்த மாதிரி காப்பி குடிச்சா வாங்கற சம்பளம் பத்தாது. எங்காவது பாங்கைக் கொள்ளேதான் அடிக்கணும். இதோட மூணு டம்ளர் காப்பி குடிச்சாச்சு.

கண்ண: சரி சரி. வேணும். இந்தா பெட்டியைக் கொண்டு உள்ளே வெச்சுட்டு லுங்கியைக் கொண்டு வா போ.

அனு: அடேடே! பெட்டிகிடைச்சுட்டுதா?

கண்ண: என்னடி ஒரேயடியாப் பேத்தறே?

ராம: (வந்து) கண்ணப்பா. ஜெயராமன் ஜோஸ்யர் கிட்ட விசாரிச்சேன். தொலேஞ்சு போன பெட்டி கிடைச்சுடுமாம். ஏதோ உனக்குக் கொஞ்சம் போறுதவேளே வந்திருக்காம். சனீஸ்வரனைச் சுத்தி வந்தாச் சரியாப் போயிடுமாம்!

அனு: மாமா ஜோஸ்யர் வாயிலே சர்க்கரைதான் போடணும். பெட்டி கிடைச்சுடுத்து. இவரே கொண்டு வந்துட்டார்!

ராம: ஏண்டா குதிரை வண்டிக்காரனே கொண்டு வந்து குடுத்துட்டானு?

கண்ண: குதிரை வண்டியா? ஸ்டிரைக்டாடி. ஒரு பஸ் கூட ஓடலே. அதான் வந்துட்டேன்.

ராம: பஸ் ஸ்டிரைக்கா? நீதானேடா கொஞ்ச முன்னுடி வந்து குதிரை வண்டி குடைசாஞ்சு போச்சு பெட்டியைக் காணும். சகுனம் சரியில்லேன்னு வந்துட்டதாகச் சொன்னே!

கண்ண: குதிரை வண்டி குடைசாஞ்சுதுன்னு கொஞ்ச நேரம் முன்னுடி சொன்னேனு? என்ன ரெண்டு பேரும் விளேயாடறீங்களா?

ராம: ஜெயராமன் சொன்னது கரெக்ட்தான். உனக்குப் போறுத வேளேதான்.

கண்ண: அய்யோ. எனக்கு மண்டை குழம்பறது. என்னேக் கொஞ்ச நேரம் தனியா விட்டுட்டுப் போங்கோ. லீவ் மீ அலோன்.

(அவர்கள் போக சாவித்திரி வருகிறுள்.)

சாவி: கண்ணப்பன்!

கண்ண: வா. நீ ஒருத்திதான்பாக்கி வா! என்ன வேணும்?

சாவி: ஏன்,அனுசூயா ஆத்திலே இருக்காளா? அது தான் என்னேப் பார்த்து வன்ஞுன்னு விழறேன்!



எஸ். ராமசாமி: தமிழ் வாத்தியார் தானு

பத்து நிமிஷத்துக்குள்ளே மனுஷ மனம் எவ்வளவு மாறிடறது! மாணுவுக்கு மாணு.

கண்ண: என் கழுத்தை அறுக்க வந்துட்ட கடன்காரி, காணுவுக்குக் காணு. போதுமா?

சாவி: நான் வீட்டுக்குப் போய் யோசனே பண்ணிப் பார்த்தேன். ஒருவேளே நீங்க சொன்னதெல்லாம் உண்மையா இருக்குமோன்னு. அதனுலேதான் திரும்பி வந்தேன்

கண்ண: நான் என்ன சொன்னேன்?

சாவி: அதுதான் மார்க்கண்டேயன்! நீங்க சாகல்லே. மறுபடியும் உயிரோட வந்துட்டேன்னு சொன்னீங்களே! அதைத்தான் சொல்றேன்!

கண்ண: மார்க்கண்டேயனு? மறுபடியும் உயிரோட வந்துட்டேனு... என்ன எழவுடா இது!

சாவி: செத்தாத்தான் இழவு. இது விருத்தி. நீங்க சொன்னபடியே தெப்பக் குளம் பக்கத்திலே நிக்கறேன். தனியா உக்காந்து பேசுவோம்.

கண்ண: இந்தாம்மா சாவித்திரி நீ வேணு தனியாப் பேசிக்கோ. என் மனசைக் கெடுக்காதே. ப்ளீஸ் கெட் அவுட்.

(சாவித்திரி போகிறுள். கிங்கிரர்கள் வருகிறூர்கள்.)

பீம, தூம: ஸ்க...ஸ்க....

கண்ண: யார்டா நீங்க?

தூம: ம்... என்னைத் தெரியவில்லையா?

கண்ண: நான் என்ன சர்க்கஸ் கம்பெனியா நடத்தறேன், கொம்பு முளைச்ச மனுஷனை யெல்லாம் தெரிஞ்சுக்க. யாருடா நீங்க?

பீம: ம்... பார்த்தாயா தூமகேது. நம்மை யார் என்று கேட்கிறுன்?

தூம: மிகவும் திமிர் பிடிச்சவன். உன்னை எங்கள் பிரபு கூட்டிக் கொண்டு வரச் சொன்னுர்!

கண்ண: யார்டா அவன் உங்கள் பிரபு?

தூம: யாருடா அவனு? திமிர் கொண்டவனே! எங்கள் எமதர்மரை யாருடா என்று அழைக்கிறுய்?

கண்ண: எமதர்மரா? என்னடா இது புது எழவாப் போச்சு! போங்கடா. ஏதாவது டிராமாவிலே போய் நடிங்கடா. நாலு காசாவது கிடைக்கும். வந்துட்டாங்க. மாட்டுக் கொம்போட ஒரு விக்கையும் வெச்சிண்டு!

பீம: எங்கள் உண்மையான முடியையும் கொம்பையும் கிண்டல் செய்கிறுய்! (கயிறை அவன் கழுத்தில் போட்டு) தூமகேது இவனை அழைத்துச் செல்வோம்!

காட்சி 9

[தேவலோகம்]

கண்ண: யோவ், எதுக்காக என்னை இங்கே கூட்டி வந்திருக்கீங்க?

எமன்: மார்க்கண்டேயா! நமது திட்டத்தில் ஒரு சிறு பிழை. நடந்து விட்டது. கண்ணப்பன் செல்லும் பஸ் திருச்சி அருகே கவிழப் போகிறது, கண்ணப்பன் அதில் இறந்துபோவான், நீ மதுரையில் கண்ணப்பனுக்குப் பதில் தங்கிடலாம் என்று நாம் போட்ட திட்டம் தவிடு பொடியாகிவிட்டது! பஸ் ஸ்ட்ரைக். ஸோ, ஆக்சிடெண்ட் ஆகவில்லை! காட் புரபோசஸ் மேன் டிஸ்போஸஸ்!

கண்ண: யோவ். என்னய்யா உளர்றே!

எமன்: மார்க்கண்டேயா! கண்ணப்பன் சென்ற பஸ் மதுரையை விட்டே கிளம்பவில்லை. ஆகையால் அவனும் தன் வீட்டுக்குச் செல்கிறுன். ஒரே வீட்டில் ஒரே மாதிரியான இருவர் இருந்தால் குழப்பம் ஏற்படும். ஆகையால் நீ மீண்டும் கொஞ்ச நாட்கள் இங்கேயே தங்கிவிடு. பிறகு ஒரு சந்தர்ப்பம் வரும்போது உன்னை அனுப்புகிறேன்.!

கண்ண: அடப் பாவி! யோவ்! நீ அனுப்பினியே அந்த மார்க்கண்டேயன் இல்லே நான். நான்தான் ஒரிஜினல் கண்ணப்பன்! இப்படி ஆள் மாருட்டம் பண்ணிட்டியே அய்யா. அய்யையயோ அனுசூயா! எனக்காக ஆசையாக் காத்திருப்பியே. அங்கே அந்தத் தடியன் மார்க்கண்டேயன் வேறே இருக்கானே! ஏதாவது நடக்கக் கூடாத தப்பு நடக்கிறதுக்கு முன்னுடி என்னை அனுப்பிடுய்யா!

எமன்: உண்மையாக நீ மார்க்கண்டேயன் இல்லியா?

கண்ண: சத்தியமா நான் மார்க்கண்டேயன் இல்லே! கண்ணப்பன்!

எமன்: மடையர்களே! மறுபடியும் தப்பு செய்து விட்டீர்களே! ஹா! மறுபடியும் கத்தி அசைகிறது. ஏதாவது ஏடாகூடமாக நடந்துவிட்டால் என் தலையைப் பதம் பார்த்துவிடும்! நான் தர்மத்திலேயிருந்து மறுபடியும் தவறியிருக்கிறேன். நீ சொல்வது சரிதான். நீ கண்ணப்பன்தான். நான் என்ன செய்வேன்?

தூம: பிரபோ! பரமசிவன் ரவுண்ட்ஸுக்கு வருகிறுர்.

சிவன் (வந்தவாறே): என் ஞான திருஷ்டி மூலம் எல்லாவற்றையும் அறிந்தேன். எமதேவா! ஏன் நடந்தது பற்றி என்னிடம் முன்னுடியே அறிவிக்கவில்லை?

எமன்: ஸ்வாமி! உங்களது நெற்றிக் கண்ணைப் பார்த்துப் பயந்துதான்.

சிவன்: என்னிடம் உன் கையொப்பமிட்ட வெத்துப் பேப்பர் நிறைய உள்ளன. நினைவிருக்கட்டும். உடனே மார்க்கண்டேயனை அழைத்து வா. இல்லையேல் என்கொயரி கமிஷன்!

எமன்: என்மீது கமிஷன்! என்ன குற்றம் செய்தேன் கொற்றவனே?

சிவன்: உன் ஊரிலிருந்து சுமார் ஐயாயிரம் பீப்பாய்கள் சோமபானம் கடத்தப்பட்டுள்ளது!

எமன்: இது பற்றி விசாரிக்க நானே ஒரு கமிஷன் அமைத்துள்ளேன். ஜட்ஜ் டி.எல். வெங்கடராமய்யர் விசாரிக்கிறுர்!

சிவன்: எங்கள் கமிஷன் இருக்கும்போது நீ போட்ட கமிஷன் செல்லாது.

எமன்: சுவாமி, மார்க்கண்டேயனை அழைத்து வந்து விட்டால் என்னை விட்டு விடுகிறீர்களா சுவாமி?

சிவன்: பேஷாக! கமிஷன் தீர்ப்பையொட்டி தொடுக்கப்படும் வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொண்டால் போச்சு! ஆனுல் அதற்கு முன் நீ போய் மார்க்கண்டேயனை அழைத்து வந்துவிடு. மார்க்கண்டேயன் இல்லாமல் திரும்பி வராதே. முதலில் கண்ணப்பனை அவன் வீட்டில் விட்டுவிடு. இந்த மடையர்களை அனுப்பாதே. நீயே போ.

காட்சி 10

[கண்ணப்பன் வீடு]

(அனுசூயாவைச் சுற்றி எல்லோரும் அமர்ந்திருக்கின்றனர். எமனுடன் கண்ணப்பன் வருகிறுன்.)

கண்ண: என்னடி என்ன ஆச்சு! ஏன் அழுதுண்டு உட்கார்ந்து இருக்கே?

அனு: சூ! நீங்க ஒரு மனுஷனு? இப்படி ஒரு காரியம் பண்ணிட்டு இன்னும் வெட்கம் இல்லாம என்கிட்டப் பேசறீங்களே?

கண்ண: என்னடி காரியம் பண்ணினேன்?

அனு: எதிராளாத்து சாவித்திரியைக் கூட்டிண்டு ஓடிப் போயிட்டேளே! இது நியாயமா?

கண்ண: நான் சாவித்திரியைக் கூட்டிண்டு ஓடிட்டேனு? என்ன இது?

ராம: நேத்து அந்தப் பெண்ணைக் கூட்டிண்டு தெப்பக்குளம் போய் அங்கேயிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் வண்டி ஏறியதைப் பார்த்தவா சொன்னுடா!

கண்ண: அய்யய்யோ! நான் அங்கே போகவே யில்லேயே. நான் எமலோகத்துக்குன்னு போயிருந்தேன்!

அனு: பார்த்தேளா மாமா! பொய்யைப் பார்த்தேளா! அளவே இல்லாமச் சொல்லிண்டு போறுர். எமலோகம் போயிருந்தாராம்!

ராம: ஹும்... உனக்கு யாரோ ஏதோ மருந்து வச்சிட்டாடா! பைத்தியம் பிடிச்சுஅலையறே!

கண்ண (எமனை நோக்கி): எனக்கா பைத்தியம்? யோவ்! பார்த்துண்டு பேசாம நிக்கிறியே! உன்னுலதானேய்யா இத்தனை குழப்பம்!

அனு: யார் கிட்டே பேசறேள்?

கண்ண: எமதர்மன் நிக்கருனே தெரியலையா?

அனு: பார்த்தேளா மாமா!வெறும் கவத்தைக் காமிச்சு எமன் நிக்கருனும்! இவருக்குப் பைத்தியம் இல்லே மாமா! பைத்தியம் மாதிரி நடிக்கிருர். செஞ்ச தப்பை மறைக்கறதுக்காக, பைத்தியம்னு நாம விட்டுடுவோம் பாருங்க!

கண்ண: யோவ்! உன்னை இவங்களுக்குக் காமிச்சுடுய்யா. இல்லேன்னு என்னைப் பைத்தியம்னே தீர்மானிச்சுடுவாங்க! உன்னுலே தான் எனக்கு இவ்வளவு தொல்லே. மார்க்கண்டேயன் சாவித்திரியைத் தள்ளிண்டு போயிட்டான் போலிருக்கு!

எமன்: இதோ கண்ணப்பா. என் உருவத்தைக் காட்டிக் கொள்கிறேன்!

ராம: ஹா! எமதர்மர்! எமதர்மர்!

அனு: நெஜமாகவே எமன்தான்!

காட்சி 11

[கோவில். எமன் ஓடிவருகிருன். விநாயகர் சிலைக்குத் தோப்புக்கரணம் போடுகிருன்.)

எமன்: விநாயகா! நான் வந்த காரியம் வெற்றிகரமாக முடிஞ்சா 108 தேங்காய்கள் உடைக்கிறேன். எதுக்கும் உன் அப்பா கிட்டச் சொல்லி அதுவரைக்கும் ஆக்ஷன் எடுக்காம இருக்கச் சொல்லப்பா! மார்க்கண்டேயனும் சாவித்திரியும் இந்தக் கோயிலுக்கு வந்திருப்பதை ஞான திருஷ்டியிலே அறிந்து ஓடோடி வந்திருக்கிறேன்.

(கெட்டி மேளம் ஒலிக்கிறது.)

எமன்: ஹா! மாங்கல்யம் கட்டப் போகிருன். அதற்குள் பாசக் கயிற்றை வீசுவோம்! (கயிற்றை வீசுகிருன்.)

எமன்: வா, மார்க்கண்டேயா, வா!''

மார்: எங்கேய்யா கூப்பிடறே! நான் தான் உன் லோகத்திலிருந்து வந்தாச்சே. மறுபடியும் எதுக்குக் கூப்பிடறே?

எம: ஒரு சின்ன அஜட்ஸ்ட்மெண்ட். மார்க்கண்டேயனை உயிரோடு அழைத்து வர வேண்டுமென்பது சிவபெருமானின் கட்டளை.

சாவி: நிறுத்து. அதற்கு உனக்கு உரிமை இல்லே!

எமன்: பெண்ணே! உன் துணிச்சலே நான் பாராட்டுகிறேன். எங்கள் விஷயத்தில் நீ ஏன் அனுவசியமாகத் தலையிடுகிருய்?

(நாரதர் வருகிருர்.)

நார: எமா! உனக்கு இருக்கும் சாபம் பற்றித் தெரியாமல் விளையாடுகிருய்.

எமன்: என்ன சாபம்?

நார: நீ சிறுவனு யிருக்கும்போது தும்புரு முனிவர் நின்றபடியே தவம் செய்துகொண்டிருந்தார். நீ அவர் காதில் விளையாட்டாகப் பூ சுற்றி விட்டாய். அதனுல் அவர் தவம் கலைந்து உனக்கு ஒரு சாபம் கொடுத்தார்.

எமன்: என்னவென்று?

நார: பூமாலையுடன் கூடியவர்கள் யார் மேல் நீ கை வைத்தாலும் உன் தலை சுக்கு நூருக வெடித்து விடும்.

எமன்: அய்யய்யோ கிளைமாக்ஸ் சீன்லே சாபத்தைப் பற்றிச் சொல்லி என்னைப் பயமுறுத்தறீங்க. இப்ப நான் என்னதான் செய்யறது?

நார: கெஞ்சிக் கேள். வந்தால் அழைத்துச் செல்!

எமன்: சாவித்திரி! தயவு செஞ்சி அவனை என்னேடு அனுப்பிவிடும்மா!

சாவி: அவரைப் பிரிந்து என்னுல் வாழ முடியாது!

மார்: பொய் சொல்ற பாத்தியா. நாலு வருஷம் பிரிஞ்சு தனியே இருந்தியே!

எமன்: பிரிய முடியாதுன்னு நீயும் அவனேடு வா.

சாவி: அதெல்லாம் வேணும். நீ இவரை மட்டும் அழைச்சிண்டு போ...

மார்: அடிப் பாவி!

எமன்: ரொம்ப சந்தோஷம்! தீர்க்க சுமங்கலி பவா!

சாவி: ஆனு ஒரு கண்டிஷன்! எனக்கு ஒரு வரம் கொடுக்கணும். என் கழுத்திலே இருக்கிற மாலே வாடற வரைக்கும் அவர் உயிரை நீ எடுக்கக்கூடாது!

எமன்: பூ! இவ்வளவுதானே! வாடும் வரை காத்திருக்கிறேன்.

மார்: ஏண்டி நாலு மணி நேரம் நான் உயிரோட இருந்தாப் போதுமா? நான் இன்னும் இன்ஷூரன்ஸ் கூடப் பண்ணிக்கலேடி!

சாவி: சும்மா உளருதீங்க! இது பூம்புகார் ஷோ ரூம்லே வாங்கின நெட்டி மாலே. வாடவே வாடாது! பாவம்! எமன் ஏமாந்துட்டார்!

மார்: எமா! வாடும்வரை காத்திரு!

சுபம்!

புகைப்படங்கள்: ஈ. வே. ரா. மோகன்

சுவர்ணமுகி

"கோட்டைக்குச் சிறிது தூரவெளி தள்ளிக் காடுகளை மண்ட விடுங்கள். எதிரிகளைச் சீக்கிரம் முறியடிக்கலாம்." - ஆ. முக்தமால்யத

30

போகும் வழியில் தேவராய சதுர்வேதி மங்கலத்தில் இறங்கி அக்கிரகாரத்துக்குள் நுழைந்து, பழைய நண்பன் கிருஷ்ண சந்திரனைப் பார்த்தான் அர்ச்சனன்.

இருவரும் ஒரே உபாத்தியாயரிடம் மல் வித்தை கற்றவர்கள்.

"இதென்ன சந்துரு... இப்படித் திண்ணையில் உட்கார்ந்து..." என்று இழுத்தான்

ஸ்ரீ வேணுகோபாலன்



அர்ச்சனன், நண்பன் விச்ராந்தியாகத் தக்களி நூற்பதைப் பார்த்து.

"சண்டைக்குப் போகலாம்னு பார்த்தா எந்த ராஜா-பக்கம் தர்மம் இருக்கிறது என்று தெரியவில்லே" என்றான் கிருஷ்ண சந்திரன். வெறும் பூணூலும் உடம்புமாக இருந்தான்.

அர்ச்சனன் தன் விருத்தாந்தங்களைக் கூறி மதுரை போய் வந்ததைத் தெரிவித்தான்.

"ஐயோ, அர்ச்சுனா! அவரை (கிருஷ்ணப்ப நாயகர்) நம்பினையா? அவர் எந்தப் பக்கம் காற்று வீசுகிறதோ அங்கே சாய்வாரே!" என்றான் கிருஷ்ண சந்திரன்.

"இப்போது சில வருஷங்களாக எங்கள் மன்னருக்கு ஆதரவாக இருக்கிறார். அதனால் தான் போனேன்" என்றான் அர்ச்சனன்.

"நாட்டில் இவர்கள் போக்குகளைப் பார்த்தால் 'தூ' என்று துப்ப வேண்டும். அங்கே லிங்கம நாயகர் (வேலூர் நாயகர்) எப்படி இருக்கிறார்? சரியான சமயம் பார்த்து உங்க ராஜா தலையை வெட்டிவிடப் போகிறார்" என்றான் கிருஷ்ண சந்திரன் தக்களியைத் துடையில் திரித்துக் கொண்டே.

"லிங்கமர் இதுவரை மன்னர் பக்கமே இருக்கிறார். அதனால் நம்புகிறோம்" என்றான்.

"திருமலை நாயகர் ஒரு மதில்மேல் பூனை! இந்தப் பக்கம் சாய்ந்ததாலும் சாய்வார், அந்தப் பக்கம் சாய்ந்தாலும் சாய்வார்! சொல்ல முடியாது. ஆகப்போக ஜனங்கள் பாடு திண்டாட்டம்! அரிசி என்ன விலை விற்கிறது தெரியுமோ?"

"ரூபாய்க்கு ஆறு படி."

"அதுஎப்போதோமலையேறிப்போயிடுத்து. வேலூர் முற்றுகை ஆரம்பித்தாலும் ஆரம்பித்தது பணத்துக்கு (கால் ரூபாய்) ஒரு படி விற்கிறார்கள். எந்தக் காலத்திலேயாவது கேள்விப்பட்டிருக்கிறாயா? கலி முற்றிவிட்டது."

"இப்போ ஒரு வேண்டுகோள். நீயும் என்னோடு வருகிறாய்! படை நடத்த ஆள் இல்லே!"

"நானா?"

"ஆமாம்! தக்களியை உள்ளே போடு! நாடு இருக்கிற நிலையில் நல்லவர்கள் நாலு பேராவது சேர்ந்து ஏதாவது செய்ய வேண்டும். கிளம்பு."

தக்களி நின்றது.

கிருஷ்ணசந்திரன் பிரேமையோடு அர்ச்சனன் கண்களுக்குள் பார்த்தான். "உனக்கு நாட்டு மேலே அவ்வளவு வாஞ்சை வந்துடுத்தாடா?" என்றான்.

அர்ச்சனன் எதுவும் பேசவில்லே. சிறிதாக முறுவலித்தான்.

''இதோ வந்துட்டேன்.''

வேலூர்க் கோட்டைக்கு மூன்று காத தூரத்தில் படையை நிறுத்தினார்கள்.

''அர்ச்சுனா! நீ காத்திரு! உனக்கு உடம்பு சரியில்லை. நான் போய்ப் பார்த்து வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கிருஷ்ண சந்திரன் குதிரை ஏறிப் போனான்.

வேலூர்க் கோட்டையைச் சுற்றி நூற்றுக் கணக்கான கூடாரங்கள் தோன்றியிருந்தன. குதிரைகளும், பொதி மாடுகளும் அங்கங்கே கூட்டமாகத் தீனி தின்று கொண்டிருந்தன. லம்பாடிகள் எடுபிடி வேலைகளுக்காகக் காத்திருந்தார்கள். சுமைகளையும் யுத்த தளவாடங்களையும் அவர்கள் தான் தூக்கிச் செல்வார்கள்.



வியாபாரிகள் ஒரு கடைத் தெரு வைத்திருந்தார்கள்.

ஊழியர்கள் இரவுச் சமையலுக்காக ஆயத்தங்கள் செய்ய, ஆயிரக் கணக்கான பானைகள் உலை ஏறக் காத்திருந்தன.

படையில் முதல் ஆவேசத்தில் போகும் எருதி முதலிய மலை இனத்து ஜனங்கள், கள் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

''இம்மராஜாவுக்கு இவ்வளவு படை ஏது? வடக்கே சுல்தான் யாராவது கொடுத்திருக்கிறார்களா?'' என்று அதிசயித்தான் கிருஷ்ண சந்திரன்.

அகழியின் விளிம்பில் நெருக்கமாக இருந்த ஆயிரக் கணக்கான வீரர்களைக் கண்டு அவன் பிரமித்தான்.

குதிரையை ரகசியமாக மறைவிடத்தில் கட்டிவிட்டு, யார் கண்ணிலும் படாமல் ஒரு பாதுகாப்பான தூரத்தைத் தேர்ந்தெடுத்துக் கோட்டை முழுவதையும் சுற்றிப் பார்த்தான் அவன்.

வீரர்கள் நெருக்கமாக எறும்புக் கூட்டம் போல நின்றார்கள்.

இரண்டு இடங்களில் அகழியைத் தூர்க்கும் பணி நடந்து கொண்டிருந்தது.

விஷம் தோய்ந்த மாமிசத் துண்டுகளை அகழியில் பல இடங்களில் வீரர்கள் எறிந்து கொண்டிருந்தார்கள்.

அகழிக்கும் கோட்டைச் சுவருக்கும் இடையில் உள்ள இடங்களில் பல நீள தூரங்களில் அடர்த்தியான மரங்களும் புதர்களும் வளர்க்கப்பட்டிருந்தன.

அவற்றில் புலிக் குடும்பங்கள் உலாவியதால் அவைகளை அழிக்க எரிகணைகளைக் கவண் யந்திரங்கள் மூலம் பல வீரர்கள் ஏவிக் கொண்டிருந்தார்கள்.

பாலாற்றிலிருந்து மணல் மூட்டைகளை யானைகள் பெரும் பொதிகளாகத் தூக்கி வந்து கொண்டிருந்தன.

கோட்டையில் பலம் வாய்ந்த முன் வாசல் பாதுகாப்புக்கு எதிரில் அகழிக் கரை ஓரமாக இரண்டு தாற்காலிக பீடங்கள் செங்கல்லாலும் மண்ணாலும் எழும்பிக் கொண்டிருந்தன.

இவைகள் மேல் நின்று கோட்டைக்காரர்களுடன் சம உயரத்தில் அம்புகள் எய்து சண்டை செய்யவே இந்த ஏற்பாடுகள்.

அவற்றின் சாரங்களில் இரண்டு பெரிய கவண் யந்திரங்களை ஏற்ற முயற்சி நடந்து கொண்டிருந்தது.

ஆயிரக் கணக்கானவர்கள் இவ்விதம் போர் ஆயத்தத்தில் முனைந்திருக்க,

ஹோ ஹோ என்ற சப்த அலைகள் நொடிக்கு நொடி ஏற்றமும் இறக்கமுமாகக் கேட்டு அப்பிரதேசத்தையே நடுங்க வைத்துக் கொண்டிருந்தது.

இவ்வளவு கோலாகலமான முற்றுகையைப் பார்த்துக் கிருஷ்ண சந்திரன் பிரமித்துப் போனான். ''நிச்சயம் வேலூர்க் கோட்டை ஒழிந்தது. மன்னரும் ஒழிந்தார்'' என்று நினைத்தான்.

விரைவாகத் திரும்பி மறைவிடத்துக்கு வந்து குதிரையைச் சீறிக் கிளப்பிச் செலுத்தினான் அவன்.

இரவு முதல் நாழிகைக்கு அப்பால் அவன் அர்ச்சுனன் தண்டு இறங்கிய இடத்தை அடைந்து,

''அர்ச்சுனு! இவ்வளவு பெரிய படையைச் சமீப காலத்தில் பார்த்ததில்லை. கோட்டை ஒழிந்தது'' என்று இளைத்தவாறு கூறினன்.

பிறகு தண்ணீர் அருந்தி ஆசுவாசமாகி, தான் பார்த்த விஷயங்களையெல்லாம் சம்பிரமமாக விவரிக்க,

அர்ச்சுனனின் விரிந்த கண்கள் விரிந்த படியே நின்றன.

சில விநாடிகள் ஜீரணிப்புக்குப் பிறகு ''இந்த இரண்டாயிரம் படை போதாதா?'' என்றான் பரிதாபமாக.

''தூள் தூளாயிடும்'' என்றான் கிருஷ்ண சந்திரன், தனது மெல்லியகுடுமியை அவிழ்த்து முடிந்து கொண்டு.

''அப்போது என்ன செய்யலாம்?'' என்றான் அர்ச்சுனன்.

''திரும்ப வேண்டியதுதான்!''

''எனக்கு அது பிடிக்கவில்லை.''

''கோட்டைக்காரர்களை எல்லாவற்றையும் பார்த்துக் கோட்டைக்குள் சும்மா இருக்கிறார்கள். உனக்கு ஏன் வீண் வம்பு?''

''இல்லை சந்துரு! ஏதாவது செய்யத்தான் வேண்டும். கோட்டைக்குள் விலை மதிக்க முடியாத பொக்கிஷம் இருக்கிறது.''

''ராயரைத் (மன்னர்) தானே சொல்கிறாய்?''

''இல்லை. மற்றொரு பொக்கிஷம்!''


''விஜயநகரத்துக்கு ஏது பொக்கிஷம்? எல்லாம்தான் கரைந்துவிட்டதே!''

''இல்லை சந்துரு! இன்னொரு பொக்கிஷம்! அதைப் பெற்றால்தான் விஜயநகரப் பொக்கிஷத்தையும் பெறலாம், ராயரையும் காப்பாற்றலாம்.''

''என்ன அப்படி அதிசயப் பொக்கிஷம்?''

கேள்வியைக் கேட்டு, கிருஷ்ணசந்திரன் பார்வையைக் கூர்மையாக்கி, அர்ச்சுனனது கண்களில் அர்த்தத்தைத் தேட,

அர்ச்சுனன் விழிகள் இரண்டும் குழைந்து கூழாகியிருந்தன.



''என்னதான் நல்லெண்ணெய் விலை ஜாஸ்தியா இருந்தா என்ன தலை தீபாவளிக்கு வந்த மாப்பிள்ளைக்கு 'பாமா'யிலையா, நலுக்குத் தேய்க்கக் கொடுக்கிறது!''

''என்னடா! பாணம் அடிச்சுட்டுதா? கண் போகுதே!'' என்றான் கிருஷ்ண சந்திரன். கூடவே, ''வேபதுஸ்ச மே மனஹ! ரோம ஹர்ஷம் ச ஜாயதே!'' (மனம் நடுங்குகிறது. ரோமங்கள் பொடித்து நிற்கின்றன) என்று வேண்டுமென்றே கீதையை மேற்கோள் எடுத்தான்.

''உண்மைதான்!'' என்றான் அர்ச்சுனன்.

''யாராவது தேவதாசியா?''

''இல்லை. மேல் குடும்பம்தான். அவள் வாழ்ந்தால்தான் விஜயநகரம் வாழ முடியும்!''

கிருஷ்ண சந்திரன் உதட்டை மடித்துத் தலையை யானை ஆட்டம் ஆட்டி, ''ஹந்த! மம ஹ்ருதய வ்யாகுலம் கோ ஜானதி?''

(ஆ! என் இதயத்தின் வியாகூலத்தை யார் அறிவார்கள்?) என்று புலம்பலோடு கூறினன்.

''விளையாடுகிறாய், சந்துரு! எல்லாம் விபத்துத்தான்! மனத்துக்குச் சஞ்சலத்தையும், ஆனந்தத்தையும் தருவது பிரேமையைத் தவிர வேறு இல்லை. அதில் காலம் வரும்போது விழவேண்டியதுதானே? ஆனால் என் நோய் எனக்குத் தெரிகிறது; மற்றவரிடம் அந்த நோய் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது!''

''ஓகோ! ஒரு பட்சக் காதலா? வில்லைக் கீழே போடு! அரசர்கள் சண்டை போடட்டும். பிரஜைகள் காதலிப்போம். காவியம் செய்வோம்.''

வாளைக் கீழே போட்டு, கையைக் கட்டினன் கிருஷ்ண சந்திரன்.

அர்ச்சுனன் லேசாகச் சிரித்தான். ''சந்துரு! வாளைக் கீழே போட்டது சரி! என் மனம் கோட்டைக்குள் அகப்பட்டு விட்டதே! அதை மீட்டிக் கொண்டு அல்லவா நாம் போக முடியும்!'' என்றான்.

''வாஸ்தவம்தான். மார்க்கம் இல்லையே! மனம் அங்கேயே இருக்கட்டும். அப்புறம் எடுத்துக்கொண்டால் போயிற்று.''

''ஆபத்து சந்துரு!''

''எனக்கு வேறு வழி தெரியவில்லை. நம்மிடம் இருப்பதோ அரைக்கால் படை! அதை எதிரிகள் மாவாக அரைத்து விடுவார்கள்!''

அர்ச்சுனன் யோசித்தான். கிருஷ்ண சந்திரனும் யோசித்தான். அர்ச்சுனன் மனத்தில் பெரிய கவலை. கவர்ணமுகி இந்நேரம் என்ன செய்வாள்? துயரப்படாமல் சௌகரியமாக இருப்பாளா? அவளைச் சந்திக்காமல் வந்து விட்டோம்! அவளுக்கு அது வேதனை அளித்திருக்குமா? ஒருவேளை! அவன் அதிகமாகக் கற்பனை செய்து கொள்கிறானே! அவளுக்கு அவன் மீது எந்தவிதப் பாசமும் இல்லாமல் இருக்குமோ?

மனம் இவ்விதம் அல்லோலப்பட, கண்களிலிருந்து அவனை அறியாமல் துயரப் புஷ்பங்களாக நீர்த் துளிகள் உதிர்ந்தன.

''அர்ச்சுனு!'' என்று திடுக்கிட்டுக் கூறினன் கிருஷ்ண சந்திரன். ''உன் மென்மை அறியாத மூர்க்கனாக இருக்கிறேனே? நான் சித்தம்! நாளைக் காலையிலேயே எதிரிகளைத் தாக்குவோம்.''

சிற்பக்கலைநயம்வாய்ந்த ஐபரேஷ்வரா கோயில், மஹாராஷ்ட்ரா


அக்காலத்து கலைத்திறனை இக் கோயிலின் கற்கள் பேசுகின்றன. பூ வேலைப்பாடுகளும், வடிவமைப் புகளும், அதிநுட்பமான கட்டிடக்கலை வல்லமையும் கலைஞர்களின் கலை ஆர்வத்தின் பிரதிபலிப்பாகத் திகழ்கின்றன. இவ்வாறுகத்தான் காலங்காலமாக கல்லிலே கலை வண்ணம் கண்டு வழிவழி மரபை உலகறியச் செய்துள்ளனர்.

பழங்கால மரபுகளை மனதில் கொண்டு தாவண்கெரே காட்டன் மில்லில் புராண அழகை பிரதிபலிக்கும்படியான துணி வகைகளைத் தயாரித்தளிக்கிறோம். நுட்பமான நெசவு, கலைஞர்களின் கைவண்ணம்— எண்ணிலடங்கா துணி வகைகள், ஒவ்வொருவரும் பாராட்டும் வண்ணம்.

சிறந்த துணிமணிகளை உயர்ந்த மரபாகக் கருதுவது **தாவண்கெரே**

தி தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட்,
மஹாமகாதப்பா கட்டிடம், சித்ரதுர்கா ரோடு,
தாவண்கெரே–577 002.

ஷோரூம்,
காவேரி பவன், பெங்களூர் 560 009.
தாஜிபன்பேட், ஹூப்ளி 580 020.
சித்ரதுர்கா ரோடு, தாவண்கெரே 577 002.



ஐபரேஷ்வரா கோவில்,
பால்டான், சத்தாரா ஜில்லா,
மஹாராஷ்ட்ர

''சந்துரு! எனக்காக உணர்ச்சி வசப் படாதே! நம் படையால் அதைச் செய்ய முடியாது. எனக்கு ஒரு யோசனை! நாம் தந்திரத்தால் அதைச் செய்தால் என்ன?''

''என்ன தந்திரம்?''

''விடியக் கருக்கலில் எழுந்திருக்கிறோம். வெகுண்டு போய் ஒரு தாக்குத் தாக்குகிறோம். யாரும் அதை எதிர்பார்க்க மாட்டார்கள்!''

''சரி! நூறு போர்ப்படை ஆயிரம் பேரைக் கொல்லலாம். ஐம்பதாயிரம் பேரைக் கொல்ல முடியாது.''

''நாம் எதிரிகள் எல்லோரையும் எதிர்க்கப் போவதில்லை. நேராகத் திம்மனின் பாசறைக் குத் துளைத்துக் கொண்டு போகிறோம். திம்மனைக் கொல்கிறோம்! — அது போதும் நம் வெற்றிக்கு!''

கிருஷ்ண சந்திரன் யோசித்தான். கொஞ் சம் சாகஸம் தேவை! சாமர்த்தியம் தேவை! எல்லாவற்றையும்விட ஒரு இருதயம் தேவை! சரி, பார்த்துவிடுவோம். ''சரி, அப்படியே செய்கிறோம்!'' என்றான் அவன்.

அதே இரவு வேளை.

வேலூர்க் கோட்டை அரண்மனையில் அந்தரங்க அறை ஒன்றில் வேங்கடரா்ஜா முன்னிலையில் சுவர்ணமுகி தலை குனிந்த வாறு நின்று கொண்டிருந்தாள்.

வைராக்கியம்!

● குடும்ப நலத் திட்ட இருவார விழாவைத் துவக்கி வைத்துப் பேசிய முதலமைச்சர் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தைச் சொன்னார்.

எனது முதல் மனைவி கருவுற்றபோது எவ் வளவோ மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் குறைப் பிரசவம் ஆகிவிட்டது. இரண்டா வது முறையும் இதே போன்ற பிரச்னை. அதைத் தொடர்ந்து அவள் ரொம்பவும் நோய்வாய்ப்பட்டாள். ஒரு விரக்தியில் இனிக் குழந்தையே வேண்டாம் என்று முடிவு செய்தேன். சில காலத்தில் அவள் மறைந்தும் விட்டாள். பின்னர் இரண்டாவது மனைவியை நான் அடைந்த போதிலும் என் வைராக் கியம் மட்டும் மாறவில்லை!

—சலன்



''உட்காரம்மா!'' என்றார் வேங்கடராஜா. அவளை மேலிருந்து பாதம் வரை பலமுறைகள் பார்த்தார்.

கண்களைத் தீவிரமாக்கி அதன் கூர்ச்சி யினால் அவளைக் கீறிவிடுபவர் போல் பார்த் தார். உன்னிப்பாகக் கவனித்துக் கொண் டிருந்தான் ஸ்ரீரங்கன்.

அவள் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

''உன் பேர் என்னம்மா?''

''சுவர்ணமுகி!''

''உன் தந்தை இம்மாடி ஸ்ரீரங்க மகா ராஜாவா?''

''ஆமாம்.''

''அதற்கு ஏதாவது ருசு இருக்கிறதா?''

சுவர்ணமுகியின் உணர்ச்சிகள் கொந்தளி மிட்டு மேலே துளும்பின.

ஒரு கணம் இடுப்பில் கட்டியிருக்கும் அந்த ரட்சையை எடுத்து விடுவோமா என்று நினைத்தாள்.

அதை மனம் ஒப்பவில்லை.

'எந்தக் குறிநோக்கும் இல்லாமல் அவள் மனத்துக்கு முற்றிலும் பாத்திரமானவருக்கே அதைக் காண்பிக்க வேண்டும் என்று அவ ளது தந்தை இம்மாடி ஸ்ரீரங்கர் வேண்டி யிருக்கிறார்.

அதைத்தான் ரங்கப்ப தளவாயும் அவ ளிடம் கூறியிருக்கிறார்.

அப்படிப் பாத்திரமானவர் வேங்கடராஜா என அவள் நினைக்கவில்லை.

எனவே ரட்சையை எடுக்க அவள் விரும்ப வில்லை.

''சொல்லம்மா, ருசு உண்டா?''

அவள் அவரை மலங்கப் பார்த்தாள்.

''ரங்கப்ப தளவாய்தான் ருசு!''

''அவர்தான் இறந்து விட்டாரே!''

''வேறு ஏதுவுமில்லை.''

''ரங்கப்பாவிடம் வருவதற்கு முன்னால் வேறு யாரிடம் வளர்ந்தாய்?''

''தேர்ப்பாகன் கார்த்திகன்!''

''அவனும்தான் இறந்து விட்டானே!''

சுவர்ணமுகிக்கு வேதனை துள்ளி வந்தது. எத்தனை கேள்விகள் கேட்கிறார் இவர்? அவள் யார் என்று அறிய இவ்வளவு விசாரணையா?

''இறந்துபோன முந்திய மகாராஜா ராம தேவராயர் உனது சொந்தச் சகோதரன் தானே?''

''ஆமாம்.''

''அப்படியானால் அவனிடம் ஏன் நீ சென்று இன்னார் என்று கூறிக்கொள்ளவில்லை?''

சுவர்ணமுகிக்கு அதற்கு மேல் தாளவில்லை. 'எக்' என்று ஒரு விக்கல் விக்கினாள். கண்கள் குடமாக உடைந்து கண்ணீரைச் சொரிந்தன.

வேங்கடராஜா திடுக்கிட்டு அவளைப் பார்க்க, வெகு வேகமாக வரும் வேலூர் லிங்கம நாயகர் அவர் கண்களில் விழுந்தார்.

வேங்கடராஜாவைத் தனியாக அழைத் துப்போய் ஓர் ஓலைச் சுருளை எடுத்துக் காண் பித்தார்.

''ஸ்ரீரங்கா! இதோ வருகிறேன்'' என்று பரபரப்பில் புறப்பட்டார் வேங்கடராஜா.

சுவர்ணமுகி வெகுவாக விசித்துக் கொண் டிருந்தாள்.

(தொடரும்)



நாடகக் கலையின் உன்னத நிலை

நாடகக் கலையின் உன்னத நிலைகளை ஓர் அமெரிக்கக் குழு அண்மையில் நமக்கு உணர்த்தியது. டிரினிடி ஸ்குவேர் ரெப்பர்டோரி என்ற இக்குழு சென்னை ராணி சீதை அரங்கில் இரு நாடகங்களை நடத்தியது.

'நாடகம் என்றால் இலேசான கதை அமைப்பு இருந்தால் போதும், கதையே இல்லாதிருந்தால் ரொம்ப நல்லது' என்ற சூழ்நிலைக்கு நாம் பழக்கப்பட்டிருக்கும் நிலையில் நோபெல் பரிசுநாவலாசிரியரின் கதையை நாடகமாக்கும் இவர்களுடைய துணிவே பிரமிப்பூட்டுகிறது. ஜான் ஸ்டீன்பெக்கின் 'எலிகளும் மனிதர்களும்' என்ற நாவல், மூளை முழு வளர்ச்சி யடையாத அப்பாவி ஒருவனுக்கும், அவனைப் பாதுகாக்கும் பொறுப்பைச் சந்தர்ப்ப வசத்தால் ஏற்க நேர்ந்த இன்னொருவனுக்கும் இடையில் வளர்கின்ற பந்த பாசத்தைச் சித்திரிக்கிறது. அந்தப் பாசம் காரணமாகவே அவன் கடைசியில் அந்த அப்பாவியைச் சுட்டுத் தள்ளுகிறான்! இல்லாதபோனால் அந்த அப்பாவி, இன்னது செய்கிறோம் என்று அறியாமலேயே செய்துவிட்ட கொலைக்குப் பழி வாங்கப்பட்டிருப்பான். ஒரு பெண்ணைக் கொன்ற குற்றத்துக்காகச் சித்திரவதை செய்யப்பட்டிருப்பான். அந்தக் கொடுமையிலிருந்து அவனைத் தப்புவிக்க, காப்பவனே காலனாகிறான்!

எவ்வளவு சிக்கலான குணச் சித்திரங்கள்! எவ்வளவு லாவகமாக அரங்கேற்றினார்கள்! அடிக்கடி சிரிக்கவைத்து, கூடவே இதயத்தை நெகிழ்த்திக் கொண்டும் வருவதென்பது எவ்வளவு சிரமம்!

இரண்டாவது நாடகம் அமெரிக்காவின் சிறந்த இலக்கியப் பரிசாகிய புலிட்ஸர் பரிசைப் பெற்ற ஸாம் ஷெப்பர்ட் எழுதியது. முதல் நாடகத்தை விடவும் அதிக சிக்கலான குணச்சித்திரங்களைக் கொண்டது. ''புதைக்கப்பட்ட குழந்தை'' என்ற அச்சமூட்டும் தலைப்பைக் கொண்ட நாடகம், நம்மில் பலர் எழுதவே அஞ்சக்கூடிய கதைக் கருவைக் கொண்டதுதான். ஆயினும் உண்மைகளைச் சந்திக்க அஞ்சாமலும் அதே நேரத்தில் விரசம் தட்டிவிடாமல் மிக சாமர்த்தியமாகவும் எழுதப்பட்டு அரங்கேறியுள்ளது.

தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் கழித்துத் தன் காதலியுடன் திரும்பி வரும் ஓர் இளைஞன், தனது தகப்பனார், தாத்தா, பாட்டி ஆகியோரைப் பற்றிய திடுக்கிட வைக்கும் சில உண்மைகளைப் படிப்படியாகத் தெரிந்து கொள்கிறான். இதிலேயும் இயல்பான நகைச்சுவையை இழையோட விட்டிருக்கிறார்கள்.

'அடேயப்பா! இப்படியெல்லாம் கூட கனமான கருத்துக்களை நயம்பட நாடகமாக்க முடியுமா?' என்று கைதட்டவும் செயலிழந்து பிரமித்துப் போகும்படி நடத்திக் காட்டியவர்களும் அவர்கள் இங்கு வரக் காரணமாயிருந்த மெட்ராஸ் பிளேயர்ஸ் குழுவும் அமெரிக்கக் கேந்திரமும் நமது நன்றிக்கு உரியவர்கள்.

சிறந்த நாடகமும் நடிப்பும் இருந்தால் பிறகு ஸீன், ஸெட்டிங் என்பதெல்லாம் ஒப்புக்குத்தான் என்பதை நிரூபிப்பதே போல இந்த நாடகங்களின்போது திரை விடாமலே ஸெட்டுகளை மாற்றினார்கள். நடிகர்களே இப்பணியிலும் பங்கேற்றார்கள்! மிக எளிய காட்சி ஜோடனை. முதல் காட்சியில் மேஜையும் சுவருமாக இருந்த பலகைகளை அடுத்த காட்சியில் வேறு மாதிரி புரட்டிப் போட்டு ஜோடித்து, அதனை ஒரு புதர் என நாம் பாவிக்கும்படி செய்கிற ஆற்றல் அந்த நடிப்புக்கு இருந்தது!

இந்த நாடகங்களின் இயக்குனர் ஆட்ரியன் ஹால் போன்றவர்களை விசிட்டிங் புரொபசராக வாவது பெற நாம் முயல்வது நல்லது. ஆனால் அதற்கு முன்பு இங்கு ஒரு நாடகக் கல்லூரி அல்லவா உருவாக வேண்டும்!

— குட்டி கிருஷ்ணன்



வேலைக்குப் போகும் பெண்


நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி


சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

13






இதே கண்ணோட நீ டி வி பார்த்தே, கண்ணே போயிடும்! எங்கண்ணு, போ— போயி ரெஸ்ட் எடுத்துங்க!
என்னம்மா இது, மதுரையை எரிச்சியா இல்லே மொளகாயை அரைச்சியா? கண் ஒரேயடியாச் செவந்திருக்கு!
எங்கடா ஜம்னு? அவ வந்த உடனே பக்கத்துத் தெரு கண் டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போயி, இவ கண்ணைக் காமிக் கச் சொல்லும்.
அத்தைய நான் டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போயிட்டா, அத்தையால டி வி எப்படி பார்க்க முடியும் மாமா?
ஆமா, டாக்டர் டிஸ்பென்சரி யிலயும் ஒரு டி வி வச்சிடச் சொல்லுவம். வெயிட் பண்ற நேரத்துல டி வி பார்க்க லாம். டாக்டருக்குக் கூட்டமும் வரும்!
இது ஒண்ணுமில் லேம்மா, மெட்ராஸ்-ஐ யாத்தான் இருக்கும்.
ஆமாடா, ஒரு கண் மெட்ராஸ்-ஐ, இன்னொரு கண் செங்கல்பட்டு-ஐ! நல்லவேளை, காது மூக்குக் கெல்லாம் ஒரு ஊரோட பேரும் வைக்கலே!
நீங்க வாங்க அத்தை. நாம்ப டாக்டர்கிட்ட போய் வந்துரலாம்.
ஐய்ய, எத்தனை பாடுபட்டு ஆசையா மருமக சம்பளத்துல டி வி வாங்கியிருக்கு இங் கண்ணு மேல யாரோ கண்ணு போட்டுட்டாங்க போலருக்கு அமிர்தம், உனக்கும் பாத்து அநுபவிக்கக் குடுத்து வைக்கலையே!
தொடரும்



சிறந்த ரகங்கள். சரியான விலை.

என்டெஸ்

அதிகாரப்பூர்வமான ஏஜெண்டுகள்: (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஜே அண்டு ஜே எண்டர்பிரைசஸ், 14/F1 அன்சாரி தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 9. செமி ஹோல் சேல் டிப்போக்கள்: சென்ட்ரல் டிஸ்டிரிபியூஷன் டிப்போ, C.S.&W. மில்ஸ் காம்பவுண்டு, கோயமுத்தூர் 1.



நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன்

(தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) லிமிடெட்
ஒரு மத்திய அரசு நிறுவனம்

10/64 சோமசுந்தரம் மில்ஸ் ரோடு, கோயம்புத்தூர்-641009.

செமிஹோல் சேல் டிப்போ, 208 தம்புச் செட்டி தெரு, சென்னை 1. என்டைடெக்ஸ் ஷோரூம், N.T.C. ஹவுஸ், கோயமுத்தூர் 9. என்டைடெக்ஸ் ஷோ ரூம், சரவண பவனம் பில்டிங், கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர் 12. என்டைடெக்ஸ் துணிகள் எல்லா என்டிசி ஷோரூம்களிலும் கிடைக்கும்.

துரியோதனன் பொறாமை



அஸ்தினாபுர நகரத்தை வருணித்தபாரதி, அதிலிருந்து சிறிது வேறுபட்டவகை, பாண்டவராட்சியின் தலைநகரான இந்திரப் பிரஸ்தத்தை வருணிக்கிறான்:

அண்ணன் திருதராஷ்டிரன் ஆணையின் படி தம்பி விதுரன் பாண்டவர்களை அஸ்தினாபுரத்துக்கு அழைக்க இந்திரப் பிரஸ்தம் செல்கிறான். அப்போது, இந்திரப் பிரஸ்தத்தின் அருமை பெருமைகளை யெல்லாம் சிந்தித்துக்கொண்டே விதுரன் வழி நடக்கிறான். அதை பாரதியின் வாக்கால் பார்ப்போம்:

அன்னங்கள் பொற்கமலத் தடத்தி னூர
அளிமுரலக் கிளிமழலை யரற்றக் கேட்போர்
கன்னங்க ளமுதூறக் குயில்கள் பாடும்
காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்
பொன்னங்க மணிமடவார் மாட மீது
புலவிசெயும் போழ்தினிலே போந்து வீச
வன்னங்கொள் வரைத்தோளார்மகிழ, மாதர்
மையல்விழி தோற்றுவிக்கும் வண்மைநாடு

பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு
பெண்களெலாம் அரம்பையர்போ லொளிரு
நாடு
வீரமொடு மெய்ஞ்ஞானந் தவங்கள் கல்வி
வேள்வியெனு மிவையெல்லாம் விளங்குநாடு
சோரமுதற் புன்மையெதுந் தோன்றா நாடு
தொல்லுலகின் முடிமணிபோல் தோன்று
நாடு.

இவ்வளவு அருமை பெருமைகளைக் கொண்ட இந்திரப் பிரஸ்தம் பாண்டவருக்கும், கௌரவருக்கும் மூளவிருக்கும் போரிலே அழியப் போகிறது என்பது மாமேதையான விதுரனின் சிந்தையில் படுகிறது. 'அந்த அழிவுக்குத் துணை புரியத் தானே நாம் இந்திரப் பிரஸ்தம் போகிறோம்' என்பதனையும் நினைத்து விதுரன் வேதனைப் படுகிறான். அதனை,

ம.பொ.சி.

''பாரதர் தந் நாட்டிலே நாச மெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை
என்னே?'' என்ற வரிகளிலேபாரதி கூறுகிறார்.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திலே முதல் காட்சியாக அமைந்திருப்பது, துரியோதனனின் அரசவையாகும். அந்த அவையிலே அரவக் கொடியோனான துரியோதனன் அரியணையில் வீற்றிருக்கிறான். அவனையும், பீஷ்மரையும், துரோணர், கிருபர், விதுரன், துரியோதனனின் 99 உடன் பிறப்புக்கள், சகுனி, கர்ணன், ஆகிய அனைவரையும் ஒருவர் பின் ஒருவராக அறிமுகப் படுத்துகிறார் பாரதி.

இந்திரப் பிரஸ்தத்தில் தருமன் நடத்திய ராஜசூய யாகத்துக்குத் துரியோதனன் சென்றிருந்தான். அவனுடன் சகுனியும் சென்றிருந்தான். அந்த யாகம் முடிந்து மாமனும் மருமகனும் அஸ்தினாபுரிக்குத் திரும்பிய பின் முதன் முதலாக அரசவை கூடியது. அதிலே துரியோதனன் அவையோரைப் பார்த்துச் சொற்பொழிவே நிகழ்த்துகிறான்.

ராஜசூய யாகத்தினால் சக்கரவர்த்தி ஸ்தானத்தை அடைந்த தருமனிடம் தனக்குண்டான பொறாமையைக் கொஞ்சமும் வெட்கமின்றி வெளிப்படுத்துகிறான்.

பாண்டவர் முடியுயர்த்தே — இந்தப்
பார்மிசை யுலவிடு நாள்வரை, நான்
ஆண்டதொ ரரசா மோ? — எனது
ஆண்மையும் புகழுமோர் பொருளாமோ?

என்று கூறி, பொறாமையால் புலம்புகிறான் அரவக் கொடியோன்.

''பாரத நாட்டிலுள் ளமுடிப்
பார்த்திபர் யார்க்கு மொர்
பதியென் றே
நாரதன் முதன்முத லோர் வந்து
நாட்டிடத் தருமனவ்
வேள்வி செய்தான்.''


என்று தனது சிற்றப்பன் மகனான தருமன் மாமன்னனானதற்குப் பொருமுகிறான்.

''ஆயிர முடிவேந் தர்—பதி
னாயிர மாயிரம் குறுநிலத் தார்
மாயிருந் திறைகொணர்ந் தே-அங்கு

வைத்ததோர் வரிசையை மறந்திடவோ!
கிழவியர் தபசியர் போல — பழங்
கிளிக்கதை படிப்பவன், பொறுமையென் றும்
பழமையின் முடிவென் றும் — சொலிப்
பதுங்கி நிற்போன், மறத் தன்மையி லான்
வழவழத் தருமனுக்கோ — இந்த
மாநில மன்னவர் தலைமை தந்தார்
எப்படிப் பொறுத்திடுவேன்? — இவன்
இளமையின் வளமைகள் அறியேனோ?''
என்றெல்லாம் கூறி, தருமனை வசை பாடுகின்றான்.

(மயிலை இலக்கிய வட்டம் பாரதீய வித்யா பவனச் சொற்பொழிவிலிருந்து)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran


AVM
AVM SOVEREIGN MARK
COCOANUT OIL
Nett 1 Kilo
AVM
பவுன் மார்க்
தேங்காய் எண்ணை
பரிசுத்தமானது! பிரசித்தமானது
சுவைமிக்க மொறு, மொறு உணவு படைக்கவும், கரு கரு கூந்தல் வளரவும் சிறந்தது AVM பவுன் மார்க் தேங்காய் எண்ணை. சுத்தமும், சுகாதாரமும் கொண்ட தயாரிப்பு.
16, 4, 1.5 கிலோ டின்களிலும், 1 கிலோ, 500 கிராம் அழகிய பிளாஸ்டிக் கேன்களிலும், கையடக்க பிளாஸ்டிக் பாட்டில்களிலும் கிடைக்கின்றன.
தயாரிப்பாளர்கள்:
AVM மாரிமுத்து நாடார் & சன்ஸ்
தூத்துக்குடி-628 001
ADWAVE AVM 1692

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

